
# புரட்சித் தலைவன் மா சே-துங் நடந்த புரட்சிப் பாதை



ச. கலியாணராமன்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE



# புரட்சித் தலைவன்

# மா சே - துங்

## நடந்த

# புரட்சிப் பாதை

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

ச. கலியாணராமன்

எழுஞாயிறு பதிப்பகம்
"வசந்தம்"
2-எப், டைவர்ஷன் ரோடு
பண்ணுருட்டி - 607 106
கடலூர் மாவட்டம்.

நூலின் பெயர் : புரட்சித் தலைவன் மாசே-துங் நடந்த புரட்சிப் பாதை

பொருள் : மாசே-துங் வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் : ச. கலியாணராமன்

பதிப்பு ஆண்டு : மறுபதிப்பு 1999

உரிமை : ஆசிரியர்க்கு

பக்கங்கள் : 128

விலை : ரூ. 28-00

வெளியிட்டோர் : வசந்தஜெயராம், பி.ஏ.,
"வசந்தம்", பண்ணுருட்டி.

அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
கீழரத வீதி: சிதம்பரம்
போன்: 23040, 23020

SEELAN BOOKS
..................
SIGNATURE
★ NORWAY ★

★★★ பொங்கும்
அறிவுத் தெளிவுடனும்
கொதிக்கும்
உணர்வுச் சுடருடனும்
துடிக்கும்
இளைய வேங்கைகளின்
ஊக்கமிக்க
உள்ளங்களுக்கும்
எதையும் தாங்கும்
இதயம் படைத்தவர்க்கும்
இரவலாய் அதனைப்
பெற்றவர்க்கும் ★★★

## பதிப்பக உரை

ஆய்வுடன் கூடிய இனிய நடையில் வடிக்கப் பெற்ற மாவோ நூற்றாண்டு விழா வெளியீடாக வந்த இந்நூலை மறுபதிப்பாக வெளியிடுவதில் மகிழ்கிறோம்.

புரட்சித் தலைவர் மாவோவின் கவிதையுள்ளம் உலகம் அறிந்தது. அவருடைய கவிதைகளில் சிலவற்றைத் தெளிவாக மொழிபெயர்த்து மறு பதிப்பில் ஆங்காங்கே இணைத்துள்ளார் ஆசிரியர்.

★ ★ ★

எங்கள் பதிப்பக வெளியீடாக அனுமதித்த ஆசிரியர்க்கும் அழகிய முறையில் அச்சிட்ட அச்சகத்தார்க்கும் நன்றி கூறுகிறோம்.

**வசந்த ஜெயராம்**

## இந்நூலைப் பற்றி...

**(முதல் பதிப்பில்)**

1921–ஆம் ஆண்டில் சீனாவில் பொதுவுடைமைக் கட்சி தோன்றி வேரூன்றியது. தென் கிழக்கு சுனான் பகுதியான சாலினில் 1927–முதல் 'சீன சோவியத்' (உழைப்பாளரின் சபை) உருவாயிற்று.

நான்கிங் பகுதியைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வந்த சியாங்கே–ஷேக் பொதுவுடைமைக் கட்சியினரையும் அவர் தம் ஆதரவாளரையும் வேட்டையாடிக் கொன்றழிப்பதே குறிக்கோளாகக் கொண்டார்.

பல்லாயிரக்கணக்கில் கொல்லப் பட்டாலும் இளைஞரும் மாணவரும் உழவரும் தொழிலாளரும் போர் வீரரும் பொதுவுடைமையரின் சிவப்புப் படையில் தியாக ஆர்வத் துடன் பல்லாயிரக்கணக்கில் சேர்ந்து கொண்டிருந்தனர்.

நூற்றுக் கணக்கான போர்க்களங்களையும் தடைகளையும் உடைத்தெறிந்து, பசி பட்டினி நோய்களைப் பொருட்

படுத்தாமல், பன்னிரண்டு மாநிலங்களைக் கடந்து 6000 மைல்கள் நெடும் பயணம் மேற்கொண்டு பல்லாயிரக் கணக்கான அரசாங்கப் பகைப் படைவீரர்களைப் புறங் கண்டு, வடமேற்குச் சீனாவை வெற்றி கண்ட புரட்சிப் படையாக விளங்கிற்று அந்தப் பெருமைக்குரிய வரலாற்றுப் புகழ்வாய்ந்த சிவப்புப் படை.

'சிவப்புக் கொள்ளைக்காரன்' என்று வருணிக்கப்பட்டு முதல் பகைவனாகக் குறிக்கப்பட்டு, உயிராகவோ உடலாகவோ பிடித்துத் தருவோர்க்குக் கால்மில்லியன் வெள்ளி டாலர்கள் பரிசளிப்பதாகச் சியாங்கே-ஷேக்கால் அறிவிக்கப் பெற் றிருந்த மாசே–துங்...

முன்பே இறந்து விட்டதாகவும் புரளி கிளப்பி விடப்பட் டிருந்த மாசே – துங்...

சிவப்புப் படையின் தலைமைத் தளபதி எனவும், தலைக்கு விலை குறிக்கப் பெற்றிருந்தவருமான சூ–டே...

இருபத்தெட்டே வயதானவரும் போர்த் தந்திரங்களில் புகழ்பெற்றவரும் தோல்வியே அறியாதவரும் சிவப்புப் படையின் முன்னணியாளருமான லின்பை யோ...

மேலும், பல்வேறு வீரப் புரட்சித் தலைவர்கள் அரசாங்கப் படைகளை வெற்றி கொண்டு சீனாவைச் சிவந்த மண்ணாக மாற்றி அமைப்பதில் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

புதிய போர்க் கருவிகள் இல்லாமல், தொழிற்சாலைகள் இல்லாமல், பீரங்கிகள் இல்லாமல், விமானங்கள் இல்லாமல், பணபலமில்லாமல், புதிய தொழில் நுட்பங்களும் வெளி நாட்டின் உதவிகளும் இல்லாமல் ஒன்பதாண்டுக் காலம் நான்கிங் வலிமை மிக்க தலைமையை அந்தச் சிவப்புப் படைகள் எதிர்த்துப் போராடி வந்தன.

வெளிநாட்டு வல்லரசுகளின் உதவியும் பணபலமும் படை பலமும் மிக்க சியாங்கே ஷேக்கின் பெருகிய வலிமை, சிவப்புப் படைகளின் உணர்ச்சி வேகத்திற்கு முன்னால் உண்மை சார்ந்த போராட்டத்திற்கு முன்னால் தோல்வி யுற்றது.

எண்பது விழுக்காடு மக்கள் விவசாயிகளாக – உழவுத் தொழிலை மட்டுமே நம்பியவர்களாக வாழ்ந்த சீனாவில் பொதுவுடைமைக் கொள்கை வெற்றி பெற்றது.

1936–ல் எட்கர் ஸ்நோ என்ற அமெரிக்கச் செய்தியாளர் சீனாவின் பல்வேறு பகுதிகளுக்கும் பல்வேறு இன்னல் களிடையே அஞ்சாமல் பயணம் செய்து சிவப்பாகிக் கொண்டிருந்த சீனாவை நேரில் கண்டார். புரட்சித் தலைவர்களைப் பேட்டி கண்டார். ஏழாண்டுகள் சீனாவின் வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் பயணம் செய்து குறிப்புகள் எழுதி 'சீனாவின் சிவப்பு நட்சத்திரம்' – (Red Star over China) எனும் நூலை வெளியிட்டு உண்மை சீனாவை உலகுக்கு உணர்த்தினார்.

எட்கர் ஸ்நோ மாசே–துங்கை அவருடைய போர் முனை வாழ்க்கையிலேயே நேரில் கண்டு, அவருடன் பல நாட்கள் தங்கியிருந்து பேட்டி கண்டார்.

மாசே–துங் தம்முடைய பிறப்பு முதல் குடும்ப நிலைமை யையும், கல்வியையும் எண்ணங்களின் வளர்ச்சியையும், போராட்ட உணர்வுகளையும், கிளர்ச்சிகளையும், சீனச் சமுதாயத்தையும், சிவப்புப் படைகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும்,போர்களையும் கொள்கைகளையும் விரிவாக அவரிடம் விளக்கிக் கூறினார்.

'நான்' என்றே குறிப்பிட்டு அவர் கூறியவற்றைப் பேட்டி யாகவே நூலில் வடித்துள்ளார் ஆசிரியர்.

ஆங்கிலத்தில் உள்ள அந்நூலின் மாசே-துங்கின் வரலாற்றினையும் அவர் கூறியவற்றையும் தமிழில் மொழியாக்கம் செய்து வரலாற்று இயலாக மாற்றி இந்நூலினை உருவாக்கியுள்ளேன்.

'நான்' என மாசே-துங் கூறியவற்றை 'அவர்' என மாற்றியுள்ளதைத் தவிர நான் புதிதாக எதனையும் படைக்கவில்லை.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் தத்துவவாதியான நண்பர் ம. கோ. மணி இந்நூலினைக் கொடுத்து மொழிபெயர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இப்பொழுது நிறைவேற்றுகிறேன். நன்றி அவர்க்கு.

மாசே-துங்கின் வாழ்க்கை சீனச் சிவப்பின் வரலாறாக அமைந்ததாகும். அவர் வேறு செஞ் சீனாவேறல்ல.

அதனை ஓரளவு விளக்க முயல்வதே இந்நூல். வழிநூல் இது. வழி நடத்தும் நூலாக அமையாது என நம்பலாம் தமிழர்க்கு.

இதைப் போன்ற நூல்-எட்கர் ஸ்நோவின் நூல், முன்பே தமிழில் வெளிவந்துள்ளதா என்பது தெரியவில்லை.

மகாபாரதக் கதைகள், இராமாயண இதிகாசப் புராணக் கதைகள் எத்தனையோ வகைகளில் இன்றளவும் வெளியிடப் படுகின்றன.

எனவே, மாசே-துங்கின் புரட்சி வரலாறு, சீனச் சிவப்பின் வீர வரலாறு மீண்டும் வருவதில் தவறில்லை.

அதே நூல் மீண்டும் வரலாம். வேறு ஒன்றும் இருக்கலாம். எத்தனை வந்தால்தான் என்ன... தமிழகத்தில்?

பணிவுடன்,

**ச. கலியாணராமன்.**

மாவோவின் கவிதை:

## சிங் காங்க் ஷான்

குன்றுகளின் அடிவாரங்களில் பட்டொளி வீசிப்
பறக்கின்றன நம்முடைய கொடிகளும் பதாகைகளும்.
குன்றுகளின் உச்சிமுகடுகளில் முழங்குகின்றன
நம்முடைய கொம்புஊது குழல்களும் முரசுகளும்!
வலிமையுடன் ஆயிரக்கணக்கில் நம்மைச்
சூழ்ந்துள்ளனர் பகைவர்.
நிலைபெயரா உறுதியுடன் காலூன்றி நிற்கின்றோம்
நாம் நம்முடைய மண்ணில்!
நம்முடைய படை முன்னமே இரும்புக் கவசம்
பூண்டுள்ளது.
இப்பொழுதோ நம்முடைய நெஞ்சு உறுதி
கற்கோட்டை போலக் கட்டுப்பாட்டுடன் திகழ்கின்றது.
ஃகுவான் ஜியாங்சீயிலிருந்து கர்ச்சிகிறது
இடி முழக்கமான துப்பாக்கிகள்.
இரவோடு இரவாக ஓடிவிட்டனர் பகைவர்
என்று வருகின்றது செய்தி!

— *இலையுதிர் காலம்* 1928

மாவோவின் கவிதை:

## பதினெட்டாம் வயது

வயதாகிப் போய்விடுகிறது மிகஎளிதாக மனிதனுக்கு.
இயற்கைக்கு அன்று;
பதினெட்டாம் வயது திரும்பவும் வருகிறது
ஆண்டுக்கு ஆண்டு.
இயற்கையின் இந்தப் பதினெட்டாம் வயதில்,
மஞ்சள்பூ பூத்துக் குலுங்கிப் போர்க்களத்தில்
மணம் கமழ்கின்றது.
இலையுதிர் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலும்
காற்று வீசுகின்றது வேகமாக.
இளவேனிற் காலத்தின் செழுமைபோல இல்லாமல்
இளவேனிலின் செழுமையும் தோல்வியுற
அளவற்றுப் பரந்துள்ள குளிர்மிக்க விண்ணையும்
தண்ணீரையும் கவனி!

— *அக்டோபர்* 1929

# 1

உலக வரலாற்றில் எந்த நாடும் செஞ்சீனாவைப் போன்ற குழப்பமான வரலாற்றைக் கொண்டிருக்கவில்லை.

உலகத்தின் எந்தச் சமுதாயமும் செஞ்சீனாவைப் போல மர்மங்கள் மறைவுச் செய்திகள் புதிர்களைக் கண்டதில்லை.

காரணம் யாதெனில், துணிந்து உண்மை உரைக்கும் வரலாற்று ஆசிரியர்கள் செஞ்சீனாவின் அகன்று விரிந்து பரந்த முழுத் தோற்றத்தைக் கண்டதில்லை. கண்டவர்கள் உலகத்தின் கண்களை மறைத்து விட முயன்றனர். அறிந்தவர்கள் பொய் உரைக்கத் துணிந்தனர். பொதுவுடைமைக் கருத்துகள் உலகின் வேறு பகுதிகளுக்குப் பரவவிடாமல் பாதுகாக்க முற்பட்டனர். பொதுவுடைமைப் புரட்சிப் பாதையை மூடிவிடத் துடித்தனர். விளைவு செஞ்சீனப் புரட்சிகள், அவற்றின் முறைகள், விளைந்த வெற்றிகள் வெளிநாடுகளில் விதைக்கப் பெறாமல் பொய்க் கிடங்குகளில் பூட்டப் பெற்றன.

செஞ்சீனத்தைப் பற்றிய எண்ணற்ற கேள்விகள் விடையிறுக்கப் பெறாமலே வெற்றிடங்களாக விடப்பெற்றன.

எனவே, வெளியுலகம் உண்மை ஒளி கிடைக்கப் பெறாமலே பொய்மை இருளில் மூழ்கிற்று.

மிகப் பெரியதொரு பரந்த நாட்டில் அரங்கேறிய புரட்சி வரலாறு உலகத்தின் எந்த இருண்ட மூலைக்கும் பரவியிருக்க வேண்டும். எந்த மனிதனுக்கும் எந்த நிலையிலும் எட்டியிருக்க வேண்டும். எந்த வீட்டின் அடுப் படியிலும் பேசப் பட்டிருக்க வேண்டும். எந்தத் திண்ணை யிலும் அவல மனிதர்களின் கால்கை முளைத்த கதையாகி யிருக்க வேண்டும்.

---

ஆனால், இல்லை.

ஏன்?

ஒரு பெரிய விவசாய நாடு புரட்சிப் பாதைக்குச் சென்றது எவ்வாறு? பொதுவுடைமையைத் தழுவியது எப்படி?

புரட்சியாளர்களின் குறிக்கோள் யாது? புரட்சிப் படைகளின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

உண்மையில் புரட்சி என்பதின் பொருள்தான் யாது?

கால ஓட்டத்தில் சில சொற்கள் அவற்றின் உண்மைப் பொருளை இழக்கக் கூடும்; பொருளின் வலிமை தேய்ந்து விடக் கூடும்; தவறான பொருள் புகுத்தப்படக் கூடும்; பொருள் இழந்து வேறு பொருள் தொத்திக் கொள்ளக் கூடும்.

ஆனால், தமிழில் 'புரட்சி' எனும் சொல் பொருள் இழந்து, அதனுடைய உயர்ந்த தன்மை இழந்து, 'மாந்தர் நிலையின் இழிந்த கடை', எனும் கடைநிலைக்குத் தள்ளப் பெற்று, வெற்று விளம்பரச் சொல்லாக, ஆடம்பர அலங்கார அர்த்த மற்ற முழக்கமாக மாற்றப்பட்டு விட்டது.

தொடர்பற்றவர்களுடன் கொண்டு கூட்டப்பட்டது. தகுதியற்றவர்களின் தலைகளில் முடிசூட்டப்பட்டது.

ஆயினும் தமிழில் வேறு சிறந்த மாற்றுச் சொல் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் இழிந்துபட்ட அதே சொல்லுக்கு உயர்நிலையைக் கற்பித்து உண்மைப் பொருளை ஊட்டி மறுமலர்ச்சியாக்கிப் 'புரட்சி' என்றே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

பொதிகைத் தென்றலில் பூத்துக் குலுங்கும் புன்னகை அன்று அது. தீ — புயல் — நிலநடுக்கம்... அதன் பின்னர் உருவாகும் பூந்தோட்டம்.

செஞ்சீனாவின் புரட்சிக்கு உரியவராகத் திகழ்ந்தவர்கள் யார்?

புரட்சி விதைகளைத் தூவி புதியதோர் உலகம் செய்தவர்கள் யார்?

செஞ்சீனாவை அவர்கள் படைத்து காத்த வரலாறு என்ன?

1936 —

செழிப்பும் வளமையும் தோட்டங்களின் பசுமையும் அரண்மனைகளின் கொண்டாட்ட விழாக்களும் நிறைந்த சீனாவில் பசியும் பட்டினியும் வறுமையும் புரட்சியும் வெளி நாட்டினர் படையெடுப்பு வன்முறைகளும் மக்களை அல்லல்படுத்தும் என்பதை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

ஆயினும், போராட்டங்கள் வெடித்தன.

ஜப்பான் படைகளின் நுழைவு சீன மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே போராட்டங்களைத்

தூண்டிற்று. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஜப்பானை எதிர்த்து முழக்கமிட்டனர்:

"ஜப்பானை முறியடிப்போம்! தடுத்து நிறுத்துவோம் ஜப்பானை! தெற்குச் சீனாவிலிருந்து வடக்குச் சீனாவைப் பிரிக்க முயலும் ஜப்பானின் ஏகாதிபத்தியத்தைப் புறங்காண்போம்!"

பகைவர்க்கு எதிர்ப்பான முழக்கங்களும் போராட்டங்களும் சீன இளைஞர்களைச் சீற்றத்துடன் முன்னேறச் செய்தன.

அதனை அடக்கி ஒடுக்கிவிட முயன்றார் சியாங் கே-ஷேக்.

ஆனால், நாட்டுப் பற்று மிக்க சீன இளைஞர்களும் சீனச் சிவப்புப் படையினரும் ஜப்பானுக்கு எதிரான போரில் ஈடுபட்டனர். இழந்த நாட்டின் பகுதிகளை மீட்டிடத் துடித்தனர்.

சியாங் கே-ஷேக்கின் வலிமையான படைகளோ இளைஞர்களையும் மாணவர்களையும் சிறையில் அடைத்தது. பலரைக் கொன்றழித்தது.

'உள் நாட்டுப் போரை நிறுத்து! ஜப்பானை முறியடிக்க பொதுவுடைமைக் கட்சிக்கு ஒத்துழைப்பு கொடு! சீனத்தைக் காப்பாற்று!' என்ற தடை செய்யப்பட்ட முழக்கங்களுடன் எத்தகைய தியாகங்களுக்கும் அஞ்சாத இளைஞர்கள் முன்னணியில் நின்றனர்.

இவ்வாறான போராட்டங்களுக்கு முன்பே, சீனாவின் பண்டைய நாகரிகங்கள் மேலோங்கியிருந்த ஷென்சி, கன்சு, நின்கிசியா ஆகிய பகுதிகளைப் பொதுவுடைமைக்கட்சியினர் கைப்பற்றியிருந்தனர். மஞ்சள் நதியோரத்துப் பாதுகாப்புப் பகுதிகளாக அவை விளங்கின.

பொதுவுடைமைக் கட்சியினரைக் கொள்ளைக்காரர்கள் எனவும், கொலைகாரர்கள் எனவும், வழிப்பறிசெய்வோர் எனவும் பொதுமக்களிடையே அச்சுறுத்தப்பட்டிருந்த நாட்கள் அவை.

அவ்வாறுதான் அவர்கள் கூறப்படவேண்டும் எனவும் செய்தியாளர்களுக்கு அறிவுறுத்தப் பெற்றிருந்தது. புரட்சி யாளர்கள் என்றோ, புதிய சிந்தனையாளர்கள் என்றோ, பொதுவுடைமை வாதிகள் என்றோ அவர்களைக் கூறினால் செய்தியாளர்களே புரட்சியாளர்கள் எனக் குற்றம் சுமத்தப் பெற்றார்கள்.

ஆனால், ஷெச்சுவான் என்னும் மாநிலப்பகுதியில் மக்கள் பொதுவுடைமைக் கட்சியினர்க்கு அஞ்சுவதில்லை. கொள்ளைக்காரர்கள் எனவும் அவர்களைக் கூறுவதில்லை.

உண்மையில் செல்வர்களும், சுரண்டல்காரர்களும், நிலப்பிரபுக்களும், அரசாங்க அதிகாரிகளும், வரிவசூலிப் போருமே பொதுவுடைமை வாதிகளைக் கண்டு அஞ்சினர். ஏழை உழவர்ப் பெருங்குடி மக்களோ அவர்களுக்கு வரவேற்பு அளித்து நட்பு கொண்டாடினர்.

அதற்குக் காரணம் இருந்தது. ஷெச்சுவான் பகுதியில் கடும்வட்டி வாங்கியோரையும், அபினி பழக்கத்தையும் பொதுவுடைமை வாதிகள் அடியோடு ஒழித்து விட்டனர். நிலங்களை நிலமற்றோர்க்குப் பகிர்ந்து கொடுத்திருந்தனர். எனவே, அவர்கள் கொள்ளையர்கள் அல்லர் என்ற தெளிவு உழவர்களிடையே ஏற்பட்டிருந்தது. அவர்களுக்கும் சட்ட திட்டங்கள் உண்டு எனத் தெரிந்திருந்தனர்.

சீன வரலாற்றில் நாட்டுப் பற்று உடையோரும், ஏழை களிடம் இரக்கச்சிந்தை கொண்டோரும் ஏழைகளுக்காகப் பாடுபட்டோரும் உடல் வலிமை மிக்கோரும் வழிப்பறிக்

கொள்ளையர்கள் என்றே வருணிக்கப் பெற்றுள்ளனர். பொதுவுடைமை வாதிகள் கொள்ளையர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பட்டனர்.

நூற்றுக் கணக்கில் பொதுவுடைமை வாதிகள் சிறைகளில் அடைக்கப் பெற்றனர். அவர்களை அழித்து ஒழிப்பதே தம்முடைய தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தார் சியாங்கேஷேக்.

ஜப்பானின் ஆதிக்கத்தையும் படையெடுப்பையும் தடுத்து நிறுத்த முடியாத அவர், தம்முடைய பெரிய நாட்டுக்குள் ஜப்பானுக்கு எதிராகப் போராடிய பொதுவுடைமையாளர் களை அழித்தொழிப்பதில் ஆர்வம் காட்டினார்.

ஆனால், பொதுவுடைமைக் கட்சியினர் சீனத்தின் பல்வேறு பகுதிகளில் வெற்றி பெற்றுக் குறுநில மன்னர்கள் போலத் தம்முடைய ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டி ருந்தனர். அவர்களை வளரவிடாமல் கட்டுப்படுத்தி வைப்பதே தலைமைத் தளபதியான சியாங்கே – ஷேக்கின் ஒய்வற்ற வேலையாக இருந்தது.

எனினும், சியாங்கே – ஷேக்கை எதிர்ப்பதை விட ஜப்பானை எதிர்ப்பதிலும் ஒருங்கிணைந்த சீனத்தை உருவாக்குவதிலும் மக்களை அடிமை பழக்கத்திலிருந்தும் செல்வந்தர்களின் கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றுவதே கடமையாகக் கொண்டிருந்தனர் பொதுவுடைமை வாதிகள். அவர்கள் உள்நாட்டுப் போராட்டங்களையும் போர் களையும் நிறுத்திவிட்டு ஒற்றுமையாய் ஒரே அணியில் நின்று ஜப்பானை நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருந்தனர். அக்குறிக்கோள் தன்னலமற்றதாகவும் தூய்மையானதாகவும் வஞ்சகத் தன்மையற்றும் விளங்கிற்று.

அந்தக் கால கட்டத்தில் சூ-என்-லாய் வடக்கு ஷென்சிப் பகுதியில் யேனாலில் ஒரு சிவப்புப் படையின் தலைமைப் பதவியில் இருந்தார்.

அவருடைய ஒத்துழைப்புடன் அரசாங்கப் படையுடன் சேர்ந்து ஜப்பானின் மஞ்சூரியா ஆதிக்கத்தை எதிர்க்கப் போர்ப் பயிற்சி அளிக்கப் பெற்றது.

நூற்றுக் கணக்கான தன்னல மற்ற மாணவர்கள் படைகளில் சேர்ந்தனர். எல்லாம் மிக இரகசியமாகச் செயல்படுத்தப்பட்டன. சிவப்புப் படையைச் சார்ந்தவர்கள் அரசாங்கப் படையின் சீருடைகளையே அணிந்து அவர் களுடன் இரண்டறக் கலந்து விட்டனர். இதயங்களில் பொதுவுடைமைக் கருத்துகளைப் பதித்துக் கொண்டு அரசங்கப் ப்டையின் சீருடைகளில் தங்களை மறைத்துக் கொண்டு பொது எதிரியைச் சந்திக்க ஆயத்தமாயினர். அவர்கள் சிவப்புப் படையினரா சியாங்கே-ஷேக்கின் படையினரா என்பதைப் பிரித்தறிய முடியாது.

பொதுவுடைமைக் கொள்ளைக்காரன் என்று வருணிக்கப் பெற்று ஐம்பதாயிரம் டாலர் தலைக்கு விலை வைக்கப் பட்டிருந்தார், சிவப்புப் படையின் அரசியல் பாதுகாப்புப் பிரிவின் தளபதியான டெங்-பா. அவரே பகைவரான அரசாங்கப் படையின் பாடி வீட்டில் பகை நடுவிலேயே அரசாங்கச் சீருடையில் மறைந்திருந்தார். தலைக்கு விலை வைக்கப் பெற்றிருந்த டெங்-பா தங்களிடையே இருப்பதையும் தங்களுடனேயே சேர்ந்து உண்பதையும், உறங்குவதையும் போர்ப் பயிற்சி பெறுவதையும் அரசாங்கப் படையில் எவருமே அறியாமல் இருந்தனர்.

டெங்-பாவிடம் சிறந்த குதிரை இருந்தது. அவருடைய மனைவி சோவியத் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்தார். தொழிலாளிக் குடும்பத்தில் தோன்றிய டெங்-பா

ஹாங்காங் கப்பலில் சமையல்காரராக வேலை பார்த்தார். ஹாங்காங்கின் கப்பல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தலைமை தாங்கி நடத்தியபொழுது ஆங்கிலேயக் காவலரால் தாக்கப்பட்டு விலா எலும்புகள் முறிந்தன அவருக்கு. அதன் பிறகு அவர் பொதுவுடைமைக் கொள்கைக்கு மாறி தேசியப் புரட்சியில் பங்கு கொண்டு 1927–ல் கியாங்சையில் சிவப்புப் படையில் சேர்ந்து கொண்டார்.

டெங்-பாவைப் போன்ற புரட்சியாளர்களைக் கொண்டது தான் அன்றைய சிவப்புப் படை. புரட்சி எனும் சொல்லின் உண்மையான பொருளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள் அவர்கள்,

## 2

இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சின்ஷீகுவாங்டீ என்ற பேரரசர் சீனா முழுவதையும் ஒரே அரசின் கீழ் இணைத்து ஆட்சி செய்தார். பழங்காலக் கோட்டைகள் எல்லைச் சுவர்கள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து இன்றைக்கு வியப்புக்கு உரிய பெரிய மதிலைச் சீனாவில் உருவாக்கினார்.

பொதுவுடைமைக் கட்சியினர் அந்த மதிலையும் பெரிய ஆறுகளையும் எல்லைகளாகக் கொண்டு சீனாவின் பல்வேறு பகுதிகளைச் சிறுசிறு தீவுகள் போலத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தனர். வெளியில் இருந்த பொது வுடைமைப் பகைவர்களும் பொது மக்களும் அந்தப் பகுதி களைக் கொள்ளைக் கூட்டத்தாரின் கூடாரங்கள் எனவும் தடை செய்யப்பட்ட ஊர்கள் எனவும் கூறினர். அத்தகைய ஊர்கள் மிகவும் பாதுகாப்புடன் இருந்தன. பொது

வுடைமையின் பகைவர்கள் எளிதில் நெருங்க முடியாதவை. வெளியாட்கள் சோதனைகளுக்குப் பிறகு, பல்வேறு கேள்விகளுக்கு விடையளித்த பிறகு ஊருக்குள் செல்ல அனுமதிக்கப் பெற்றனர். சோவியத் நாணயமே அப்பகுதிகளுக்குள் மதிக்கப் பெற்றது. சீன நாணயமோ டாலர்களோ அங்கே ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. அதனால் நாணயங்கள் மாற்றிக் கொள்ள வசதி செய்யப்பட்டிருந்தது.

'எங்கள் தசையைத் தின்னும் நிலப் பிரபுகள் ஒழிக!'
'எங்கள் குருதியைக் குடிக்கும் படைவீரர்கள் ஒழிக!'
'ஜப்பானுக்குச் சீனாவை விற்கும் தேசத் துரோகிகள் ஒழிக!'
'ஜப்பானியர் படையை எதிர்க்கும் கூட்டுப் படையை வரவேற்போம்!'
'சீனப்புரட்சி வாழ்க!'
'சீனச் சிவப்புப் படை வாழ்க!'

என்ற முழக்கங்கள் பொதுவுடைமைப் பகுதிகளில் முழங்கியதோடு அல்லாமல் பெரிய எழுத்துகளில் ஒளிர்ந்தன.

ஏழை மக்களின் சங்கங்களும், விவசாயச் சங்கங்களும் அப்பகுதிகளின் சிறிய ஊர்களில் கூட இயங்கின. நிலப் பிரபுக்களை விவசாயிகள் போரிட்டு அழித்துச் சிவப்புப் படையின் கீழ் ஊர்ச்சங்கங்களை அமைத்திருந்தனர். அவ்வாறு ஓடிவிட்ட நிலப்பிரபுக்கள் பெரிய நகரங்களில் குடியேறிச் சிவப்புப் படைகளுக்கு எதிரான போர்களில் ஈடுபட்டனர். அவர்கள் விவசாயிகளைக் கொன்றனர். கிராமங்களை கொள்ளையடித்தனர். வெளியிடப் பெறாத உள்நாட்டுப் போர்கள் அவை.

அவ்வாறான சிவப்புப் பகுதிகளில் ஒன்றாக இருந்தது ஆன்-ட்செய் என்ற ஊர். நட்சத்திரச் சின்னம் உள்ள

சீருடை அணிந்த இளைஞர்கள் குதிரைகளில் ஏறி ஊரைப் பாதுகாத்தனர். பகைவரை வென்று தங்களுக்கு வேண்டிய பல்லாயிரக் கணக்கான குதிரைகளையும் போர்க் கருவி களையும் அவர்கள் கைப்பற்றியிருந்தனர். ஊர்களுக்குள் பள்ளிக்கூடங்களை நடத்தினர். பள்ளிக்கூடச் சிறுவர்களும் பகைவரிடமிருந்து ஊரைக் காப்பாற்றும் உணர்ச்சிப் பிழம்பாகத் திகழ்ந்தனர்.

அந்த ஆன்-ட்செய் ஊரில் கரிய தாடியுடனும் எளிமையான தோற்றத்துடனும் சூ-என்-லாய் சிவப்புப் படைத் தளபதியாக விளங்கினார்.

ஊரின் சிறுவர்கள் சிவப்புக் குல்லாய் அணிந்து நீண்ட அங்கிகளுடன் சிவப்புப்படையினர்க்குத் தொண்டு செய்தனர் அவர்களைப் பணியாளர்கள் என அழைத்தல் கூடாது. அங்கு எல்லாருமே 'தோழர்கள்' வருங்காலப் போர் வீரர்கள்; முன்னணிப் படையினர். அவர்கள் வீரம் செறிந்தவர்கள்; தன்னம்பிக்கை மிகுந்தவர்கள். வலிய சென்று சிவப்புப் படையினர்க்கு உதவும் கைகள்; உண்மை நிறைந்த புரட்சியாளர்கள். லெனினின் மக்கள் அவர்கள்.

குண்டுகள் துளைக்கப் பெறாத குடியிருப்பில் மிகுந்த பாதுகாப்புடன், சுற்றிலும் விவசாயிகள் தங்கள் உழவுத் தொழிலை அக்கறையுடன் மேற்கொண்டிருந்த சூழ்நிலையில் சூ-என்-லாய் இருந்தார். சியாங்கே-ஷேக் அவருடைய தலைக்கு எண்பதாயிரம் டாலர் விலை வைத்திருந்த போதிலும் அவருடைய குடியிருப்புக்கு முன்னால் ஒரே ஒரு காவலன் மட்டுமே இருந்தான். சுற்றுப்புற மக்களின் மீது அவ்வளவு நம்பிக்கை.

அவருடைய அறை தூய்மையானதாகவும் எளிமை யானதாகவும் கொசுவலையைத் தவிர வேறு விலையுயர்ந்த பொருள் எதுவும் இல்லாததாகவும் விளங்கிற்று.

ஆனால், நாட்டின் எந்த மூலையிலும் நடைபெற்ற செய்திகள் சிவப்புப் படைத் தளபதிகளுக்கு வியக்கத் தக்க அளவுக்கு கிடைத்துக் கொண்டிருந்தன. புலனாய்வுத் துறையும், துப்பறியும் துறையும், ஒற்றர் துறையும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டன. அதற்கு வேண்டிய வானொலிக் கருவிகளைப் பகைவரிடமிருந்தே அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். வானொலித் துறை பொறியாளர்களாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது.

சூ–என்–லாய் இருந்த இடத்திலிருந்து மூன்று நாளின் குதிரைப் பயணத்தில் இருந்த பவ்ஆன் பகுதியில் புகழ் பெற்ற புரட்சித் தலைவர் மா சே–துங்கும் மற்ற தலைவர் களும் இருந்தனர். அவர்களுடன் வானொலித் தொடர்பு சூ–என்–லாய்க்கு இருந்தது.

சூ–என்–லாய் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். அவருடைய அறிவுடைமை செயற்பாடுடையது. ஆற்றல் மிகுந்தது. தூய்மையும் உண்மையும் கொண்டது.

அவருடைய தந்தைக்குத் தந்தை மஞ்சூ அரசில் உயர் அதிகாரியாக இருந்தவர். தந்தை அறிவாற்றல் மிக்க ஆசிரியர். தாய் புதுமை இலக்கியங்கள் கற்றவர். சூ–என்–லாயும் இலக்கிய மேதையாக விரும்பினார். ஆனால், அவருடைய காலத்து அறிவுவிரும்பிகள் போலவே புரட்சிப் பாதைக்குத் திரும்பி விட்டார். சமுதாயச் சீர்திருத்தங் களுக்காக உழைப்பதில் ஆர்வம் செலுத்தினார். படித்த காலத்தில் ஆங்கில அறிவும் படிப்பில் மேன்பாடும் கொண்டு உதவித் தொகை பெற்று நான்கை பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவராக விளங்கினார். ஜப்பானை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் மாணவர் தலைவராகப் போராட்டத்தில் ஈடுபட்டார் சூ. சிறைத் தண்டனைப் பெற்று டைன்ட்சின் சிறையில் ஓராண்டுக் காலம் இருந்தார்.

அவரைப் போன்ற இளம் வீரர்களும் அவருடன் அடைக்கப் பெற்றிருந்தனர். அவர்களுள் டைன்ட்சின் கல்லூரியின் வீர மிகுந்த மாணவி ஒருவரும் சிறைப்பட்டிருந்தார். சூவின் உற்ற தோழராகவும் காதல் மனைவியாகவும் பிற்காலத்தில் விளங்கினார் அந்த மாணவி. உண்மைப் புரட்சியாளர்களின் காதல் வாழ்க்கையும் போர்க்களங்களில் சிறைக் கூடங்களில் புலியைப் போல மறைந்து பதுங்கியிருக்கும் காடுகளிலுமே அரும்பி முகிழ்த்தது.

விடுதலை செய்யப் பெற்ற சூ பிரான்சு நாட்டுக்குச் சென்றார். சீனப் பொதுவுடைமைக் கட்சியினைப் பாரீஸ் நகரில் தொடங்குவதற்கு உதவியாகச் செயல்பட்டார். ஈராண்டுகள் பாரீஸில் படித்த பிறகு சில திங்கள் இங்கிலாந்தில் பயின்ற பிறகு மீண்டும் பிரான்சுக்குத் திரும்பினார். ஜெர்மனியில் ஓராண்டு கல்வி கற்றார். [தமிழகத்தில் மலிந்து கிடக்கும் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் சில ஆண்டுகள் படித்து விட்டதால் மட்டுமே அறிவாளர் எனவும் புரட்சியாளர் எனவும் கருதிவிடும் மனப்பான்மை உள்ள தமிழர்க்குச் சூவின் கல்வியை நம்புவதே கடினம்]

1924–ல் சூ சீனத்திற்குத் திரும்பிய பொழுது புரட்சி அமைப்பாளராக அவர் புகழ் பெற்றிருந்தார். அப்பொழுது சீனத் தேசியப் புரட்சிக்கு சன்யாட்சென் சீனப் பொது வுடைமைக் கட்சியுடனும் சோவியத் ருஷியாவின் உதவி யுடனும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். கேன்டான் பகுதியில் அவருடன் சேர்ந்தார் சூ.

சூவின் இருபத்தாறாவது வயது. கேண்டான் அரசியலின் தலைமை வகிக்கும் நிலைமைக்கு உயர்ந்திருந்தார் அவர். பல்வேறு பதவிகளில் சிறந்து விளங்கினார். சோவியத் ருஷியாவின் தொலைகிழக்குச் சிவப்புப் படையின் தளபதியாகவும் ருஷிய அறிவுரையாளராகவும் பதவி பெற்றார்.

படைப் பயிற்சி பெற்றிராத சூ. 1925, 1926, 1927-ஆம் ஆண்டுகளில் சில தலைமைப் பொறுப்புகளினால் அனுபவக் கல்வி பயின்றார்.

வெளிநாட்டுப் படையெடுப்பை எதிர்த்தும் அந்நிய ஆட்சியை எதிர்த்தும் பொதுவுடைமைக் கட்சியினர் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்களைத் தூண்டினர். 6,00,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து நாட்டை விடுவிக்கப் போராடினர். 50,000 மறியல்கள் நடைபெற்றன. 2000 படை வீரர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப் பெற்றது. அவ்வாறு ஷாங்கை மாநிலம் மீட்கப் பட்டது. ஆனால், பொதுவுடைமைக் கட்சியின் வெற்றியைத் தம்முடைய வெற்றியாக்கிக் கொண்டு தம்முடைய ஆட்சியை நிலைநிறுத்த முயன்றார் சியாங்-கே-ஷேக். பொதுவுடைமைத் தலைவர்கள் பலரைச் சிறைப்பிடித்து நான்கிங் சிறையில் அடைத்தார். பலருடைய தலைக்கு விலை வைத்தார். சூ தப்பிப் பிழைத்தார். 5000-க்கு மேற்பட்ட பொதுவுடைமைக் கட்சியினர் கொலை செய்யப்பட்டனர். சூவின் நெருங்கிய நண்பர்கள் சிலரும் கொலை செய்யப் பட்டனர்.

சியாங்-கே-ஷேக்கின் படைகள் பல்வேறு பகுதிகளில் பொதுவுடைமை வாதிகளை அழித்தொழிப்பதில் முனைந் திருந்தன. 1931 வரையில் சூ தலைமறைவாக இருக்க நேரிட்டது.

கேண்டோனிலிருந்து சோவியத் பகுதிகளான கியான்க்சி, பூக்கியன் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டார் சூ. அங்கே சிவப்புப் படைத் தளபதியாக இருந்த சூ. டேக்கு அரசியல் அறிவுரையாளராகப் பணியாற்றினார். அதன் பிறகு புரட்சிப் படைக் குழுவின் துணை அதிபராகப் பதவி பெற்றார். அப்பொழுது நாட்டின் தெற்குப் பகுதியில் ஓய்வற்ற போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சியாங்-கே-ஷேக்கின் படைகள் பொதுவுடைமை வாதிகளைக் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் என்று ஒன்பதாண்டுகளாகப் பிரசாரம் செய்து வந்தனர். ஆனாலும் சிவப்புப் படையினர் தங்களுடைய நிலையை இழக்கவில்லை. சூ எளிமையும் இனிமையும் பெண்தன்மை மிகுந்தவராகவும் காணப்பட்டார். கடமை உணர்வுடன் கட்டுப்பாட்டுடன் கண்ணியத்துடன் சிவப்புப் படையினர் செயல்பட்டனர். மோப்ப நாய்கள், குதிரைகள், ஒட்டகங்கள், கைத்துப்பாக்கிகள், சிறிய பீரங்கிகளைக் கொண்டும் பகைவரிடமிருந்து கைப்பற்றிய கருவிகளைக் கொண்டும் சிறப்புமிக்க போர்க்களங்களை வெற்றி கண்டனர். போரின் முன்னணிப் படையில் பங்கு பெற்று வீரச் செயல்கள் புரிவதில் துடிப்புடன் விளங்கினர்.

தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை அடியோடு தொலைத்துவிட்ட அவர்கள் தோழமை உணர்வுடன் உயரிய இலட்சிய நோக்கோடு படைகளில் பணி புரிந்தனர். இன்னல்களையும் துயரங்களையும் பொதுவில் பகிர்ந்து கொண்டனர். எனவே, பொதுவுடைமைக் கருத்துகள் அவர் தம் குருதியோடு கலந்து உச்சநிலை மனிதத் தன்மையை அவர்கள் அடைந்திருந்தனர்.

பல்லாயிரக் கணக்கில் விவசாயத் தொழிலாளர்களும் மாணவர்களும் இளைய சிவப்புப் படையினரும் கொல்லப்பட்டாலும் நிலை குலையாத நெஞ்சுறுதியுடன் கொள்கை வழி நின்றனர். அதற்கான பயிற்சி பெற்றிருந்தனர். செத்தவரை எழுப்பிப் போரிடச் செய்யும் ஆற்றல் மிகு பேச்சாளரும் சிவப்புப் படையில் இருந்தனர். காலணிகள் சீருடைகள் இல்லாவிடினும், பசி பட்டினியுடன் படை நடத்த வேண்டியிருப்பினும் அஞ்சாத நெஞ்சம் கொண்டவராய்ச் சிவப்புப் படையினர் விளங்கினர்.

சிவப்புப் படையின் தளபதிகளின் அன்பு மனைவியரும் வீரம் செறிந்தவர்கள். போர்க்களங்களில் பணி புரிவதில் முனைந்திருப்பவர்கள்.

சீனத்தின் வட ஷென்சி மாநிலம் மிகவும் வறுமை நிறைந்தது. நிலம் மிகுந்தது, ஆனால் வளம் குறைந்தது. நூறு 'மா' நிலம் கொண்ட விவசாயியாக இருந்தாலும் அவன் ஏழையாகவே இருப்பான். நூற்றுக்கணக்கான 'மா' நிலம் உடையவனே நிலப்பிரபுவாக இருப்பான். அரிசியும் வேறு தானியங்களும் விளையக் கூடிய நிலமும் அவனிடம் இருக்க வேண்டும். மலைகளும் குன்றுகளும் அப்பகுதிகளில் சூழ்ந்திருந்தன.

பத்து, இருபது வயது சிறுவர்கள் அப்பகுதிகளில் சிவப்புப் படையில் சேர்ந்திருந்தனர். இவர்களைப் பெரும்பாலும் கொண்ட படையே சீனாவின் புகழ்மிக்க 6000 மைல் நெடும் பயணச் சிவப்புப் படையாக விளங்கிற்று. இருபத்தையாயிரம் மைல்கள் நடக்கவும் அவர் கள் தயாராக இருந்தனர். இந்த உண்மையை வரலாற்று ஆசிரியர்கள் பலர் நம்புவதே இல்லை.

சிவப்புப் படையில் சேர்ந்தவர்களுக்குக் கல்வி அளிக்கப் பட்டது. வானொலிக் கருவிகளை இயக்கவும் துப்பாக்கி சுடவும் கற்பிக்கப் பட்டது. ஏழை எளியவர்க்கு உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் அவர்கள்.

பொதுவுடைமைக் கட்சியினர் ஆட்சி பெறாத மாநிலங் களில் விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்கு அடிமைகளாக அல்லலுற்றனர். அந்நியரான ஜப்பானியர்க்கு அடங்கி நடந்தனர். சீனாவைக் காப்பாற்றும் எண்ணம் அங்கே இல்லை.

சிவப்புப் படையினர் பலர் படையிலேயே படித்துப் பட்டம் பெற்றனர். கிராமக் கலாச்சார நாடகங்களை

நடத்தி மக்களுக்கு அறிவும் உணர்வும் ஊட்டினர் சிலர். நாட்டுப்புறப் பாடல்களைக் கற்று ஊர்களில் பாடினர். அவர்கள் கட்டுப்பாடு மிக்கவர்கள். தவறான பாதையில் செல்லாதவர்கள். ஏழை எளிய மக்கள் அவர்களை மதித்தனர். நம்பினர். கிராமங்களில் சிவப்புப் படையினர் எதையும் விலை கொடுத்தே வாங்கினர். இலவசமாகப் பெறுவதோ, வன்முறையில் எடுத்துக் கொள்வதோ இல்லை. பொதுமக்கள் அவர்களை மரியாதையுடன் நடத்தினர்.

சிவப்புப் படையின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பள்ளிக் குழந்தைகள் கூட முதலாளி ஆதிக்கத்தைப் பற்றியும் பொதுவுடைமை பற்றியும் நாட்டின் விடுதலை பற்றியும் அறிந்திருந்தனர். பொதுவுடைமைப் பாதையில் நாட்டை முன்னேற்ற வேண்டும் எனக் கூறினர்.

வடமேற்கில் ஏராளமான சிற்றூர்கள் இருந்தன. நகரங்கள் மிகக் குறைவு. ஆங்காங்கே சிவப்புப் படையினர் தொடங்கிய தொழிற்சாலைகள் மட்டுமே. மற்ற அனைத்தும் விவசாயமே. அங்கே, பவ்-ஆன் சிறு கோட்டைகளும் குன்றுகளும் உள்ள சிறிய நகரம். பத்தாண்டுகளாகச் சியாங்கே-ஷேக்கின் படைகள் போரிட்டு வந்த 'சீனாவின் மக்கள் சோவியத் குடியரசி'ன் தலைவரான மாசே-துங் அங்கே இருந்தார்.

சராசரி சீனர்களை விடச் சிறிது உயரமானவர் அவர். கருமையான நீண்ட தலைமயிர். உற்று நோக்கும் பெரிய கண்கள். உயர்ந்த மூக்கு; அகன்ற கன்னங்கள். அறிவுடைமையும் ஆற்றலும் முகத்தில் வெளிப்பட்டது.

தெருவோடு ஏழை விவசாயிகளுடன் பேசியவாறே அவர் சென்றார். அவ்வளவு எளிமை; அச்சமின்மை. 2,50,000 டாலர் அவருடைய தலைக்கு விலை வைக்கப்பட்டிருந்தது.

# 3

மாவோவின் வாழ்க்கை வரலாறு என்பது சீனாவின் வரலாறு. ஒரு புரட்சியின் வரலாறு. உயிர்த்தெழுந்த மாபெரும் ஒரு சமுதாய வரலாறு.

ஆனால், 'சீனாவின் பாதுகாவலர்', என்று மாவோவைக் குறிப்பிட்ட பொழுது அவர் சீற்றமுற்று, 'எந்தத் தனிப் பட்டவனும் ஒரு பாதுகாவலனாக இருக்க முடியாது' என்றார்.

எனினும் கோடிக்கணக்கான சீன மக்களுக்காக அவர் சிந்தனை செய்தார்.

கீழ் நிலையுற்ற மக்களுக்காகவும், கல்வி அறிவற்றவர் களுக்காகவும், ஏமாற்றப் பட்டவர்களுக்காகவும், சுரண்டப் பட்டவர்களுக்காகவும் புதுமைக் கருத்துக்களைத் தூவினார். புரட்சிகளை விதைத்தார்.

சியாங் கே-ஷேக் போலவே மாவோவின் புகழும் சீனா முழுவதும் பரவியிருந்தது. அவரைப் பற்றிய வீரதீரக் கதைகளும் பேசப்பட்டன.

அவர் எத்தனையோ முறை இறந்து விட்டதாக வதந்திகள் பரவின. சூ-டே போலவே அவருக்கும் பல கதைகள். ஒரு முறை பகைவரிடம் அகப்பட்டு தப்பித்துக் கொண்டார். ஆனால், அவர் மீது சிறு காயம் கூட பட்டதில்லை.

நான்கிங் ஆட்சியின் கூனான் ஆளுனரான ஹோ- சின்னால் கொல்லப்பட்டார், மாவோவின் முதல் மனைவி. அவர்க்கு இரு பிள்ளைகள். இரண்டாம் மனைவி ஹோ சீ நைன். ஒரு பள்ளிக்கூட ஆசிரியை. பொதுவுடைமைக்

கட்சியின் அமைப்பாளராகப் பணியாற்றினார். ஒரு வெடிகுண்டு தாக்குதலில் பல காயங்கள் பெற்றவர். ஒரு பெண் குழந்தைக்குத் தாயானார்.

மாவோவின் வாழ்க்கையும் தோற்றமும் எளிமையானது. மறைவுகள் அற்ற வெளிப்படையான பேச்சும் சிரிப்பும் உடையவர். சீனமொழியில் இலக்கிய வல்லுநர் அவர். தத்துவமும், வரலாறும் கற்றவர். சிறந்த சொற் பொழிவாளர்; எழுத்தாளர். தம்முடைய தோற்றத்தைப் பற்றியோ பழக்க வழக்கங்களைப் பற்றியோ கவலை யுறாதவர். ஆனால், கடமை உணர்வும் ஓய்வற்ற உழைப்பும் படைப் பயிற்சியின் நுட்ப அறிவும் கொண்டவர். ஜப்பானியரும் அவருடைய ஆற்றலை உணர்ந்து பாராட்டினர்.

பவ்-ஆனில் சிவப்புப் படையினர் சில புதிய கட்டடங் களைக் கட்டினர். இரு அறை உடைய ஒரு கட்டடத்தில் மாவோ தம்முடைய மனைவியுடன் தங்கியிருந்தார். வசதிக் குறைவான அறைகள். சுவர் முழுவதும் நாட்டின் வரைபடங்கள். ஆடம்பரப் பொருள்கள் எதுவும் இல்லை. கொசுவலை மட்டும் இருந்தது.

சிவப்புப் படையின் தலைவராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றிய பின்னும், பல்வேறு போர்க்களங்களை வென்ற பின்னும், நிலப் பிரபுக்களை வென்றோட்டிய பின்னும், அதிகாரிகளையும் வரிவசூலிப் போரையும் புறங்கண்ட பின்னும் அவரிடம் போர்வையும் இரண்டு பருத்திச் சீருடைகளும் அற்பமான சில பொருள்களும் மட்டுமே இருந்தன. சாதாரண சிவப்புப் படைவீரன் தன்னுடைய சீருடையில் அணிந்திருக்கும் இரண்டு சிவப்புக் கோடுகளே அந்தத் தலைமைத் தளபதி சீருடையிலும் இருந்தன.

அவர் கிராம மக்களிடையே சொற்பொழிவாற்றினார். கிராம மக்களின் நாடகங்களைப் பொது மக்களிடையே அமர்ந்து சுவைத்தார்; சிரித்தார். ஜப்பானியர் எதிர்ப்பு நாடகங்களும், பொதுவுடைமைக் கருத்து நாடகங்களும் நடைபெற்றன. அங்கே மக்களுடன் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் மாசே–துங்கையும் தளபதி லின்பையோ வையும் பாடச் சொல்லி மக்கள் வற்புறுத்த அவர்கள் புரட்சிப் பாடல்களைப் பாடினர். பொதுவுடைமைக் கட்சியின் பெண்களும் மேடைகளில் பாடினார்கள்.

மற்ற எல்லோரையும் போலவே மாசேதுங்கின் உணவும் இருந்தது. சிறப்பாக எதுவும் கிடையாது. அவர் கூனான் மக்களைச் சார்ந்தவராக இருந்ததால் மிளகுப் பழக்கம் அவருடைய விருப்பமாக இருந்தது. ரொட்டிக்கு மிளகைப் பயன்படுத்தினார். மற்றபடி எளிய உணவே. மிளகை விரும்பும் மக்கள் புரட்சி மனப்பான்மை மிக்கவர்கள் என அவர் கூறுவதுண்டு வேடிக்கையாக. கூனானின் மக்களும், ஸ்பெயின், மெக்சிகோ, ருஷியா, பிரான்சு ஆகிய நாட்டு மக்களும் புரட்சி உள்ளம் படைத்தவர்கள் என்பதற்கு அதுவே காரணம் என்பார். ஆனால் மிளகை மிகவும் விரும்பும் இத்தாலி மக்களுக்குப் புரட்சி உள்ளம் இல்லை என்று கூறிய பொழுது அவர் சிரித்துக் கொண்டே தம்முடைய எண்ணம் தவறுபோலும் என்று கூறினார். வேடிக்கைப் பாடல்களில் ஒன்று 'சூடான சிவப்பு மிளகு' என்பதாகும். அந்தப் பாடல் மாவோவுக்கு மிகவும் பிடித்தமானது.

அவருக்குச் சினம் வருவதில்லை. ஆனால் சில நேரங் களில் அவருடைய சீற்றம் வெடிக்கும். அந்நேரங்களில் அவருடைய பேச்சு இலக்கிய நயமாகவும், உவமை அழகுடனும் மிளிரும்.

அவருக்கு உலக அரசியல் முழுவதும் தெரிந்திருந்தது. நெடும் பயணத்தில் சிவப்புப் படையினர் வானொலி செய்திகளைக் கேட்டனர். வடமேற்கில் அவர்களுக்குச் சொந்தமான செய்தித்தாள்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

மாவோ உலக வரலாற்றை நன்கறிந்தவர். ஐரோப்பிய நாடுகளின் சமுதாய அரசியல் கலாச்சாரங்களைப் பற்றிய கல்வியும் பெற்றிருந்தார். இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சியும் அதனுடைய நிலைமையும் அவருக்குத் தெரியும். ஆனால், தொழிலாளர்கள் நிறைந்த ஒரு நாட்டில் தொழிலாளர் அரசு ஏற்படாததற்கான காரணம் என்ன என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அமெரிக்காவின் அரசியல் நிலைமைகளையும் அவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். முசோலினி பற்றியும் இட்லரைப் பற்றியும் அவருக்கென தனி கருத்துக்கள் இருந்தன.

இந்தியாவைப் பற்றிய பல நூல்களை அவர் படித்திருந்தார். அந்நாட்டைப் பற்றிய சில முடிவான கருத்துகளும் அவர்க்கு இருந்தது. அவற்றுள் தலைமையானது விவசாயப் புரட்சி பற்றியதாகும். இந்தியாவில் விவசாயப் புரட்சி இல்லாமல் அங்கே முழுமையான சுதந்திரம் வெற்றி பெறாது எனக் கருதினார் அவர். அண்ணல் காந்தியடிகளைப் பற்றியும், ஜவகர்லால் நேருவைப் பற்றியும் சுபாஷினி சட்டோபாத்தியாயா பற்றியும் மற்ற தலைவர்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

அமெரிக்காவின் நீக்ரோ இனத்தவர் பிரச்சினையில் அவர் அக்கறை காட்டினார். அமெரிக்க இந்தியர் -

சிவப்பிந்தியர் மீதும் ஆர்வம் இருந்தது. சோவியத் ருஷியாவில் சிறுபான்மை இனத்தவரைப் பற்றியும் அவர் கவலைப்பட்டார்.

அவர் தத்துவ வேதாந்தக் கருத்துகளை ஆழ்ந்து கற்றிருந்தார். புதிய நூல்களையும் வரவழைத்துப் படித்தார். பண்டைய கிரேக்க அறிஞர்களின் தத்துவங்கள், கதே, ஹெகல், ரூசோ, ஆகியோரின் நூல்கள் அனைத்தையும் படித்தார். சில இரவுகளில் பல நூல்களைப் படித்து விடும் பழக்கம் அவர்க்கு உண்டு.

வன்முறைப் போராட்டங்களையும் போர்களையும் கொள்கை அடிப்படையாகவும் மனிதத் தன்மையுடனும் தத்துவ நோக்குடனும் அவர் அணுகினார்.

ஒரு நாளில் பதிமூன்று அல்லது பதினான்கு மணி நேரம், நள்ளிரவு வரையில் மாவோ பணியாற்றினார். இரவு இரண்டு அல்லது மூன்று மணிக்குப் படுக்கைக்குச் சென்றார். உழைப்பில் அவர் எந்த விதமான கட்டுப்பாடும் வைத்துக் கொள்வதில்லை. வருங்காலச் சீனாவை உருவாக்க கடுமையாக உழைத்தல் வேண்டும் எனக் கருதினார். ஆகவே அவர் தமது பள்ளிக்கூட நாட்களில் அவருடைய தோழர்களுடன் வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் பனியில் ஓடியும் குன்றுகளில் ஏறியும் பயிற்சி பெற்றிருந்தார். குளிர் நீரில் நீந்துவதும் மேலாடை இன்றி நடப்பதும் அவருடைய பழக்கமாக இருந்தது. அத்தகைய பழக்கங்களும் உடற்பயிற்சிகளும் புதிய சீனாவைப் படைத்தளிக்க துன்பங்களையும் துயரங்களையும் ஏற்றுக் கொள்ளும் உடல் வலிமையையும் மனத்திடத்தையும் அவர்க்கு அளித்தன.

ஒரு காலத்தில் கூனான் பகுதியில் கோடை வெப்பத்தில் நாடோடியாகச் சுற்றி அலைந்தார். பண்ணைகளில் வேலை பார்த்துக் குறைந்த கூலியில் வயிறு வளர்த்தார்.

சில நேரங்களில் பிச்சை எடுத்தார். சில நேரங்களில் பட்டினி கிடந்தார். கூனான் பகுதியில் அவர் சுற்றித் திரிந்ததும் உழைத்ததும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஆயிரக்கணக்கான விவசாயிகளை ஒருங்கு திரட்டிப் போராட்டங்களுக்கு ஆயத்தப்படுத்த உதவியாக இருந்தது. பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கவும் பயன்பட்டது.

தம்முடைய இளமைக்காலத் தோழர்களையும் அவர் களுடைய சாவையும் பற்றி எண்ணி அவர் நெஞ்சம் நெகிழ்வதுண்டு. தோழர்களுக்கும் பசியால் வாடியோர்க்கும் தம் உடைமைகளை, மேல் ஆடையைக்கூட எடுத்துக் கொடுத்துவிடும் இரக்க குணம் மிக்கவர் அவர்.

அவருடைய குணச்சிறப்புகளும், நேர்மையும், உழைப்பும் கல்வி அறிவும் அவரைச் சீனத்தின் தலைமைக்கு அழைத்துச் சென்றன என்பதே உண்மை.

1926க்கு முன்னால் மாசே-துங் இருப்பத்தோரு மாநிலங்களின் நிலவுடைமைக் கணக்கெடுத்து ஆய்வு செய்தார். நிலப்பிரபுக்கள், செல்வர்கள், அரசாங்க அதிகாரிகள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோர் மக்கள் தொகையில் 10 விழுக்காடு இருந்த போதிலும் 70 விழுக்காடு நிலங்களை உடைமையாக்கிக் கொண்டிருந்தனர். நடுத்தர விவசாயிகளிடம் 15 விழுக்காடு நிலம் இருந்தது. 65 விழுக்காடு சிற்றூர்களின் மக்கள் ஏழைகளாக வறுமையாளர் களாக, உழைப்போராக, பண்ணை கூலியாட்களாக வாடினர். 10 முதல் 15 விழுக்காடு நிலமே அவர்களுக்கு இருந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் நிலப்பங்கீடு செய்யப் பெற்ற முறையான கணக்கு எதுவும் இல்லாமல் இருந்தது.

நான்கிங் அரசியலின் கொள்கை போர் நிறுத்தம் என்பதாகும். ஜப்பானை எதிர்த்துப் போரிடுதல் கூடாது.

அக்கொள்கையினால் ஐந்தில் ஒரு பங்கு நாட்டுப் பகுதிகளை ஜப்பானிடம் இழந்திருந்தது சீனா. 40 விழுக்காடு இருப்புப் பாதைகள் ஜப்பானிடம் இருந்தன. 58 விழுக்காடு புறம்போக்கு நிலங்களை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டிருந்தது. நிலக்கரி சுரங்கங்கள் அதன் வசம் இருந்தன. இரும்புத் தாதுக்கள் 85 விழுக்காடும், 37 விழுக்காடு காடுகளும் 40 விழுக்காடு ஏற்றுமதிகளும் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்தன. இரும்புச் சுரங்கங்களை ஜப்பான் கைப்பற்றி இருந்தது. மஞ்சூரியாவை ஜப்பான் வெற்றி கொண்டதில் சீனாவின் வளம் சுரண்டப்பட்டது. ஜப்பானின் ஆதிக்கம் மேலோங்கிற்று.

ஆனால், நான்கிங் அரசாங்கம் ஜப்பானுக்கு ஆதரவாகச் சிவப்புப் படையினரை ஒடுக்குவதில் கருத்தாக இருந்தது. 1932-ல் நான்கிங்குடன் சேர்ந்து ஜப்பானை எதிர்க்க சிவப்புப் படைமுன் வந்தது. உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர பொதுவுடைமையினர் விரும்பினர். பொது பகைவரை வென்று நாட்டை ஒருங்கிணைக்க வேண்டினர், சிவப்புப் படையினர்.

'ஜப்பானின் ஆதிக்கத்தை முறியடிப்பதே சீனாவின் உடனடி நடவடிக்கையாக இருத்தல் வேண்டும். சீனாவின் மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவித்தல் வேண்டும். ஜப்பானின் படையெடுப்பைத் தடுக்க வேண்டும். ஜப்பானின் பொருளாதார அரசியல் வெற்றிகளைத் தோல்வியுறச் செய்தல் வேண்டும். அவைதான் பொதுவுடைமைக் கட்சியின் முதல் குறிக்கோள்' என்றார் மாசே—துங்.

'ஜப்பானின் தன்னாட்சி என்பது சீனாவுக்கு மட்டுமன்றி உலகில் அமைதியை விரும்பும் மக்கள் எல்லார்க்குமே ஆபத்தானதாகும். பசிபிக் மாகடல் சூழ்ந்த மக்களுக்கு அது பகையாகும்...

'அந்நிய நாடுகளால் நாம் என்ன எதிர்பார்க்கிறோம். அவை ஜப்பானின் தன்னாட்சியை எதிர்ப்பதற்குச் சீனாவுக்கு உதவுதல் வேண்டும்.

'சீனாவுக்கு—சீனமக்களின் விடுதலைக்கு உதவ முன் வரும் நாடுகளுடன் உறவுக்குக் கை கொடுக்க வேண்டும். ஜப்பானின் ஆதிக்கத்தை வேரோடு வீழ்த்துதல் வேண்டும்.

'சீனா விடுதலை பெறும் பொழுது வெளி நாட்டு வாணிகம் மேலோங்கும். சீனமக்கள் வெளிநாடுகளுக்கு உதவியாகத் திகழ்வர். பொருளாதார கலாச்சார முன்னேற்றங்களைப் பெற்றுவிடும் சீனா உலக மக்களையும் உயர்ந்த நிலைமைக்கு கைதூக்கிவிட உதவும்.

'ஆனால், சீனமக்கள் தனியே நின்று ஜப்பானை வெல்ல முடியாது என்று பொருள் அன்று. சீனப் பொதுவுடைமைக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சிவப்புப் படையும் சீன மக்களும் ஒன்று திரண்டு ஜப்பானை முறியடிப்பார்கள்!' என்றார் மாசே–துங்.

அவருடைய நம்பிக்கை மிகப் பெரிது. ஏனெனில் ஜப்பானின் போர்க் கருவிகளும் கப்பல்படையும் புதிய ஆயுதங்களும் சீன மக்களிடம் கிடையாது.

இருந்தபோதிலும் சீனா வெல்லும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார் மாவோ.

ஜப்பானிடமிருந்து சீனா முழு விடுதலை பெற்று விட்டால் சீனாவின் எல்லா சிக்கல்களும் நீங்கிவிடும் எனக் கருதினார் அவர்.

ஜப்பான் ஆட்சியாளர்களின் தன்னாட்சிக் கொள் கையைத் தான் அவர் வெறுத்தாரே தவிர ஜப்பானின் பொதுமக்களை வெறுக்கவில்லை. சீனாவின் நீண்ட காலப் போர் முறைகளும், கொரில்லாப் போரும் ஜப்பானை

இறுதியில் தோற்றோடச் செய்யும் என உறுதியாக நம்பினார்.

கொள்கை உறுதியும், உழைப்பும், மக்கள் மீது நம்பிக்கையும், கடமை உணர்வும் கண்ணியமும் கட்டுப் பாடும் மிக்க அவர் திடீரென தலைவராகி விடவில்லை. பொய்ப்புகழ்ச்சியாக அவர் புரட்சியாளர் என வருணிக்கப் படவில்லை.

# 4

ஹூனான் மாநிலத்தில் ஷாவோஷான் சிற்றூரில் 1893-ல் பிறந்தார் மாசே-துங். மாவோ ஜென்ஷெங் அவருடைய தந்தை. தாய் வென் சீ-மெய்.

தந்தை ஏழை விவசாயி. ஏராளமான கடன் சுமை யினால் இளவயதிலேயே போர்ப்படையில் சேர்ந்தார் அவர். நெடுங்காலம் போர் வீரராகப் பணிபுரிந்தார். படையி லிருந்து திரும்பிய பிறகு சிறு வியாபாரத்தினாலும் கடின மான உழைப்பினாலும் சேர்த்து வைத்திருந்த பணத்தினால் தம்முடைய சிறிதளவு நிலத்தை மீட்டார்.

பதினைந்து 'மா' நிலம் அவர்களுக்கு இருந்தது; அதாவது இரண்டரை ஏக்கர் அளவு. குடும்ப உறுப்பினர் ஐவர். சிறிது காலம் விவசாயத்திற்குப் பிறகு மேலும் ஏழு மா நிலம் வாங்கினார். குடும்பம் வசதியாயிற்று. தாய், தந்தை, மூன்று புதல்வர்கள்.

தானிய வியாபாரம் தொடங்கிய தந்தை மெல்லச் செல்வந்தராக உயர்ந்தார். பெரும்பாலும், நேரத்தை வியாபாரத்திலேயே மூழ்கடித்தார். தம்முடைய மனைவி

யையும் புதல்வர்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்தினார். மாசே-துங் ஆறுவயதாகும் பொழுதே வயல்களில் வேலை செய்யத் தொடங்கினார்.

தானிய வியாபாரம் செய்த தந்தைக்குக் கடை என்று எதுவும் கிடையாது. ஏழை எளிய விவசாயிகளிடம் பண்டங்களை வாங்கி நகரங்களின் பெரிய வியாபாரிகளுக்கு அதிக விலைக்கு விற்று விடுவார். குடும்பம் செழுமையாய் விளங்கிற்று, அதன்பிறகு.

உள்ளூரின் தொடக்கப் பள்ளியில் எட்டாவது வயது முதல் பதிமூன்றாம் வயது வரையில் படித்தார் மாசே-துங். விடியற் காலையிலும் இரவு நேரங்களிலும் வயல்களில் வேலை செய்தார். கன்பூசியஸ் தத்துவங்களையும் இலக்கியங்களையும் கற்றார். அவருடைய ஆசிரியர் மிகுந்த கடுமையானவர். கொடுமையானவர். அதனால் பத்து வயதான போது அவர் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடிவிட்டார். வீட்டுக்குச் செல்லவும் அஞ்சினார். வீட்டில் தந்தை அடிப்பார். நகரத்தை நோக்கிச் சென்றார். அது எங்கேயோ ஒரு பள்ளத்தாக்கில் இருப்பதாகக் கருதினார். மூன்று நாட்கள் அலைந்து திரிந்தார். ஆனால் அவர் ஊரைச் சுற்றிச் சுற்றியே அலைந்திருந்ததைப் பிறகு தான் அறிந்து கொண்டார். அவரைக் கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

அதன் பிறகு வீட்டின் நிலைமை மாறி விட்டது. தந்தை கண்டிக்கவில்லை. ஆசிரியர் அடிக்கவில்லை. அன்புடன் நடத்தினர். அது அவருக்குள்ளும் ஒரு மாற்றத்தை உருவாக்கிற்று. வெற்றி பெற்ற ஒரு வேலை நிறுத்தமாக அதனைக் கருதினார்.

அவருடைய தந்தை வீட்டின் நூல்களைக் கற்குமாறு வற்புறுத்தினார் அவரை. கணக்குகளைக் கற்றுத் தேருமாறு

கட்டாயப்படுத்தினார். இரவு நேரங்களில் கணக்குகளைக் கற்றார். ஓய்வுடன் இருந்தாலோ விளையாடினாலோ தந்தை வசை பொழிவார். எப்பொழுதும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். அல்லது படிக்க வேண்டும். சும்மா இருந்தால் சோம்பேறி எனக் கடிந்துரைப்பார். படிக்க புத்தகங்கள் இல்லையென்றால் வயலுக்கு விரட்டி யடிப்பார். வயல்களில் வேலை செய்யுமாறு பணித்தார். அவருக்கு அடிக்கடி சீற்றம் பொங்கும். மாசே-துங்கையும் அவருடைய தம்பியரையும் அவர் அடிப்பார். பணம் எதுவும் கொடுக்க மாட்டார். உணவும் குறைந்த அளவே கொடுக்குமாறு கூறுவார்.

ஒவ்வொரு திங்களின் பதினைந்தாம் நாள் தம்முடைய கூலி ஆட்களுக்குச் சோறும் முட்டைகளும் அளிப்பார் தந்தை. புலால் உணவு இருக்காது. ஆனால் தம்முடைய புதல்வர்க்கு முட்டையோ புலால் உணவோ கொடுக்க மாட்டார்.

மாசே-துங்கின் அன்னை அன்பு வடிவானவர். இரக்க முள்ளவர். தமக்கு எது கிடைத்தாலும் பங்கிட்டுக் கொடுத்து விடுவார். ஏழை எளிய மக்களிடம் இரக்கமுற்று அவர்களுக்கு அரிசியும் உணவும் கொடுப்பார். வறுமைக் காலத்தில் பஞ்சம் வாட்டியபொழுது தம்மிடம் வருபவர் களுக்கு உதவிகள் செய்தார். ஆனால் தந்தையின் எதிரில் எதுவும் செய்ய மாட்டார். எல்லா உதவிகளும் தந்தை இல்லாத நேரத்தில் மறைவாகவே. அதனால் வீட்டில் அடிக்கடி பூசல்கள் எழும்.

மாசே – துங்கின் வீட்டுக்குள் இரு கட்சிகள். ஒன்று தந்தையின் கட்சி; ஆளுங் கட்சி. எதிர்க்கட்சி மாசே-துங், அவருடைய அன்னை, அவருடைய தம்பி இன்னும் சில நேரங்களில் தொழிலாளர்கள். ஆனாலும் எதிர்க் கட்சியின்

'கூட்டணி'யில் கருத்து வேற்றுமை ஏற்படும். மாசே–துங்கின் அன்னை மறைமுகமான தாக்குதலைத் தொடங்கி விடுவார். மிகுதியான உணர்ச்சிக் கொந்தளிப்பையும், வெளிப்படையான ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பான போராட்டத்தையும் அவர் ஆதரிக்க மாட்டார். அது சீனர் வழி அன்றென மறுப்பார்.

ஆயினும், மாசே–துங்கின் பதிமூன்றாவது அகவையில் அவருடைய தந்தையை எதிர்த்து அவர் விரும்பிய இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுகளைக் கூறி வாக்குவாதம் செய்வார். அவருடைய தந்தையின் முதன்மையான குற்றச்சாட்டுகள் மாசே–துங் மகனுக்குரிய கடமைகளை ஆற்றாததும் சோம்பலாக இருப்பதுமாகும். அவற்றுக்கு மாறாகப் பெரியவர்கள் அன்புடனும் பாசத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கியங்கள் இயம்புவதாகக் கூறுவார் மாசே–துங். சிறுவர்களைவிட பெரியவர்கள் மிகுதியான வேலைகளைச் செய்யவேண்டும் என்பார் அவர். தம்மைவிட மூன்று மடங்கு மூத்தவரான தந்தை மூன்று மடங்கு வேலைகளைச் செய்ய வேண்டும் என்பார். தந்தையின் வயது தமக்கு வரும்பொழுது மிகுந்த வலிமையுடன் வேலை செய்வதாக உறுதியளித்தார்.

மாசே–துங்கின் தந்தை பணம் குவிப்பதிலேயே குறிக்கோளாக வாழ்ந்தார். நிலங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளாமல் அடமானத்துக்கு வாங்கிச் சுரண்டல் செல்வரானார்.

அதனால், தந்தையின் மீது மாசே–துங்குக்கு வெறுப்பு வளர்ந்தது. குடும்பத்துக்குள் பூசலும் குழப்பமும் மிகுந்தது. அவருடைய பதிமூன்றாம் அகவையில் வீட்டில் விருந்தினர்களை வரவழைத்தார் தந்தை. விருந்தின் போது தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேற்றுமையில் பூசல் வெடித்தது. விருந்தினரின் முன்பாகத் தந்தை மகனைச்

சோம்பேறி எனவும் பயனற்றவன் எனவும் வசை பொழிந்து விட்டார். அது மகனுக்குத் தலைக்குனிவை அளித்தது. சீற்றத்தை மூட்டியது. தந்தையை எதிர்த்துக் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார் மாசே–துங்.

அன்னை அவரை அமைதிபடுத்த பின் தொடர்ந்து ஓடினார். தந்தையும் வந்தார். வீட்டுக்குத் திரும்பி வருமாறு வேண்டினார். ஆனால், மாசே–துங் ஒரு நீர்நிலையின் விளிம்பில் சென்று நின்று கொண்டு அதில் குதித்து விடப் போவதாக அச்சுறுத்தினார். உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தந்தை மன்னிப்பு கேட்டுக் கொண்டார். மகன் தந்தையிடமிருந்து இனி அடிப்பதில்லை என்னும் உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

தன் உரிமையையும் புரட்சியையும் நிலை நாட்டினால் எதனையும் வெல்லலாம் என்ற எண்ணம் வந்தது மாசே–துங்குக்கு.

பணிந்து போயிருந்தால் தந்தையின் வசவும் அடியுமே தமக்குக் கிடைத்திருக்கும். ஆதலால் எதற்கும் அடிபணிதல் கூடாது எனவும் கருதினார்.

அதன் பிறகு கடுமையான செயல்கள் தந்தைக்குத் தோல்விகளையே அளித்தன. அவரை மகன் வெறுத்தார். உண்மையான எதிர்க்கட்சிக் கூட்டணி வீட்டுக்குள் உருவாயிற்று. மாசே–துங் தம்முடைய வேலைகளிலும் கல்வியிலும் மிகவும் கவலை எடுத்துக் கொண்டு உழைத்தார். கடமை தவறாமல் கருத்தாகப் பணியாற்றினார்.

அவருடைய தந்தை ஓரளவே படித்தவர். தாய் படிக்காதவர். இருவரும் உழவர் குடியைச் சார்ந்தவர்கள்.

மா–சே–துங் மட்டுமே அக்குடும்பத்தில் கற்ற கல்வியாளர். அவருக்கு இலக்கியங்கள் தெரியும். ஆனால் அவற்றை வெறுத்தார். பண்டைய சீன காவியங்களையும் புரட்சிக் கதைகளையும் விரும்பினார். அவற்றை அவருடைய ஆசிரியர் படிக்கக் கூடாத நூல்கள் என்றார். ஆனால் மாசே–துங் அவற்றை விரும்பிப் பள்ளிக் கூடத்திலேயே பாட நூல்களின் மறைவில் வைத்துப் படித்தார். அவருடைய பள்ளித் தோழர்களும் அவ்வாறே படித்தனர். அவற்றைப் பற்றிப் பேசினர். ஊரில் இருந்த முதியவர்களும் அவற்றை விரும்பிப் படித்தனர்.

மாசே–துங் தமது பதிமூன்றாவது வயதில் தொடக்கப் பள்ளியை விட்டு வெளியேறினார். பண்ணையில் வேலை செய்தார். பகலில் வயல் வேலை. இரவில் தந்தைக்காகப் புத்தகம் படித்தல். இலக்கியங்களைத் தவிர பிற நூல்களைக் கற்றார்.

அவருடைய தந்தையின் விருப்பமோ இலக்கியங்களை அவர் கற்க வேண்டும் என்பது. அது சட்ட நுணுக்க அறிவை அளிக்கும். வழக்கு மன்றங்களுக்கு அது பயன் படும். தம்முடைய அறையின் சாளரத்தைத் துணியை வைத்து மூடினார் மாசே–துங். இரவு வெளிச்சம் வெளியில் தெரியாது. அவர் எதைப் படித்தாலும் தந்தைக்குத் தெரியாது. அவ்வாறு 'சொற்களின் எச்சரிக்கை' என்ற நூலைப் படித்தார். மேலை நாட்டு அறிவியல் கருவிகளைச் சீனா பயன்படுத்தாததே சீனாவின் வீழ்ச்சிக்குக் காரணம் என நூலாசிரியர்கள் கூறினர். புகைவண்டிகள், தொலை பேசிகள், தந்திகள், நீராவிக் கப்பல்கள் ஆகியவற்றைச் சீனா பயன்படுத்துதல் வேண்டும் என்றனர். அத்தகைய புத்தகங்களைப் படித்தல் வீண் வேலை என்றார் அவருடைய தந்தை. சட்ட அறிவுக்குப் பயன்படக் கூடிய நூல்களைப் படிக்க வேண்டும் என வற்புறுத்தினார் அவர்.

மாசே-துங் பழைய கதைகளையும் சீன இலக்கியக் கதைகளையும் படித்தார். ஒருநாள் அவர்க்குத் திடீரென ஒன்று தோன்றியது. மேற்கண்ட நூல்களில் ஏழை உழவர் களுடைய உண்மையான வாழ்க்கையைப் பற்றி எதுவுமே கூறப் பெறவில்லை. குணப் படைப்புகள் எல்லாருமே போர் வீரர்களாகவும், அதிகாரிகளாகவும், பேரறிவாளர் களாகவும், புலவர்களாகவும், மன்னர்களாகவுமே இருந்தனர். உழவர் குடியில் தோன்றிய ஒருவன்கூட அந்நூல்களின் தலைமகனாக இருக்கவில்லை. இந்த வியப்பு ஈராண்டுகள் அவர்க்கு ஏற்பட்டிருந்தது. அதன்பிறகு அக்கதைகளைப் பற்றி ஆய்வு செய்தார். படைத்தளபதிகளும், ஆட்சியாளர் களும், புகழ் வாய்ந்தவர்களும், மன்னர்களும் வயலில் இறங்கி வேலை செய்வதில்லை. அவர்களுக்கு நிலம் இருந்தது. நில உடைமையாளர்கள் உழவர்களை வேலை வாங்குவதும் அவர்களைக் கட்டுப்படுத்துவதும் மட்டுமே செய்வார்கள். அதனால் உழவர்கள் கதைகளில் இடம் பெறுவதில்லை.

மாசே-துங்கின் தந்தை மாவோ-ஜென்-ஷெங் தம்முடைய நடுத்தர வயது வரைகூட ஒரு நாத்திகர். ஆனால் அவருடைய அன்னை புத்தரை வணங்கும் உண்மையான நம்பிக்கை உள்ளவர். தம்முடைய பிள்ளைகளுக்கும் சமய உணர்வுகளை ஊட்டினார். தந்தையின் சமய உணர்வின்மை பிள்ளைகளுக்கு வருத்தமளித்தது.

தம்முடைய ஒன்பதாவது வயதில் தந்தையின் சமய நம்பிக்கை இன்மையைப் பற்றி தாயிடம் வாதிட்டார் மாசே-துங். தந்தையை மாற்றுவதற்கு அவரும் மற்றவர் களும் பெரிதும் முயன்றனர். அது பயனளிக்கவில்லை. தந்தையின் சீற்றமே வென்றது. அவர்க்குக் கடவுள் நம்பிக்கை ஏற்படவே இல்லை.

காலப்போக்கில் கல்வியறிவு மேன்பட மாசே-துங் நாத்திகக் கொள்கையை நோக்கி முன்னேறினார். தாய் கவலைப்பட தொடங்கினார். அவருடைய மாற்றத்தைக் கண்டு வசை பொழியவும் தொடங்கினார். ஆனால் அவருடைய தந்தை எதுவும் கூறுவதில்லை.

ஒருநாள் பண வசூலுக்காக வெளியில் சென்று சாலையி லிருந்து குறுக்கே நடந்தார் தந்தை. அப்பொழுது எதிரே ஒரு புலியைப் பார்த்தார். அவர் புலியைக் கண்டு நடுங்குவதற்கு முன்னால் புலி அவரைக் கண்டு அஞ்சி ஓடி மறைந்து விட்டது. அடுத்தகணம் தாம் எதிர்பாராமல் புலியிடமிருந்து தப்பிப் பிழைத்தது வியப்பளித்தது அவருக்கு. எல்லாம் கடவுளின் செயல் எனக் கருதினார் தந்தை. அதற்குப் பிறகு புத்த மதத்தின் மீது அவருக்கு மதிப்பு ஏற்பட்டது. அடிக்கடி நம்பிக்கையோடு சாம்பிராணி தூபம் போட்டார். ஆனால், மாசே-துங்கின் கடவுள் நம்பிக்கைக் குறைந்து கொண்டே வந்தது. அதில் தந்தை தலையிட வில்லை. தம்முடைய துயர நாட்களில் கடவுள் வழிபாடு செய்தார் அவர்.

மாசே-துங் படித்த 'சொற்களின் எச்சரிக்கை' என்ற புத்தகம் மேலும் மேலும் படிக்கும் ஆர்வத்தை அவருக்குத் தூண்டிவிட்டது. அதனால் பண்ணை வேலைகள் கசந்து போயின. அது அவருடைய தந்தைக்குப் பிடிக்கவில்லை. அதனால் இருவர்க்குள்ளும் பூசல். கருத்து வேற்றுமையுள்ள தந்தையும் பொறுமை இழந்த மகனும் ஒரே வீட்டுக்குள் பூசலிக்கிடையே நெடுங்காலம் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. வீட்டை விட்டு ஓடிப் போனார் மாசே-துங்.

சட்டக் கல்லூரி மாணவர் ஒருவருடன் சென்று தங்கினார் அவர். அரையாண்டுக் காலம் அங்கேயே தம்முடைய விருப்பக் கல்வியைக் கற்றார். சீன இலக்கியங்கள்

கற்ற முதிய அறிஞர் ஒருவரிடம் இலக்கியங்களைக் கற்றார். புதிய படைப்புகளையும் பல்வேறு நூல்களையும் படித்தார்.

அக்காலக் கட்டத்தில் கூனானில் அரிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அது அவருடைய வாழ்க்கையையே அடியோடு மாற்றி அமைத்து விட்டது.

சங்க்ஷாவிலிருந்து மொச்சை வணிகர்கள் பலர் வெளியேறி வந்து கொண்டிருந்ததைச் சீனப் பள்ளிக் கூடத்திற்கு வெளியில் நின்று மாணவர்கள் கவனித்தனர். அவர்களில் மாசே–துங்கும் ஒருவர். ஏன் அவ்வணிகர்கள் வெளியேறி வருகிறார்கள் என்பதை மாணவர்கள் கேட்டனர். அங்கே புரட்சி நடப்பதாகக் கூறினர்.

என்ன புரட்சி?

அந்த ஆண்டில் சங்க்ஷாவில் பல்லாயிரக் கணக்கானோர் பஞ்சத்தினால் வாடினர். பஞ்சம் போக்கிட உணவு வேண்டி மாநில ஆளுநரிடம் தூதுக் குழு அனுப்பினர் மக்கள். அதற்கு ஆளுநரின் பதில் எரிந்த வயிற்று நெருப்பில் சூடு போட்டது போல இருந்தது; 'உணவுப் பஞ்சம் ஏது? நகரில் ஏராள உணவு மலிந்து கிடக்கிறதே? எனக்குத் தேவையான உணவு என்னிடம் இருக்கிறதே? உங்களுக்கு மட்டும் எப்படி உண்ண உணவில்லாமல் போய் விட்டது?'' என்றார் ஆளுநர்.

இது மக்களை கொதிப்படையச் செய்தது. அவர்கள் கூட்டம் போட்டனர். ஆர்ப்பாட்டம் செய்தனர். போராட்டங்கள் நடத்தினர். அதிகாரிகளையும் அலுவலரை யும் தாக்கினர். கொடிக் கம்பங்களைச் சாய்த்தனர். ஆளுநரை ஊரை விட்டு விரட்டியடித்தனர்.

அதைத் தொடர்ந்து உள்நாட்டுத் தலைமை ஆணை யாளர் சாங்க் என்பவர் குதிரையில் வந்து மக்களை அமைதி

படுத்தினார். மக்களுக்கு அரசாங்கம் உதவும் என உறுதியளித்தார். சொன்னதைச் செயலாக்கிட முனைந்தார். ஆனால், அவருடைய செயல் மன்னர்க்குப் பிடிக்கவில்லை. ஆணையாளர் சாங்க் புரட்சி மக்களுடன் சேர்ந்து விட்டதாகக் குற்றம் சாட்டினார் மன்னர். ஆணையாளரை நீக்கிவிட்டார். புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

புதிய ஆளுநர் புரட்சியை அடக்கிட ஆணை பிறப்பித்தார். தலைவர்களைக் கைது செய்தார். பலரைக் கொலைக் களத்திற்கு அனுப்பினார். அவர்களுடைய தலைகளைத் தொங்கவிட்டு மற்றவர்க்கும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சிகள் பள்ளிக் கூட மாணவரிடையே பரவிற்று. பலர் இவற்றை விவாதம் செய்தனர். பலநாட்கள் இதே பேச்சாக இருந்தது. அந்நிகழ்ச்சிகள் மாசே-துங்கின் நெஞ்சில் பதிந்து விட்டன. அவருடைய உள்ளத்தைப் பாதித்தன. மாணவர் பலர் புரட்சிக் கூட்டத்தினரிடம் இரக்கம் கொண்டு ஆதரவாகப் பேசினர். ஆனால் அவர்களுக்கும் தங்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லாதவர்கள் போலப் பேசினர், ஒட்டு உறவு இல்லாமல் அவர்களுக்கு அந்நிகழ்ச்சிகளில் ஓர் ஆர்வம். அவ்வளவே. ஆனால், மாசே-துங்கின் உள்ளமோ அதை மறக்கவே இல்லை. மறக்க முடியவில்லை. புரட்சியாளர்கள் அவருடைய சொந்தக் குடும்பத்தினர் போன்றே எளிய மக்கள் என்றே கருதினார். அவர்களுக்காக வேதனையுற்றார். அவர்களுக்கு நேர்ந்த அறமற்ற செயல்களுக்காக உருகினார். வருந்தினார்.

மாசே-துங்கிற்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு அத்தகைய ஒரு சிறுகோடு. லெனினுக்கும் மற்றவர்க்கும் உள்ள வேறுபாடு போல அது.

# 5

சீங்க்ஷாவின் புரட்சிக்குப் பின்னர் மற்றொரு நிகழ்ச்சி.

ஷாவோ-ஷானில் கீ-லோ-கூய் என்ற தலைமறைவான ஒரு குழுவினர்க்கும் உள்ளூர் நிலப்பிரபுவுக்கும் ஏற்பட்ட சச்சரவு அது. நிலப்பிரபு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவர் வலிமை வாய்ந்தவர். அதனால் நீதியைத் தமக்கேற்றவாறு வளைத்துக் கொண்டார். நீதி மன்றத்தில் வென்றார். கீ-லோ-கூய் குழுவினர் தோற்றனர்.

ஆனால், அக் குழுவினர் நிலப்பிரபுவுக்கு அடங்க மறுத்தனர். அவர்க்கு எதிராகக் கலகம் செய்தனர். அரசாங்கத்தையும் எதிர்த்தனர். அருகிலிருந்த லீயூஷான் மலையில் மறைந்து கொண்டனர். அங்கே ஆட்களைத் திரட்டி வலிமை பெற்றனர்.

அவர்களுக்கு எதிராக அரசாங்கப் படையும் அனுப்பப் பட்டது.

குழுவினர் புரட்சிக் கொடி ஏற்றுவதற்கு ஒரு குழந்தையைப் பலி கொடுத்ததாகத் தவறானதொரு வதந்தியைப் பரப்பி விட்டார் அந்த நிலப்பிரபு.

முடிவில் குழுவினரின் புரட்சித்திட்டம் முரியடிக்கப் பட்டது. அதனுடைய தலைவர்களுடைய தலைகள் வெட்டி வீழ்த்தப் பட்டன.

மாணவர்களிடையே அத்தலைவர்கள் பெரும் வீரர் களாக மதிக்கப் பெற்றனர். அவர்களுடைய இரக்கம் புரட்சியாளர்கள் பக்கம். மாசே-துங்கின் உள்ளமும் அவர்களுடன்.

அடுத்த ஆண்டில், அறுவடைக்கு முன்னால் மழைக் கால அரிசி தீர்ந்து விட்ட இடைக்காலத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டது. மாசே—துங்கின் மாவட்டத்தில், செல்வர்களிடமிருந்து ஏழைகள் உதவி வேண்டினர். அதற்காக, 'விலை கேட்காத அரிசி' கேட்டனர். அதாவது 'இலவச அரிசித்திட்டம்' என்ற இயக்கத்தை நடத்தினர்.

மாசே–துங்கின் தந்தையார் அரிசி வணிகர். அவர் ஏராள அரிசி முதலான தானியங்களை அவருடைய மாவட்டத்தில் வாங்கி பெரிய நகரங்களுக்கு அனுப்பி வருவாய்த் தேடிக் கொண்டிருந்தார். ஊர்ப் பஞ்சத்தைப் பற்றி கவலைப்படவில்லை.

அவர் அனுப்பிய அரிசியை ஒரு தடவை ஏழை மக்கள் கைப்பற்றி விட்டனர். அதனால் தந்தைக்கு கட்டுப்படுத்த முடியாத சீற்றம். மாசே–துங் தந்தையின் மீது இரக்கப்பட வில்லை. அதே நேரத்தில், ஊர் மக்களின் செயலும் தவறானது எனக் கருதினார்.

மற்றொரு நிகழ்ச்சியும் மாசே—துங்கின் மனத்தைப் பாதித்தது உண்டு.

உள்ளூர்ப் பள்ளிக் கூடத்தில் கடவுள் மறுப்பில் தீவிர வாதியாக ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் புத்த மதத்தையும் கடவுளர்களையும் நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும் என்று கூறினார். கோயில்களைப் பள்ளிக் கூடங்களாக மாற்ற வேண்டும் என மக்களிடம் சொன்னார். அவரைப் பற்றி ஊர்மக்களும் பேசினர். அவரை மாசே—துங் மதித்தார். அவருடைய கொள்கைகள் அவருக்குப் பிடித்திருந்தன.

இயற்கையிலேயே–பிறப்பிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டிருந்த மாசே–துங் இத்தகைய சூழ்நிலைகளால்

உள்ளம் பாதிக்கப் பட்ட நிலையில் மேலும் அவருடைய நெஞ்சத்தில் புரட்சி முத்திரைகளைப் பதித்து விட்டன, இளமையிலேயே.

இதே காலகட்டத்தில் அரசியல் உணர்வுகளும் அவருக்கு ஏற்பட்டன. சீனத்தின் நிலைமையைப் பற்றி அவர் படித்ததும் அதற்கு ஏதுவாயிற்று. 'ஐயகோ, சீனம் அடிமைப் படுத்தப்படுகிறது' என்று தொடங்கி அவர்படித்த அறிக்கைகள் அவருடைய நினைவில் நீண்ட காலம் நிலை பெற்று விட்டன. ஜப்பான் கொரியாவையும் பார் மோசையையும் இந்தோ–சைனாவின் பகுதிகளையும் பர்மாவையும் மற்ற இடங்களையும் வென்றடக்கியதையும் அவர் படித்த பொழுது தமது தாய் நாடும் என்ன கதிக்கு ஆளாகுமோ என்று கவலையுற்றார். தாய் நாட்டைக் காப்பது எல்லா மக்களின் கடமை என்று கருதினார்.

அவருடைய தந்தை அவரை சியாங் டானில் தமக்குத் தெரிந்த அரிசிக் கடை ஒன்றில் பயிற்சிக்காக வேலைக்கு அனுப்ப எண்ணினார். முதலில் அதற்கு மறுப்பு தெரிவிக்க வில்லை மாசே–துங். அந்த வேலை நல்ல பொழுது போக்காக இருக்கும் என நினைத்தார். ஆனால், அந்த நேரத்தில் வழக்கத்திற்கு மாறான ஒரு புதிய பள்ளிக் கூடத்தைப் பற்றிக் கேள்வியுற்றார். அவர் அங்கே செல்வதெனத் தீர்மானித்தார். தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை.

இந்தப் பள்ளிக்கூடம் அவருடைய அம்மாவின் குடும்பம் வாழ்ந்திருந்த சியாங்–சியாங்கில் இருந்தது. அப்பள்ளியில் அவருடைய தாய்வழி மாமன் ஒருவன் படித்துக் கொண்டிருந்தான். அவன் அங்குள்ள படிப்பு முறைகளை விவரித்தான். புதிய பாடதிட்டம் அங்கே

இருந்தது. அதில் இலக்கியங்களை விட புதிய அறிவினை அளிக்கும் மேலை நாட்டுக் கல்வியும் புரட்சிக் கல்வியுமாக இடம் பெற்றிருந்தன.

அந்தப் பள்ளிக் கூடத்திற்கு மாமனுடன் சென்று தம் பெயரையும் பதிவு செய்து கொண்டார் மாசே—துங். அப்பள்ளி சியாங்-சியாங்கின் உள்ளூர் மக்களுக்காக மட்டுமே உரியது. ஆகையால், தாமும் உள்ளூர் வாசி போலவே குறிப்பிட்டார். பிறகு தான் எல்லாரும் சேரலாம் என்பது தெரிய வந்தது.

ஐந்து திங்களுக்கான 1400 கோப்பர் பணத்தை உணவுக் காகவும் விடுதிக்காகவும் படிப்புக்காகவும் செலுத்தினார் அவர். இந்தப் படிப்பு அவருடைய கல்வி அறிவை உயர்த்தி பெரிய வேலைக்குத் தகுதியாக்கும் என்று அவருடைய நண்பர்கள் கூறியதும் அவருடைய தந்தையும் எதிர்ப் பில்லாமல் ஏற்றுக் கொண்டார்.

முதல் முறையாக வீட்டிலிருந்து ஐம்பது கல் தொலைவுக்கு அப்பால் படிப்புக்காகச் சென்றார் மாசே—துங் அப்பொழுது அவருக்கு வயது பதினாறு.

புதிய பள்ளிக் கூடத்தில் இயற்கை அறிவியலும் மேலைநாட்டுப் புதிய பாடங்களும் அவர் கற்க முடிந்தது. அங்கே சிறப்புக்குரிய ஒன்று. ஜப்பானிலிருந்து திரும்பி யிருந்த ஆசிரியர் ஒருவரும் இருந்தார். அவர் போலித் தலைப் பின்னல் வைத்துக் கொண்டிருந்தார். அது போலி என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. 'எல்லார்க்கும் அது சிரிப்பை வரவழைத்தது. அவரை 'அந்நிய நாட்டுப் போலிப் பிசாசு' என்றனர்.

இதற்கு முன்னால் இத்தனை மாணவர்கள் படித்ததைக் கண்டதில்லை மாசே—துங். பெரும்பாலோர் செல்வக்

குடும்பத்தினர், நிலப் பிரபுக்களின் பிள்ளைகள், விலை உயர்ந்த ஆடை அணிந்தோர். ஏழை உழவர்கள் மிகச் சிலரே தங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கு அனுப்ப முடிந்திருந்தது.

மற்றவர்களைக் காட்டிலும் மிக எளிய ஆடையாக மாசே-துங் உடுத்தியிருந்தார். அவரிடம் ஒரே ஒரு நல்ல கோட்டும் கால்சட்டையுமே இருந்தன. மேலங்கிகளை மாணவர் அணிதல் கூடாது. ஆசிரியர் மட்டுமே அணிதல் வேண்டும். 'அந்நியப் பிசாசுகளே' அந்நியத் துணிகளை அணிந்திருந்தனர்.

பணக்கார மாணவர்கள் மாசே-துங்கின் கசங்கிப் போன கந்தலான கோட்டையும் கால் சட்டையையும் கண்டு அவரை வெறுத்து ஒதுக்கினர். எனினும், அவர்களுக்குள்ளும் அவர்க்கு நண்பர் இருந்தனர். சிறப்பாக இரண்டு நல்ல தோழர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் சோவியத் ரஷியாவில் எழுத்தாளராக வாழ்ந்தார் பிற்காலத்தில்.

மாசே-துங் வேறொரு காரணத்துக்காகவும் மாணவரால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். அவர் சியாங்-சியாங்கைச் சார்ந்தவர் அன்று. சியாங்-சியாங்கைச் சேர்ந்தவராக இருக்க வேண்டியது இன்றியமையாததாம். அதிலும் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தினராகவும் இருத்தல் வேண்டும். அங்கே உயர்ந்த தாழ்ந்த நடுத்தர மாவட்ட அமைப்பு உண்டு. உயர்வுக்கும் தாழ்வுக்கும் எப்பொழுதும் சண்டை சச்சரவுதான். எவரும் மற்றவரைப் பொறுத்துப் போகும் எண்ணமற்று இருந்தனர். இந்தப் பூசலில் மாசே-துங் நடுநிலை வகித்தார். ஏனெனில் அவர் சியாங்-சியாங்கைச் சாராதவர். என்றாலும் மூன்று குழுவினரும் அவரை வெறுத்தனர். அவர் உள்ளுக்குள் வருந்தித் துயருற்றார்.

பள்ளிப் படிப்பில் மாசே–துங் முன்னணியில் நின்றார். ஆசிரியர்கள் மதித்தனர் அவரை. இலக்கிய ஆசிரியர்கள் அவரை சிறப்பாகப் பாராட்டினர். இலக்கிய நயத்துடன் அவர் எழுதிய கட்டுரைகள் ஆசிரியர்களைக் கவர்ந்தன. ஆனால் மாசே–துங்கின் மனம் இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ளவில்லை.

அவருடைய தோழனான மாமன் அவருக்கு இரு நூல்களை அனுப்பியிருந்தான்; 'மறுமலர்ச்சி இயக்கம்' எனும் காங்யூவீ எழுதியதும், புதிய மக்களின் இதழ்கள் எனும் லீயாங்சீசாவோ எழுதியதுமாகும்.

அவற்றை மாசே–துங் திரும்பத் திரும்பப் படித்தார்; மனப்பாடம் ஆகும் அளவிற்குப் படித்தார். அவ்விரு ஆசிரியர்களையும் வழிபடவே தொடங்கி விட்டார். மாமனுக்கும் நன்றி தெரிவித்தார். அந்நூல்களை அளித்தமைக்காக, முன்னேற்றக் கருத்துள்ளவனாக மாமனைக் கருதினார், அவர். ஆனால் புரட்சி எதிர்ப் பாளனாக மாறிவிட்டான், மாமன் பிற்காலத்தில். பெரும் புரட்சி நடந்த 1925–27 காலத்தில் புரட்சிக்கு எதிராகச் செயல் பட்டான் அவன்.

பள்ளிக்கூடத்தில் 'போலி அந்நியப் பிசாசு' எனப் பெயர் சூட்டப்பட்ட ஆசிரியரை மாணவர் பலரும் வெறுத்தனர். ஆனால் அந்த ஆசிரியர் ஜப்பானைப் பற்றிக் கூறியவற்றை மாசே–துங் விருப்பத்துடன் கேட்டார்.

அந்த ஆசிரியர் இசையும் ஆங்கிலமும் கற்பித்து வந்தார். ஒரு பாடல் ஜப்பான் பாடல்.

'மஞ்சள் கடல் மீது போர்' என்ற பாடல் அது.

அப்பாடலின் அழகிய வரிகள் நெடுங்காலம் மாசே–துங் மனத்தில் நிலைத்திருந்தன.

**சிட்டுக் குருவி பாடுகின்றது,**
**வானம்பாடி கூத்தாடுகின்றது,**
**இளவேனிலில் பச்சை வயல்கள்**
**கவினுறக் காணப்படுகின்றன.**
**நீல வண்ணப் பூக்கள் ஒளிர்கின்றன,**
**பூங்காக்கள் பசுமை போர்த்தியுள்ளன,**
**புதிய ஓவியம் உருவாகி யுள்ளது.**

(ருஷிய – ஜப்பானின் போர் முடிவுக்கு வந்து ஒப்பந்தம் ஆனதால், இளவேனில் திருவிழாவில் ஜப்பான் களிப்புற்றிருந்ததைக் குறித்த பாடல் இது.)

இப்பாடல் மாசே–துங் மனத்தில் ஜப்பானைப் பற்றிய கற்பனையை வளர்த்தது. ஜப்பானின் அழகினை மனக் கண்ணில் கண்டார். ருஷியாவை வெற்றி கண்ட ஜப்பானின் பெருமிதத்தை உணர்ந்தார். அந்த நேரத்தில் ஜப்பானின் வேறொரு முகமான காட்டுமிராண்டித் தனத்தை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. பின்னர் உணர்ந்தார்.

சீனத்தின் பழங்கால மன்னர்கள் வரலாற்றைப் படித்தார் மாசே–துங். வெளி நாடுகளின் வரலாறுகளையும் படித்தார். பூவியலைப் படித்தார்.

முதல் முறையாக அமெரிக்காவைப் பற்றி அதனுடைய புரட்சி வரலாற்றில்தான் தெரிந்து கொண்டார். அதிலே ஒரு சொற்றொடர் இருந்தது: ‘எட்டு ஆண்டுகளின் கடுமையான போருக்குப் பிறகு வாஷிங்டன் வெற்றி பெற்றது; அதனுடைய தேசத்தை உருவாக்கிற்று’.

‘உலகின் மாபெரும் வீரர்கள்’ என்ற நூலில் நெப்போலியன், ருஷ்யாவின் கேதரைன், மாபெரும் பீட்டர், வெலிங்டன், கிளாட்ஸ்டோன், ரூசோ, மோன்டெஸ்க்யூ லிங்கன் ஆகியோரைப் பற்றிப் படித்தார், மாசே–துங்.

அவருடைய வீட்டிலிருந்து 120 கல் தொலைவில் இருந்தது சான்ங்ஷா என்ற பெருநகரம். அது மிகப் பெரிய அழகிய நகரமென்றும், மக்கள் தொகை மிகுந்ததென்றும், எண்ணற்ற பள்ளிக்கூடங்கள் உடையதென்றும், ஆளுநரின் மாளிகை அங்கிருப்பதாகவும் கேள்வியுற்றார். அங்கே செல்ல அவருக்கு ஆசை. சியாங்–சியாங்கின் மக்களுக்காக அங்கே இருந்த நடுநிலைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க ஆவல் அவருக்கு.

அந்த ஆண்டில் மழைக்காலத்தில் தம்மை அப்பள்ளியில் அறிமுகப் படுத்துமாறு தம்முடைய ஆசிரியர் ஒருவரிடம் கேட்டுக் கொண்டார் அவர். ஆசிரியர் ஒப்புக் கொண்டார்.

மாசே–துங் சான்ங்ஷாவுக்கு நடந்து சென்றார். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக அவருக்கே வியப்பளிக்கும் வகையில் அவர் விரும்பிய பள்ளியில் சேர்த்துக் கொள்ளப் பட்டார். ஆனால் வளர்ந்து வந்த அரசியல் காரணங் களால் அரையாண்டுக் காலம் மட்டுமே அவர் அங்கே படிக்க முடிந்தது.

சான்ங்ஷாவில் தேசீயப் புரட்சி இதழான 'மக்களின் வலிமை'யை மாசே–துங் முதன் முறையாகப் படித்தார். அதில் மஞ்சு பேரரசுக்கு எதிராகக் கேண்டான் கிளர்ந் தெழுந்ததையும் அக்கிளர்ச்சியில் 72–வீரர்கள் வாரப்–சிங் தலைமையில் உயிர்த் தியாகம் செய்ததையும் மாசே–துங் படித்தார். அது அவரை மிகவும் சிந்திக்க வைத்தது; உணர்ச்சி வயப்பட வைத்தது.

இப்பொழுது சன்யாட் சென்னைப் பற்றியும் டங்மெங்கூய் பற்றியும் அவருடைய திட்டங்கள் பற்றியும் படித்தறிந்தார். நாடு முதல் புரட்சி நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. உள்ளக் கிளர்ச்சி தாங்க முடியாத மாசே–துங் ஒரு கட்டுரை வரைந்து பள்ளிக்கூடத்துச் சுவரில் ஒட்டினார். அதுவே

அவருடைய முதல் அரசியல் பால பாடம். தெளிவு பெறாத கட்டுரையாக அது அமைந்திருந்தது. எனினும் உள்ளப் புரட்சியின் விதைகள் முளைவிடத் தொடங்கியதை அவரே அறியாதிருந்த பருவம் அது.

அந்நிய எதிர்ப்பு இயக்கம் பள்ளிக்கூட மாணவர்களி டையே பரவத் தொடங்கிற்று. மாசே-துங் படித்த பள்ளிக் கூடத்திலும் போராட்டம் நடந்தது. மஞ்சு பேரரசுக்கு எதிர்ப்பாகச் சடைப் பின்னலை வெட்டிக் கொள்ளும் போராட்டமும் நடந்தது. மாசே-துங்கும் அவருடைய மற்றொரு நண்பனும் தங்களுடைய சடைப் பின்னலைக் கத்தரித்து எறிந்தனர். அவ்வாறே செய்வதாக உறுதி கூறிய மற்ற மாணவர்களோ தங்களுடைய உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை. அதனால் மாசே-துங்கும் அவருடைய நண்பனும் மாணவர்களை மறைந்திருந்து தாக்கி அவர் களுடைய சடைப் பின்னலைக் கத்தரித்தனர். பத்துக்கு மேற்பட்டோரை அவ்வாறு சடைப் பின்னல் இழக்க வைத்தனர்.

சடைப் பின்னல் கத்தரித்த போராட்டம் பற்றி மாசே-துங்குக்கும் ஒரு சட்ட மாணவர்க்கும் பேச்சுநடந்தது. அப்போராட்டத்தை எதிர்த்துப் பேசினார் சட்ட மாணவர். உடம்பு, தோல், மயிர், நகம் போன்றவை பெற்றோரிட மிருந்து பிள்ளைகளுக்கு வழிவழியாகத் தோன்றுபவை. அவைகளை அழித்தல் தகாது. இலக்கியத்தின் படியும் அது தவறாகும் என்றார் அவர். ஆனால் மஞ்சு எதிர்ப்புப் போராட்டம் அரசியல் சார்புள்ளது என்று கூறி மாணவரை அடக்கிவிட்டார், மாசே-துங்.

போராட்டம் பரவிய பொழுது கூனான் பகுதியில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அரசியல் வானம் மாறத் தொடங்கிற்று. அந்த நடுநிலைப் பள்ளியில்

திடீரென ஒரு புரட்சியாளர் தோன்றி மாணவரிடையே முதல்வரின் அனுமதியுடன் உணர்ச்சி மயமாகப் பேசினார். ஏழெட்டு மாணவர்கள் கூட்டத்திடையே எழுந்து அவரை ஆதரித்தும் மஞ்சு ஆட்சியை எதிர்த்தும் மக்கள் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் எனவும் முழக்கமிட்டனர். அமைதியுடன் அனைவரும் அதனைக் கவனித்தனர். புரட்சியாளரின் பேச்சை முழுவதும் கவனமாகக் கேட்டனர்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு, லீ யுவான்-ஹங்கின் புரட்சிப் படையில் சேர்ந்து கொள்வதென மாசே-துங் தீர்மானித்தார். வகுப்பு மாணவரிடையே செலவுக்குப் பணம் திரட்டிக் கொண்டு மற்ற மாணவ நண்பர்களுடன் அன்னோவுக்குச் செல்வதென முடிவு செய்தனர். அன்னோவில் மழை பெய்யும் என்பதை அறிந்து மழை ஆடைகள் பெறுவதற்காகப் படை வீரர்களிடம் சென்றனர்.

அங்கே பரபரப்பாக இருந்தது. முதல் தடவையாகப் போர் வீரர்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகள் கொடுக்கப் பட்டிருந்தன. குண்டுகள் தெருக்களில் மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன.

புரட்சியாளர்கள் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். சாங்ஷாவின் மதில் சுவரோரம் பெரிய சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சீனத் தொழிலாளர்கள் போரில் ஈடுபட்டனர். உயரமானதொரு இடத்திலிருந்து போரினை நேரில் பார்த்துக் கொண்டிருந்தார் மாசே-துங். சண்டை முடிந்த பிறகு பள்ளிக் கூடத்துக்குத் திரும்பினார் அவர். அது படைகளின் பாதுகாப்பில் இருந்தது.

அதைத் தொடர்ந்த நாட்களில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. புரட்சியாளர்கள் கையொப்பமிட்ட அரசியல் திட்டங்கள், பாராளுமன்றம் உருவாக வேண்டு

மெனும் கோரிக்கைகள் மஞ்சூவில் இருந்தன. அவ்வாறு எழுதப் பெற்றவை இரத்தத்தால் முழுவதும் எழுதப் பெற்றிருந்தன. அதனை எழுதியவர் சூ-டெ-லீ என்பவர். அவர் சோவியத்தில் கல்வி ஆணையாளராகப் பிறகு இருந்தார். அவர் தமது விரலை வெட்டிக் குருதியால் புரட்சிச் சொற்களைத் தீட்டினார். அது இவ்வாறு தொடங்கிற்று: 'பாராளுமன்றம் தொடங்கப் பெறுதல் வேண்டும். நான் என்னுடைய விரலை வெட்டிக் கொண்டு எழுதி விடை பெறுகிறேன்—'

புதிய அரசாங்கம் நெடுநாள் நீடிக்கவில்லை. நிலப்பிரபுக்களும் படைத் தலைவர்களும் அதனை வீழ்த்திவிட்டனர்.

## 6

மாணவர் பலர் படையில் சேர்ந்து கொண்டிருந்தனர் இப்பொழுது. மாணவர் படை ஒன்றும் உருவாக்கப் பெற்றது. அதனை மாசே-துங் விரும்பவில்லை. அதனுடைய அமைப்பு குழப்பமானது என எண்ணினார் அவர். அதனால் வழக்கமான படையிலேயே சேர்ந்து புரட்சியை முடிவுக்குக் கொண்டு வர எண்ணினார்.

அவருக்கு மாத ஊதியம் ஏழு டாலர். உணவுக்கு இரண்டு டாலரும் தண்ணீருக்கு விலையும் கொடுக்க வேண்டியிருந்தது. மீதி பணம் செய்தித்தாள் வாங்க செலவாயிற்று. ஒன்றில், சோஷலிசம் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. அப்பொழுது தான் முதன் முறையாக அச் சொல்லை அவர் அறிந்தார். அதனைப் பற்றி மற்ற மாணவர்களுடனும் போர் வீரர்களுடனும் வாதிட்டார், அதன் பொருளைப் பற்றிப் பேசினார்.

சோஷலிசத்தைப் பற்றி வெளிவந்த சில வெளியீடு களையும் அவர் படித்தார். தம்முடைய மாணவத் தோழர் களுக்கு அதனைப் பற்றி மிக்க ஆர்வத்துடன் கடிதங்கள் எழுதினார். மிகச் சிலரே அக்கருத்துகளை ஏற்றுக் கொண்டு பதில் எழுதினர்.

படையில் மாசே-துங்கின் கல்வி அறிவு அவருடைய தோழர்களால் பாராட்டப்பட்டது. நான்கிங் அரசாங்கம் கலைக்கப்பட்டது. அத்துடன் புரட்சி முடிந்து விட்டதாக எண்ணிப் படையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார் மாசே-துங். மீண்டும் புத்தக உலகத்திற்குள் நுழைந்து கொள்ள விழைந்தார். அரையாண்டுக் காலமே அவர் படை வீரராக இருந்தார்.

பள்ளிக்கூட விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளி வந்தன. தம்முடைய படிப்புக்கு ஏற்ற பள்ளிக்கூடம் எது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை அவரால். என்ன செய்வதென்றும் தெரியவில்லை.

காவலர் பயிற்சிப் பள்ளி (போலீசு) ஒன்றின் விளம் பரத்தைக் கண்டார் அவர். அதில் சேர்ந்து படிக்க எண்ணினார். 'சோப்புத் தயாரிப்பு' கற்பிக்கும் பள்ளிக்கூட விளம்பரம் ஒன்றையும் கண்டார். உடனே, காவலர் பள்ளியில் சேராமல் சோப்புத் தயாரிப்புப் பள்ளியில் சேர்வதற்கு முயன்றார். அதற்குக் கட்டணம் கிடையாது. தங்குமிடம் கொடுப்பார்கள், சிறிதளவு ஊதியமும் கிடைக்கும். அது மிகவும் கவர்ச்சியான ஆர்வம் தூண்டும் விளம்பரமாக இருந்தது. சமுதாயத்துக்குச் சோப்பு தயாரித்துக் கொடுத்துத் தொண்டு செய்யலாம் எனவும், நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் எனவும், மக்களைப் பணக்காரர் ஆக்கிடும் எனவும் விளம்பரம் செய்யப் பெற்றிருந்தது. காவலர் பள்ளியில் சேரும்

எண்ணத்தைக் கைவிட்டுச் சோப்பு தயாரிப்பாளராவதற்கு முடிவு மேற்கொண்டார் மாசே–துங். அப்பள்ளியில் பதிவு செய்து கொண்டார்.

அப்பொழுது மாசே–துங்கின் நண்பன் ஒருவன் சட்டக் கல்விப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிக்குமாறு வற்புறுத்தினான் அவரை. அந்த பள்ளியின் விளம்பரத்தையும் அவர் படித்தார். அதுவும் கவர்ச்சியான ஆளைச் சுண்டியிழுக்கும் விளம்பரம். அப்பள்ளியில் சட்டம் படித்தால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு நீதிபதி ஆகலாம். நியாய சபைகள் நடத்தலாம். அவருடைய நண்பனும் பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் புகழ்ந்துரைத்தான்.

விளம்பரங்களை எல்லாம் குறிப்பிட்டு வீட்டுக்குக் கடிதம் எழுதினார் மாசே–துங் பணத்துக்காக. 'நீதிபதி ஆகப் போகிறேன்' 'உயரப் பறக்கப் போகிறேன்,' என்றெல்லாம் ஆசைக்காட்டி எழுதினார். பள்ளிக்கூடத்திலும் பதிவு செய்து விட்டார் டாலர் செலுத்தி. பெற்றோரிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருந்தார்.

மீண்டும் ஒரு விளம்பரம்—வணிகவியல் பள்ளிக்கூடம் அது. மற்றொரு நண்பன் பரிந்துரை செய்தான். நாடு பொருளாதாரப் போரில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றிட சிறந்த பொருளாதார அறிஞர்கள் தேவை. அவனுடைய பேச்சும் கவர்ந்தது மாசே–துங்கை. மற்றொரு டாலர் செலவாயிற்றுபதிவுக்காக. உடனே அவர் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டார் மாணவராக, அந்த வணிகவியல் நடுநிலைப் பள்ளிக் கூடத்தில்.

ஆயினும் விளம்பரங்கள் பார்ப்பதை அவர் நிறுத்திவிட வில்லை.

ஒருநாள் உயர்நிலை வணிகவியல் பொதுபள்ளிக் கூடத்தின் விளம்பரத்தைக் கண்ணுற்றார் அவர். அது அரசினர் பள்ளிக்கூடம். ஆரவாரமான விளம்பரம். பல்வேறு துறைகளில் படிப்பு இருந்தது அங்கே. ஆசிரியர்கள் பலதுறை வல்லுநர்கள். ஒரு வணிகவியல் திறமையாளராக ஆவதற்கு அந்தப் பள்ளியில் சேர்ந்து படிப்பதே சிறந்தது எனக் கருதினார் அவர். அங்கே ஒரு டாலர் செலுத்திப் பதிவு செய்து கொண்டார். பிறகு தந்தைக்கும் கடிதம் எழுதினார்.

தந்தைக்கு மிகுந்த மகிழ்ச்சி. வியாபார அறிவு பெறுவதை வரவேற்றார் அவர். மாசே–துங் அந்தப் பள்ளியில் சேர்ந்தார்–ஒரு திங்கள் இருந்தார்.

அங்கே எல்லாமே ஆங்கிலத்தில் கற்பிக்கப் பெற்றன. மற்ற மாணவருடன் ஒப்பிடும் போது மாசே–துங்கின் ஆங்கில அறிவு குறைவு. எழுத்துக்குமேல் ஒன்றும் தெரியாது. மேலும் ஆங்கில ஆசிரியரும் அங்கே கிடையாது. அதனால் மனம் வெறுத்துப் போன மாசே–துங் அத்திங்கள் முடிவில் வேறு விளம்பரங்களை அலசிப் பார்க்கத் தொடங்கினார்.

அடுத்த கல்வி வேட்டையில் அவருடைய தீரச்செயல் முதல் மாநில நடுநிலைப் பள்ளியாகும். ஒரு டாலர் கட்டணப் பதிவு; நுழைவுத் தேர்வு; முதலிடத்தில் தேர்வுற்று வெற்றி, மற்ற மாணவர்களை விட.

அது பெரிய பள்ளிக்கூடம். எண்ணற்ற மாணவர்கள். பட்டம் பெற்றோரும் எண்ணற்றோர். சின ஆசிரியர் ஒருவர் மாசே–துங்குக்குப் பெரிதும் உதவி செய்தார். ஆசிரியர்க்கு மாசே–துங்கின் இலக்கிய அறிவு மிகவும் பிடித்துவிட்டது. அவர் மாசே–துங்குக்கு 'பேரரசுகளும் அவற்றின் குற்றங்களும்', என்ற ஒரு புத்தகத்தைப் படிக்க கொடுத்தார்.

இந்தக் காலக்கட்டத்தில் சாங்ஷாவில் அரசாங்க ஏடு ஒன்று வெடிவைத்துத் தகர்க்கப் பட்டது. அது மாணவர்க்கு மிகச் சுவையான செய்தி.

படித்த பள்ளிக்கூடம் கசந்துவிட்டது மாசே-துங்குக்கு. கல்வியில் பாட திட்டங்கள் குறைவு; சட்ட திட்டங்கள் மிகுதி. ஆசிரியர் கொடுத்த புத்தகத்தைப் படித்த பிறகு தாமே தேர்ந்தெடுத்து நூல்களை விரும்பியவாறு படிப்பதே சிறந்தது என எண்ணினார் அவர். ஆறு திங்களுக்குப் பிறகு அவர் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திவிட்டார். தாமே தேர்ந்தெடுத்த படிப்பை மேற்கொள்ளத் தொடங்கினார்.

ஒவ்வொரு நாளும் கூனான் மாநில நூலகத்திற்குச் சென்று படிக்கத் தொடங்கினார். ஒழுங்காகவும் மனச் சாட்சிப்படியும் நூலகம் சென்று படித்தார்.

அரையாண்டுக் காலச் சுதந்திரப் படிப்பு அவருக்கு. அது மிகவும் பயனுள்ள படிப்பாக இருந்தது. காலையில் நூலகம் திறக்கும் போதே அவர் சென்று விடுவார். அங்கே நண் பகலுக்கு இரண்டு அரிசி இட்டளிகளை மட்டும் அண்டையில் வாங்கி உண்டார். நூலகம் மூடுகின்ற வரையில் அங்கேயே படித்தார். நாள்தோறும் இதே பழக்கம்.

சொந்தக் கல்வியில் அவர் கற்றவை ஏராளம். உலகப் பூவியலையும் உலகவரலாற்றையும் கற்றார். மிகுந்த ஆர்வத்துடன் உலக வரைபடத்தைப் பார்த்து வியர்ந்தார். ஆடம் ஸ்மித்தின் 'தேசங்களின் செல்வச் செழிப்புகள்' நூலைப் படித்தார். டார்வின் தத்துவ நூல்களையும், உயிரினத் தோற்றங்களையும் படித்தார், ஜான் ஸ்டூவர்டு மில்லின் நீதி நூல் விளக்க நூலையும் படித்தார்.

ரூசோவின் படைப்புகள், ஸ்பென்சரின் தர்க்கவியல், மாண்டெஸ்குயூவின் சட்டங்கள் ஆகியவற்றையும் படித்

தார் மாசே-துங். கவிதைகளையும் காவியங்களையும், பண்டைய கிரீசின் கதைகளையும் படித்தார். வரலாற்றையும் ருஷ்ய நில அமைப்பையும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு மற்றும் பல நாடுகளின் அமைப்பையும் ஆழ்ந்து படித்தார்.

சியாங்சியாங் மாவட்டத்தின் பாதுகாப்பு விடுதியில் சில காலம் வாழ்ந்தார் மாசே-துங். அங்கே பல போர்வீரர்கள் தங்கியிருந்தனர். ஓய்வு பெற்றவர்கள், ஊன முற்றவர்கள், உதவித் தொகை ஓரளவே பெற்ற போர்வீரர்கள் அவர்கள். மாணவர்களும் போர்வீரர்களும் எப்பொழுதும் அங்கே பூசலிட்டுக் கொண்டே இருந்தனர். ஓரிரவில் அது கைகலப்பில் முடிந்தது. போர்வீரர்கள் மாணவர்களைக் கொன்று விடவும் முன்வந்தனர். மாசே-துங் கழிவறைக்குள் ஓடி மறைந்து கொண்டார். சண்டை முடியும் வரை வெளியில் தலை காட்டவே இல்லை.

பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது அவருக்கு. பள்ளிக் கூடம் செல்லாததால் அவருடைய குடும்பத்தினர் பணம் கொடுக்க மறுத்து விட்டனர். தங்கியிருந்த விடுதியிலும் நீண்ட காலம் ஓட்ட முடியாது. எனவே, வேறு விடுதி தேடியாக வேண்டும். தம்முடைய வருங்காலத்தைக் கவலையுடன் அவர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. கல்வி கற்கவே தாம் தகுதியுள்ளவர் என எண்ணினார் அவர்.

மீண்டும் விளம்பரங்களைக் கவனிக்கத் தொடங்கினார் மாசே-துங். கூனான் பள்ளியின் விளம்பரம் அவரைக் கவர்ந்தது. அங்கே கல்விக் கட்டணம் கிடையாது. எளிய தங்குமிடம், எளிய உணவு, குறைந்த செலவு. அவருடைய இரு நண்பர்கள் அவரை வற்புறுத்தி அங்கே சேர்ந்து கொள்ள அழைத்தனர்.

சென்று திபேத்தின் எல்லைக்குப் போகிறார்கள். இது மாசே-துங்கின் உணர்வுகளைத் தூண்டிற்று.

அந்த மாணவர்களைப் பின்பற்ற ஆர்வமுற்றார் அவர். ஆனால், பணமில்லை அவரிடம். முதலில் கூனானில் பயணம் புறப்பட்டு விடவேண்டும் என எண்ணினார்.

அடுத்த கோடையில் கூனான் மாநிலத்தைக் கடந்து செல்லக் கால்நடையாகப் புறப்பட்டார் மாசே-துங். ஐந்து 'நாடு'கள் வழியே சென்றார். மற்றொரு மாணவத் தோழனும் அவருடன் சேர்ந்து கொண்டான். ஒரு செப்புக் காசையும் செலவிடாமலே அவர்கள் சென்றார்கள். உழவர்கள் அவர்களுக்கு உணவளித்தனர். உறங்க இடமளித்தனர். எங்கே சென்றாலும் அன்பும் ஆதரவும் வரவேற்பும் கிடைத்தன.

அவருக்குத் துணையாக வந்த மாணவனின் பெயர் சியாவோ யூ. அவன் பிற்காலத்தில் நாங்கிங்கில் அதிகாரியானான். பீக்கிங் அரண்மனை பொருட்காட்சி சாலையின் பொறுப்பாளராகவும் பதவி பெற்றான். பொருட்காட்சி சாலையின் விலை மதிப்பற்ற சில பொருள்களை விற்று விட்டு 1934-ல் அந்தப் பணத்துடன் தலைமறைவாகிப் போனான்.

# 7

சமுதாயப் பணிக்காகவும், நெருங்கிய நட்புக்காகவும் தோழர்கள் சிலர் சேர்ந்தால் நலம் பயக்கும் நன்மைகள் செய்ய எனக் கருதினார் மாசே-துங். அதனால் சங்ஷா செய்தித்தாளில், சமுதாய உணர்வுள்ள வேலைகளுக்கு

இளைஞர்கள் தேவை எனவும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் ஒரு விளம்பரம் செய்தார்.

நாட்டுக்குத் தியாகம் செய்யக்கூடிய நிலையான உறுதி வாய்ந்த இளைஞர்களாக இருத்தல் வேண்டும் எனவும் அறிவித்திருந்தார்.

இந்த விளம்பரத்திற்கு மூன்றரை பதில்கள் வந்தன. ஒன்று லியூசியாங் லங் என்பவரிடமிருந்து வந்தது. அவன் பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்து பிறகு அதற்குத் துரோகம் இழைத்தான். இரு இளைஞர்கள் பிற்காலத்தில் தீவிர பிற்போக்குவாதிகளாக மாறினார்கள். இன்னொரு அரை ஆள் மாசே-துங் கூறியவற்றை ஆர்வமுடன் கேட்டுவிட்டு எந்த முடிவுக்கும் வராமல் போய் விட்டான்.

ஆனால் காலப் போக்கில் மெல்ல மாசே-துங்கிடம் மாணவர் குழுவினர் சேர்ந்தனர். அவர்கள் சோர்வற்ற செயல் திட்டங்களுடன் எதற்கும் துணிந்தவர்கள். அவர்களுக்குக் காதலிக்க நேரமில்லை. காதல் விளையாட்டுகளில் ஈடுபடவில்லை. தம் நலம் காத்திடவோ பேசிடவோ நேரம் கிடையாது அவர்களுக்கு. அற்பமான பேச்சுகளுக்கும் பயனில் சொற்களுக்கும் காலத்தைப் பாழாக்குதல் தகாதெனக் கருதினர். இளைஞர்களின் நேரமும் நினைப்பும் உயர்ந்த இலட்சியங்களுக்காகக் காத்திருப்பவை என நம்பினர். பெண்களைப் பற்றியும் தனிப்பட்ட சொந்த வாழ்வு பற்றியும் பேசுவதை விட அறிவு வளர்ச்சிக்காகச் செலவிடும் நேரமே சிறந்தது என எண்ணினர். மாசே-துங்கும் பெண்களிடம் பால் உணர்வில் நாட்டம் கொண்டிருக்கவில்லை. இளைஞர்களின் இயல்பு அது என்ற போதிலும் அதை விட உயர்ந்த குறிக்கோளை நெஞ்சில் சுமந்தவர்கள் அவர்கள்.

அதில் வியப்புக்குரிய ஒன்றும் இருந்தது. மாசே–துங்கின் பெற்றோர் அவருடைய பதினான்காம் வயதிலேயே அவர்க்கு இருபது வயது பெண்ணை மண முடித்து வைத்து விட்டனர். ஆனால், அவர் அந்தப் பெண்ணுடன் வாழ வில்லை. அந்த வாழ்க்கையைத் தொடரவும் இல்லை. அவளை அவர் தம் மனைவியாகவே ஏற்றுக்கொள்ளவில்லை. அவளுடைய நினைவே அவர்க்கு இல்லை. பெண்களிடம் ஆர்வம் கொண்டு அலைந்து பழகுவது அந்த வயது இளைஞர்களின் இயற்கை என்ற போதிலும் அவருடைய தோழர்கள் அந்தப் பேச்சையே புறக்கணித்திருந்தார்கள். நாள்தோறும் நிகழும் சொந்த வாழ்க்கையின் இயல்பான நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் எண்ணுவதில்லை.

ஒரு முறை மாசே–துங்கின் தோழன் ஒருவன் தன்னுடைய வீட்டில் புலால் வாங்கியதைப் பற்றி பேசினான். அவர்க்கு முன்னால் வேலையாளை அழைத்துப் புலால் வாங்கிய முறையைக் கேட்டான். பிறகு மேலும் சிறிது வாங்கி வருமாறு கட்டளையிட்டான். இது மாசே–துங்குக்கு வெறுப்பையும் அதிர்ச்சியையும் அளித்தது. அதன் பிறகு அவனை அவர் பார்ப்பதை அடியோடு தவிர்த்து விட்டார்.

அவருடைய தோழர்களும் அவரும் உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் என்று பெருமை மிகுந்தவற்றையே பேசினார்கள்—மனிதனின் இயல்புகள், இயற்கைக் குணங்கள், சமுதாய அமைப்பு, சீனத்தின் சமுதாயங்கள், உலகம், அண்டங்கள் ஆகியவை பற்றி பேசினார்கள்.

உடல் வளத்தையும் வலிமையையும் பெறுவதற்காக உடல் பயிற்சியும் பெற்றார்கள் அவர்கள். மழைக்கால விடுமுறை நாட்களில் அவர்கள் வயல்களில் நடந்தார்கள். மலைகளின் மேலேறி இறங்கி ஓடினார்கள், நகரச் சுவர்

களில் ஏறிப் பாய்ந்து சென்றார்கள். சிற்றோடைகள் ஆறுகளில் நீந்தினார்கள். மழை பெய்தால் ஆடைகளைக் களைந்துவிட்டு மழையில் குளித்தார்கள். ஞாயிற்று ஒளியின் கொடிய வெயிலிலும் ஆடைகளை நீக்கிவிட்டு உடலில் வெயில் தாக்க நடந்து 'வெயில் குளியல்' என்று கூறிக் கொண்டார்கள். தென்றல் வீசிய காலங்களில் புதிய விளையாட்டு என்று 'காற்றுக்குளியல்' என முழக்க மிட்டார்கள். பனி தொடங்கிவிட்ட பிறகு திறந்த வெளிகளில் கிடந்து உறங்கினார்கள். குளிர்ந்த நவம்பர் திங்களில் தண்ணென்ற ஆறுகளில் பாய்ந்து நீந்தினார்கள். எல்லாம் 'உடற்பயிற்சி' என்ற தலைப்பில் நடந்தவையாகும்.

இவ்வாறு உடல் வலிமை பெற்றதால் பிற்காலத்தில் தெற்குச் சீனாவில் படைகளின் பவணி மாசே–துங்குக்கு எளிதாயிற்று; கியான் ஷியிலிருந்து வடமேற்கே சென்ற அவருடைய நெடும் பயணத்திற்கு ஏற்ற பயிற்சியாக இருந்தது.

பிற நகரங்களிலும் பேரூர்களிலும் எண்ணற்ற மாணவர் களுடனும் நண்பர்களுடனும் கடிதத் தொடர்பு கொண்டார் மாசே–துங். அவர்களுடைய நெருக்கம் மிகுதியாயிற்று. எல்லாரையும் ஒருங்கிணைக்கும் அமைப்பு ஒன்று தேவை என உணர்ந்தார் அவர். 1917–ல் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து, 'புதிய மக்களின் கல்விச்சங்கம்' என்ற அமைப்பினை உருவாக்கினார். எழுபது, எண்பது உறுப்பினர் அதில் இணைந்தனர். அவர்களில் பலர் பிற்காலத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சியிலும் சீனப் புரட்சியின் வரலாற் றிலும் புகழ் பெற்று விளங்கினர். அவர்களில் பெரும்பாலோர் உயிர்த் தியாகம் செய்து புரட்சிகளில் மறைந்தனர்.

மற்றொரு சங்கம் தோற்றுவிக்கப்பட்டது 'சமுதாய நலக்குழு' என்ற பெயரில். அதில் பங்கு பெற்றோரும்

பிற்காலத்தில் பொதுவுடைமை வாதிகளாக விளங்கினர். பலர் சியாங்–கே–ஷேக்கினால் கொல்லப்பட்டனர். எனினும் தொடர்ந்து அதே முறையில் வெவ்வேறு சங்கங்கள் தோன்றின.

அப்பொழுது மாசே–துங்கின் மனநிலை பல்வேறு எண்ணங்களின் தொகுப்பாக இருந்தது–விடுதலை, மக்கள் ஆட்சிச் சீர்திருத்தம், பொதுவுடைமைக் கனவுகள்... பத்தொன்பதாம் நூற்றாண்டின் குடியாட்சி என்பதிலும் கற்பனை வடிவான சமுதாயத்திலும் பழங்காலச் சுதந்திரத் திலும் அவருக்கு ஆவல் மிகுந்திருந்தது. சர்வாதிகாரத்துக்கும் கொடுங்கோன்மைக்கும் எதிர்ப்பாக அவருடைய எண்ணக் கனவுகள் இருந்தன.

எல்லாம் கல்லூரி நாட்கள்.

1912–ல் அவர் கல்லூரியில் சேர்ந்தார். 1918–ல் பட்டம் பெற்றார்.

சாங்ஷா பள்ளிக்கூடத்தில் மாசே–துங் படித்த ஆண்டு களில் அவர் செலவழித்த மொத்தத் தொகை பதிவுச் செலவுடன் சேர்த்து 160 டாலர் மட்டுமே. இதில் மூன்றில் ஒரு பங்கை எண்ணற்ற செய்திஏடுகள் வாங்கவும் புதிய புத்தகங்கள் இதழ்கள் வாங்கவும் செலவிட்டார். இதனை வீண் செலவு என்று அவருடைய தந்தை அவரை வசை பொழிந்தார். வீணான காகிதங்களில் வீண் செலவு செய்வ தாகக் குற்றம் சாட்டினார். ஆனால் மாசே–துங் அத்தகைய செலவுகளைக் கட்டுப்படுத்தவே இல்லை. நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தார். பீக்கிங், ஷாங்கை, கூனான் ஆகிய இடங்களிலிருந்து வெளிவந்த ஏடுகளைப் படிப்பதை நிறுத்தவே இல்லை.

அவருடைய பள்ளிக்கூடப் படிப்பின் கடைசி ஆண்டில் அவருடைய அன்னை மறைந்தார். அதன் பிறகு அவர்

வீட்டுக்குத் திரும்பும் ஆர்வமும் மறைந்து விட்டது. அந்தக் கோடை காலத்தில் அவர் பீக்கிங் என்றழைக்கப் பெற்ற பீப்பிங் நகருக்குச் செல்ல தீர்மானித்தார். மாணவர் பலர் பிரான்சுக்குச் சென்று 'வேலையில் கல்வி பெறும்' திட்டத்தில் சேர்ந்து கொள்ள திட்டமிட்டிருந்தனர். சீன இளைஞர் களை அத்தகைய திட்டத்தில் சேர்த்துக் கொள்ள உலகப் போரின் போது பிரான்சு முடிவு செய்திருந்தது. சீனாவை விட்டுப் புறப்படுவதற்கு முன் பீப்பிங்கில் பிரஞ்சு மொழியைக் கற்பதற்குத் திட்டமிட்டிருந்தனர் மாணவர்கள். அவர்களுக்கு உதவி செய்தார் மாசே–துங்.

கூனானின் மாணவர்களுடன் பீக்கிங் சென்றார் அவர். ஆனால் அவர் ஐரோப்பா செல்ல விரும்பவில்லை. தம்முடைய நாட்டையே முழுமையாக அறிந்து கொள்ள வில்லை இன்னமும் என்ற குறை அவருக்கு. அதனால் சீனாவில் பயனுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். பிரான்சுக்குச் சென்று கல்வி பெற்ற பலர் பிறகு பெரிய பதவிகளில் ஏறிக் கொண்டனர். ஆனால், மாசே–துங் தமக்கு வேறு பல திட்டங்கள் காத்திருந்ததாக எண்ணினார்.

பீப்பிங் மிகவும் விலை உயர்வுள்ள நகரமாகையால் மாசே–துங் செலவுக்குப் பணம் இல்லாமல் வருந்தினார். நண்பர்களிடம் கடன் வாங்கிதான் அங்கே சென்றிருந்தார். அதனால் உடனே ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டிய தாக இருந்தது.

யாங் சென் சீ என்பவர் மாசே–துங்கின் இதிகாச ஆசிரியராகப் பள்ளிக்கூடத்தில் பணியாற்றிப் பிறகு பீக்கிங்கில் பேராசிரியராக விளங்கினார். அவரிடம் தமக்கு ஒரு வேலையின் தேவையை எடுத்துக் கூறினார் மாசே–துங். அவர் பல்கலைக்கழகத்தின் நூலகரிடம் அவரை அறிமுகப்

படுத்தினார். லீடா சோ என்பவர் அந்த நூலகர். அவர் பிறகு சீனாவின் பொதுவுடைமைக் கட்சியைத் தோற்று வித்து மரணதண்டனை பெற்றார். லீடா சோ மாசே-துங்குக்குத் துணை நூலகர் வேலை கொடுத்தார். திங்களுக்கு எட்டு டாலர் ஊதியம் கிடைத்தது.

மாசே-துங்கின் வேலை மிகவும் கீழ் நிலையில் இருந்தது. மக்கள் அவரைப் பொருட்படுத்துவதில்லை. நூலகத்திற்கு வருபவர்களின் பெயரைப் பதிவேட்டில் குறித்து வைப்பது தான் அவர் வேலை. அதனால் அவரை ஒரு மனிதனாகவே எண்ணுவதில்லை அவர்கள். மறுமலர்ச்சி இயக்கத்தில் புகழ் பெற்று விளங்கிய சிலரை மாசே-துங் கேள்வியுற்றிருந்தார். அவர்களை மதித்தும் அவர்களிடம் ஆர்வம் கொண்டு மிருந்தார். அத்தகைய சிலர் நூலகத்திற்கு வந்து கொண்டிருந்தனர்-பூ சூ நீன், லோசியா லங்/போன்றோர். அவர்களிடம் அணுகி அரசியல், கலாசாரம் ஆகியவை பற்றி பேச முயன்றார் மாசே-துங். ஆனால், அவர்கள் பேச நேரமில்லாதவர்கள். சீனத் தென்னகத்துப் பேச்சில் ஒரு துணை நூலகர் கூறும் கருத்துகளை அவர்கள் நின்று கேட்க நேரமும் இல்லை, பெரிதுபடுத்தவும் இல்லை.

ஆனால் ஊக்கம் குன்றவில்லை, மாசே-துங். தத்துவச் சங்கத்திலும் பத்திரிக்கையாளர் சங்கத்திலும் அவர் சேர்ந்து கொண்டார். அதனால் பல்கலைக் கழக வகுப்புகளில் அவர் பங்கு பெற முடிந்தது. அங்கு அவர் சந்தித்த பலர் பிறகு புரட்சிகளில் பங்கு பெற்றனர். சிலர் பெரிய பதவிகள் பெற்று உயர்ந்தனர். யாங்கை யூ என்ற பெண்ணைச் சந்தித்து அவர் காதல் கொண்டதும் இங்கே தான். அவள் இதிகாச ஆசிரியரும் அவருக்கு வேலை வாங்கிக் கொடுத்தவரும் நண்பருமான யாங்சென்சீயின் மகள்.

மாசே-துங் அரசியலில் மிகுந்த ஆர்வம் கொள்ளத் தொடங்கினார். அவருடைய உள்ளம் மேலும் மேலும் தீவிர

வாதத்தில் ஈடுபாடு கொண்டது. ஆனால் வழி முறைகளில் குழப்பம் இருந்தது. பாதை எது என்றே தெரியவில்லை. வன்முறைகளைப் பற்றிய சில ஏடுகளை அவர் படித்தார். அவர் நெஞ்சம் அவற்றில் காலூன்றியது. தன்னுடன் படித்த மாணவருடன் வன்முறை ஆட்சியைப் பற்றி வாதம் புரிந்தார். அது சீனாவில் வெற்றி பெறுமா என்பதையும் பேசினார். அந்த நேரத்தில் அவற்றின் திட்டங்களையும் அவர் ஆதரித்தார்.

பீக்கிங் வாழ்க்கை மாசே–துங்குக்கு மிகவும் கடினமாக இருந்தது. அழகிய பழைமையான அந்த நகரத்தில் அவர் தாழ்ந்த நிலையில் துன்புற்றார். மூன்று கண் கிணறு என்று அழைக்கப்பட்ட இடத்தில் எழுவருடன் ஒரு சிறிய அறையில் வசித்து வந்தார். மூச்சு விடக்கூட இடமில்லாத அறை அது. திரும்பிப் படுக்க முடியாது. ஆனால் பூங்காக்களிலும் பழைய அரண்மனைத் திடல்களிலும் வடக்கு இளவேனில் காற்று வீசிற்று. வடக்குக் கடலில் பனி இன்னமும் உருகாத நிலையில் வெண்ணிறப் பூக்கள் மரங்களில் குலுங்கியதை அவர் கண்டார். கவிதைகளிலும் காவியங்களிலும் புகழ்ந் துரைக்கப்படும் காட்சிகளின் நினைவுகளோடு பனி தூங்கிய செடி கொடிகளைக் கண்டார். பத்தாயிரம் மரங்கள் பூத்துக் குலுங்கிய வைரமயமான காட்சிகளை நினைவு கூர்ந்தார். பீக்கிங் நகரின் எண்ணற்ற மரங்களின் எழிலை வியப்புடன் பாராட்டி மகிழ்ந்தார்.

1919–ன் தொடக்கத்தில் பிரஞ்சு மாணவர்களுடன் சேர்ந்து மாசே–துங் ஷான்கை சென்றார். அவரிடம் டைன்ச்சின் செல்வதற்கு மட்டுமே அனுமதிச்சீட்டு இருந்தது. அதற்கு அப்பால் எவ்வாறு செல்வது என்பது விளங்கவில்லை. ஆனால், ‘பயணம் செல்வோரைச் சுவர்க்கம் தடுத்துவிட முடியாது’ என்ற சீனப் பழமொழியின் படி ஒரு மாணவத் தோழனிடமிருந்து அவருக்குப் பத்து

டாலர் கடன் கிடைத்தது. அவருடைய பயணம் தொடர்ந்தது. நான்கிங் செல்லும் பாதையில் உலகம் புகழ் தத்துவ அறிஞர் கான்பூசியஸின் கல்லறைக்குச் சென்றார் அவர். அவருடைய மாணவர்கள் தங்களுடைய கால்களை நனைத்த சிறிய நீரோடையினைப் பார்த்தார். அந்தத் தத்துவ அறிஞர் பிறந்து வளர்ந்த சிறிய நகரத்தையும் பார்த்தார். அவர் நட்டதாகக் கருதப் பெற்ற மரத்தையும் அதற்கு அருகில் அவருக்காக எழுப்பப்பட்ட கோயிலையும் பார்த்தார். கான்பூசியஸின் மாணவர் யென் கூயி வாழ்ந்த இடங்களையும் கண்ணுற்றார். அங்கிருந்த புனித மலை மீதும் ஏறினார்.

ஆனால் அவர் பூக்கவ் என்ற ஊருக்குச் சென்ற போது அவரிடம் ஒரு செப்புக் காசும் இல்லை; பயணச் சீட்டும் இல்லை. அவருக்குக் கடன் கொடுப்பாரும் இல்லை. கொடுக்கக் கூடியவர்களிடம் பணமும் இல்லை. எப்படி ஊர் திரும்புவது என்றும் தெரியவில்லை. அதைவிட துன்பமாக அவருடைய காலணிகளை யாரோ திருடிச் சென்று விட்டனர். மீண்டும் அவர் எண்ணிக் கொண்டார்; 'பயணம் செல்வோரைச் சொர்க்கம் தடுத்துவிட முடியாது.'

'எண்ணியர் திண்ணியராக இருந்தால் எண்ணியர் எண்ணியாங்கு எய்துவர்.' அவருடைய எண்ணப்படியே நடந்தது. புகைவண்டி நிலையத்திற்கு வெளியே கூனானின் பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்தார். எதிர்பாராத நல்வாய்ப்பு. அந்த நண்பன் காலணிகள் வாங்க பணம் கொடுத்தான் கடனாக. ஷாங்கைக்குச் செல்ல சீட்டு வாங்கவும் போதுமான பணம் கொடுத்தான். அவ்வாறு அவருடைய பயணம் நிறைவேறிற்று. தம்முடைய புதிய காலணிகளைக் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டார்.

ஷாங்கையில் பணம் திரட்டி பிரான்சு செல்ல வேண்டிய மாணவர்களுக்கு உதவி செய்து அவர்களைக் கப்பல் ஏற்றி

அனுப்பிவிட்டு அவரும் சாங்ஷா திரும்பினார். கூனான் திரும்பி வரவும் போதுமான பணம் இருந்தது.

வடசீனாவுக்கும் பயணம் செய்திருந்தார் மாசே-துங். பை-ஹையின் வளைகுடாவின் பனி உறைந்த பகுதிமீது நடந்து சென்றிருக்கிறார். டங்டிங் ஏரியைச் சுற்றிலும் நடந்து திரிந்தார். பவோடிங்பூவின் மதிலையும் வலம் வந்தார். சூசௌ மதிலையும் சுற்றினார். நான்கிங் சுவரின் சுற்றுப் புறத்திலும் சென்றார். டாய்ஷான் மீது ஏறி கான்பூசியஸ் குகைக்கும் சென்று பார்த்தார். இவை எல்லாம் இளமைக்கால இலட்சியங்களாகவும் கூனானின் நடைப்பயணங்களைத் துணிகரமான தீரச் செயலாகவும் அவர் கருதினார்.

## 8

மாசே-துங் சாங்ஷா திரும்பியதும் அரசியலில் நேரடி பங்கு பெற்றார். நான்காம் மே கிளர்ச்சிக்குப் பிறகு மாணவர் அரசியல் ஈடுபாடுகளில் அவர் பெரும் பங்கு பெற்றார். கூனான் மாணவர் வெளியீடான ஸியாங் சியாங் ரெவியூ ஏட்டின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அந்த ஏடு தெற்குச் சீனாவின் மாணவர் கிளர்ச்சிகளுக்குத் தூண்டுதலாக இருந்தது. புதிய கலாச்சாரங்களையும் அரசியல் மாற்றங்களையும் கற்பிக்கும் அமைப்பாக இந்த கலாச்சாரப் புத்தகச் சங்கத்தை சாங்ஷாவில் தோற்றுவிக்கவும் மாசே-துங் உதவி செய்தார். இச்சங்கங்கள் மாணவர் ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் முனைப்புடன் நடத்தின. ஆனால், பகைவரின் வலிமை ஸியாங் சியாங் ரெவியூ ஏட்டினை வெளிவராமல் வீழ்த்தி விட்டது.

அதன் பின்னர் மாசே–துங் பீக்கிங் சென்று படை எதிர்ப்பு இயக்கத்தினைத் தொடங்கினார். அந்த இயக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் செய்தியாளர் தலைவராகப் பணியாற்றினார். அந்த இயக்கத்திற்குக் கூனான் பகுதிகளில் சில வெற்றிகள் கிட்டின. பகைவர் பிளவுற்று வலிவிழந்தனர்.

1919–ல் இரண்டாம் முறையாக ஷாங்கை சென்றார் மாசே–துங். பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியைப் பரப்பிய தலைவர்களில் சிலருடன் நட்பும் தொடர்பும் ஏற்பட்டது அவருக்கு:

கூனானின் தன்னாட்சிக்காகப் பாடுபட்ட சங்கம் ஒன்றில் அவர் தீவிர ஈடுபாடு கொண்டார். வட நாட்டுச் சீன அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் வெறுப்படைந்து விட்ட கூனான், பீக்கிங் ஆட்சியிலிருந்து விடுபட்டு முழு சுதந்திரம் பெற ஆர்வம் கொண்டது. சுதந்திரம் கிடைத்தால் புதிய அறிவியல் வளர்ச்சியில் முன்னேற முடியும் என்று நம்பிற்று. அதனால் சுதந்திரப் போராட்ட உணர்வு பரவிற்று. அந்தச் சுத்ந்திரத்திற்குப் பாடுபட்டார் மாசே–துங். அக் காலகட்டத்தில் அவர் அமெரிக்காவின் மன்றோ தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். திறந்த வெளியாக நாடு இருக்க வேண்டும் எனவும் எண்ணினார்.

கூனானின் சுதந்திரப் போராட்டத்தில் அதனுடைய தலைவராகச் செயல்பட்ட டான்யென் கெய் கூனானி லிருந்து விரட்டப்பட்டார். சோஷெங்டீ என்ற படைத் தளபதியே அவரை விரட்டியடித்துவிட்டுச் சுதந்திரப் போராட்டத்தைத் தம்முடைய கையில் எடுத்துக் கொண்டார். சுதந்திரத்துக்குத் தாமே தலைமை தாங்குவதாக நடித்துப் போராட்டங்களை நடத்தினார். தன்னாட்சி பெற்ற மாநிலங்களின் கூட்டாட்சி நாடாகச்

சீனா விளங்கவேண்டும் என்று கூறினார். ஆனால், அவர் அதிகாரத்துக்கு வந்த பிறகு சுதந்திரப் போராட்டங்களை அழித்து நசுக்கிவிடுவதற்கு முழு முயற்சியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

மாசே–துங்கின் குழுவினர் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்திட வேண்டுமென வற்புறுத்தினர். அரசாங்கத்தில் பங்கு பெற வேண்டும் எனக் கூறினர்; பொதுவில் சொல்ல வேண்டுமானால் முதலாளி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற ஆதரவு கொடுத்தனர்.

புதிய கூனான் என்ற செய்தி ஏட்டில் இத்தகைய சீர்திருத்தங்களை வற்புறுத்தி எழுதினர் மாசே–துங்கின் குழுவினர். பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளைத் தாக்கினர். நிலப்பிரபுக்களும் படைத்தளபதிகளின் நியமன உறுப்பினர்களும் கொண்டதாக இயங்கிற்று பாராளுமன்றம். அதனுடைய விளம்பரச் சுவரொட்டிகளையும் விளம்பரத் துணிகளையும் பலகைகளையும் வீழ்த்தி அழிக்கும் போராட்டங்களையும் மாசே–துங் குழுவினர் முன்னின்று நடத்தினர்.

பாராளுமன்றத்தின் மீது எடுக்கப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகள் ஆட்சியாளரை அச்சுறுத்திற்று. எனினும் காட்டிக் கொடுக்கும் துரோகியாகிவிட்ட வஞ்சகனான சோஹெங்டீ சுதந்திர உணர்வைக் கொன்றழித்ததுடன் அனைத்துச் சீர்திருத்தங்களையும் வீழ்த்திவிட முனைந்தான். அதனால் மாசே–துங் குழுவினர் தங்களுடைய எதிர்ப்புப் போராட்டங்களை அவனுக்கு எதிராகத் திருப்பி விட்டனர்.

1920–ல் ருஷிய அக்டோபர் புரட்சியின் மூன்றாமாண்டுக் கொண்டாட்டத்தைக் காவல் துறையினர் தடைசெய்தனர். போராட்ட வீரர்களில் சிலர் பொதுக்கூட்டத்தில் செங் கொடியை ஏற்றினர். அரசியல் அமைப்புச் சட்டப்படிப்

பேச்சுரிமை, கொடி ஏற்றும் உரிமை கூட்டத்திற்கு உரிமை அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறினர், போராட்ட வீரர்கள். ஆனால் சட்ட உரிமை சொல்லிக் கொடுப்பதற்காகத் தாங்கள் வரவில்லை எனவும் தங்களுக்கு உத்திரவிடப் பட்டதை நிறைவேற்றவே வந்திருப்பதாகவும் கூறிய காவலர்கள் ஆளுநர் சோஹெங்டீயின் ஆணையின்படி நடவடிக்கை எடுத்தனர்.

அந்த நேர முதல் பொது மக்களின் சொந்த செயல் திறன்படி பொது மக்களே கைப்பற்றிக் கொள்ளும் அதிகாரமே உருப்படியான சீர்திருத்தங்களைச் செய்ய முடியும் எனக் கருதினார் மாசே-துங்.

1920-ல் முதல் முறையாகத் தொழிலாளரை அரசியலுக் குப் பழக்கும் அமைப்பினைத் தொடங்கினார் மாசே-துங். அதற்கு மார்க்ஸ் கொள்கைகளையும் ருஷியப் புரட்சி வரலாற்றையும் தம்முடைய வழிகாட்டியாக எடுத்துக் கொண்டார்.

இரண்டாவது முறையாக அவர்பீக்கிங் சென்ற பொழுது ருஷியப் புரட்சியின் நிகழ்ச்சிகளைத் தேவையான அளவுக்குப் படித்தார். சீனமொழியில் சிறிதளவே கிடைத்த பொது வுடைமைக் கட்சியைப் பற்றிய எல்லா நூல்களையும் திரட்டிக் கொண்டார். மூன்று நூல்கள் சிறப்பாக அவருக்குக் கொள்கைத் தெளிவை அளித்தன. மார்க்ஸிசத்தில் நம்பிக் கையை ஊட்டின. ஒரு முறை அதனை ஏற்றுக் கொண்ட தற்குப் பிறகு உள்ளத்து ஊசலாட்டம் அவருக்கு ஏற்படவே இல்லை. கொள்கைகளில் வலிமையும் உறுதியும் பிறந்தது. ‘கம்யூனிஸ்ட் மேனி பெஸ்டோ’, என்ற நூலே சீனத்தில் மொழி பெயர்க்கப்பட்ட முதல் நூலாகும். ‘வர்க்கப் போராட்டம்’ என்பது அவரை வழிநடத்திய இரண்டாவது நூல், ‘சோஷலிசத்தின் வரலாறு,’ மூன்றாவது நூல்.

1920–ன் கோடை காலத்தில் எண்ணங்களிலிருந்து ஓரளவு செயலுக்கு நடை போட்டார் மாசே–துங். ஒரு மார்க்ஸிஸ்ட்டின் செயல்பாட்டில் ஈடுபடத் தொடங்கினார். தம்மைத் தாமே தாம் ஒரு மார்க்ஸிஸ்ட் என்று கருதிக் கொண்டார். அதே ஆண்டில் யாங்கை கூய் என்ற மங்கையை அவர் மணந்து கொண்டார்.

யாங்கை கூய் எல்லா வகையிலும் அறிவிற் சிறந்தவர். பீக்கிங் தேசிய பல்கலைக்கழகத்தின் மாணவி. பிறகு சீனப் பெரும் புரட்சியில் இளைஞர் தலைவியாகச் செயலாற்றியவர். பெண்கள் பொதுவுடைமைக் கட்சியின் தீவிர செயல் திறன் படைத்தவர். அவர் மாசே–துங்கை மணந்து கொண்டதை இலட்சியக் காதலாக இளைஞர் கொண்டாடினர். கூனானில் அவர்களுடைய திருமணம் பெருமையாகப் பேசப்பட்டது. ஒருவர்க்கொருவர் தியாக உணர்வோடு அத்திருமணம் நடைபெற்றது. உண்மையான – புரட்சி எனும் சொல்லுக்கு உண்மைப் பொருளாக விளங்கிய அந்தப் புரட்சித்தலைவி 1930–ல் ஹோசென்னால் கொல்லப் பட்டார். அது தனி வரலாறு.

'மார்க்சிஸ்ட்'டான மாசே–துங் கம்யூனிஸ்ட் ஆக வில்லை. காரணம் அக்காலத்தில் சீனாவில் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப் பெறவில்லை. 1919–20–ல் சென்டுசியூ, மார்லின், டிசன் யூவோசீ ஆகியோர் ஆங்காங்கே சிறு குழுக்களாக பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்பினர். மாணவர் குழுவினர் பாரீஸ் நகரில் கூடிப் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கிட முடிவு செய்தனர்.

பதினாறு ஆண்டுகள் குழந்தைப் பருவத்திலேயே வளர்ந்து வந்திருந்தாலும் சீனப் பொதுவுடைமைக் கட்சி குறிப்பிடத் தக்க செயல்களைச் செய்தது. ருஷியாவுக்கும் வெளியே உலகத்திலேயே வலிமையான கட்சியாக அப்போது

அது விளங்கிற்று. வலிமையான படைவீரர்களைக் கொண்ட கட்சியும் அதுதான்.

1921-மே திங்களில் மாசே-துங் பொதுவுடைமைக் கட்சியின் தொடக்க விழாவுக்காக ஷாங்கை சென்றார். சீனாவின் சிறப்பு மிக்க தலைவர்களான சென்டூசியூவும் லீடா சோவும் அந்த விழாவின் காரணத் தலைவர்களாகப் பணியாற்றினர். லீடா சோவிடம்தான் பீக்கிங்கில் துணை நூலகராக மாசே-துங் பணியாற்றியபோது மார்க்சிசம் சார்பாக மாறினார். சென்டூசியூவும் அவருடைய மன மாற்றத்துக்குக் காரணமாவார்.

அக்டோபர் திங்களில் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலக் கிளை முதல் முறையாக கூனானில் தொடங்கப் பட்டது. மாசே-துங் அதில் உறுப்பினரானார். பிற மாநிலங்களிலும் நகரங்களிலும் கட்சிக் கிளைகள் தொடங்கப்பட்டன. அவற்றில் பணியாற்றிய பலர் காலப் போக்கில் மரண தண்டனைப் பெற்று கொலையுண்டனர்.

பிரான்சிலும் சீனப் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப் பட்டது. அதில் தொழிலாள மாணவர்கள் உறுப்பின ராயினர். அதைத் தொடங்கியவர்களில் சூ என் லாய், லீலீசான் ஷாங் சென்யூ, சைஹோஷெங்கின் மனைவி ஆகியோர் சிறப்பானவர்கள். அதே போல ஜெர்மனியிலும் ஜப்பானிலும் தொடங்கப்பட்டது.

1922-ல் கூனானின் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளராக மாசே-துங் பொறுப்பு வகித்தார். இருபதுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் உருவாகியிருந்தன. சுரங்கம், புகைவண்டிகள், நகராட்சி, அச்சகம், அரசாங்க நாணயத் தயாரிப்பு ஆகியவற்றின் தொழிலாளர்கள் அவற்றில் பங்கு பெற்றனர். மழைக்காலத்தில் தீவிரமான தொழிலாளர் இயக்கம் தொடங்கிற்று. பொதுவுடைமைக் கட்சி

பெரும்பாலும் மாணவர்களிடத்தும் தொழிலாளர்களிடத்தும் பார்வையைச் செலுத்திற்று. சிறிதளவே விவசாயிகளிடம் ஊடுருவிச் சென்றது. பெரிய சுரங்கங்களில் அமைப்புகள் உருவாகி விட்டன. மாணவர்கள் பெரும்பங்கு வகித்தனர். மாணவர்களும் தொழிலாளர்களும் போராட்டங்களில் முன்னணியில் இருந்தனர்.

அந்த 1922 மழைக் காலத்தில் கூனானில் ஆளுநர் சோஹெங் டீ கூனான் தொழிலாளர் இருவர்க்கு மரண தண்டனை விதித்தார். அதனால் போராட்டம் தீவிரமாகிப் பரவிற்று. கொலை செய்யப்பட்ட இருவரில் ஒருவர் வலது சாரி தொழிலாளர் இயக்கத்தின் தலைவர். அவ்வியக்கம் தொழிற்கல்வி மாணவரிடையே வேரூன்றி இருந்தது. மாசே-துங்கின் இயக்கத்திற்கு எதிரானது. ஆயினும் மரண தண்டனைக்கு எதிர்ப்பாக அவர்களுடன் இணைந்து போரட்டங்களை நடத்தினர். மேலும் பல போராட்டங் களிலும் அவர்களுடன் இணைந்து செயலாற்றினர். சோ ஹெங்டீயின் கொடுங்கோல் செயல்களை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் மாசே-துங் முனைந்து நின்றார்.

தொழிலாளர் இயக்கங்களை வலிமை பெறச் செய்ய அவர் பாடுபடத் தொடங்கினார். ஊதிய உயர்வுக்காகவும் நல வாழ்வுக்காகவும் தொழிற்சங்க ஒப்புதலுக்காகவும் பல்வேறு போராட்டங்கள் அந்த ஆண்டின் இளவேனில் காலத்தில் நடைபெற்றன. வேலை நிறுத்தங்கள் நடை பெற்றன. பெரும்பாலும் வெற்றி பெற்றன. மே திங்கள் முதல் நாள் கூனானில் பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடப்பட்டது. அது சீனாவின் தொழிலாளர் இயக்கத்திற்கு அதற்கு முன் அறிந்திராத பெரும் வெற்றி யையும் வலிமையையும் எடுத்துக் காட்டிற்று.

1923–ல் கேண்டானில் பொதுவுடைமைக் கட்சியின் மூன்றாவதுபொதுக்குழு கூடியது. வடநாட்டுப் படையினைக் கூட்டுறவாக எதிர்ப்பதற்கு இணைப்பு முன்னணியை உருவாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றியது. மாசே–துங் ஷாங்கை சென்று கட்சியின் நடுவண் குழுவில் பணியாற்றினார்.

1924–ன் இளவேனிற் காலத்தில் கேண்டான் சென்று கூமின்டாங் தேசிய பொதுக் குழுவில் கலந்துகொண்டார். மார்ச் திங்களில் ஷாங்கை திரும்பினார். பொதுவுடைமைக் கட்சியின் செயற்குழு உறுப்பினராகிப் பணியாற்றினார். அந்தக் கோடையில் படைக்குழு அமைக்கப்பட்டது ருஷியாவிலிருந்து வந்த அறிவுரையாளர்கள் வழிநடத்துவோராய்ச் செயலாற்றினர். புரட்சித் திட்டங்கள் வகுக்கப் பட்டன. மழைக்காலத்தில் கூனான் திரும்பிய மாசே–துங் சிறிதுகாலம் ஓய்வுகொள்ளும்படி ஆயிற்று, உடல் நலம் குன்றியமையால். ஆனால், கூனானில் விவசாயிகள் இயக்கத்தைத் தொடங்கினார் அவர்.

விவசாயிகளின் போராட்ட உணர்வை அவர் முழுவையாக அறிந்திருக்க வில்லை. ஆனால் 1925 மே திங்களில் விவசாயிகளின் போர்க்குணத்தை முழுமையாகப் புரிந்துகொண்டார். ஓய்விலிருந்து விடுபட்டு வீட்டை விட்டு வெளியேறிச் சிற்றூர்களின் உழவர்களிடையே விவசாய அமைப்புகளை உருவாக்குதற்குப் பாடு பட்டார். குறுகிய காலத்திற்குள் இருபதுக்கு மேற்பட்ட விவசாயச் சங்கங் களைத் தோற்று விக்க முடிந்தது. அது நிலப்பிரபுக் களிடையே சீற்றத்தை உண்டாக்கிற்று. மாசே–துங்கைக் கைதுசெய்ய வேண்டுமென அவர்கள் முயன்றனர்.

சோஹெங்டீ, மாசே–துங்கைச் சிறையிலிட படைகளை அனுப்பினார். கேண்டானுக்குத் தப்பிச் சென்று விட்டார் மாசே–துங்.

பீக்கிங்கில் சன்யாட் சென் இறந்ததற்குப் பிறகு முதற் படைத் தளபதியாக சியாங் கேஷேக் நியமிக்கப் பெற்றதும், அரசாங்க அதிபராக வாங்சிங்வீ பதவி ஏற்றதும் அப்பொழுது தான்.

கூமிண்டாங் அரசியல் பிரிவின் சார்பில் அரசியல்வார இதழ் ஒன்றின் ஆசிரியரானார் மாசே–துங். அதுவலது சாரி இயக்கத்தினரை மிகவும் தாக்கிற்று. விவசாய இயக்கத் தினருக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பும் மாசே–துங்கிடம் கொடுக்கப்பட்டது. இருபத்தோரு மாநிலங்களின் விவசாய இயக்கத்தினரின் பிரதிநிதி உறுப்பினர்க்குப் பயிற்சிப் பாடங்கள் அளிக்கப்பட்டன. மாணவர்களும் பயிற்சி பெற்றனர்.

கேண்டானுக்கு வருவதற்கு முன்பே மாசே–துங் விவசாயப் பிரிவின் தலைவராகி இருந்தார். நடுவண் குழுவின் உறுப்பினராகவும் நியமனம் பெற்றிருந்தார்.

பொதுவுடைமைக் கட்சியின் விவசாயப்பிரிவின் பொறுப்பு முழுவதும் தமக்கே இருப்பதாகக் கருதிய மாசே–துங் மேலும் மேலும் அவர்களுக்காவே எழுதிக் கொண்டிருந்தார். கூனான் விவசாயிகளிடையே தம் முடைய பழக்கங்களின் அடிப்படையிலும், இயக்கங்களின் அனுபவத்திலும் அவர் இரண்டு நூல்கள் எழுதி வெளி யிட்டார். சீனச் சமுதாயத்தின் பிரிவுகளின் ஆராய்ச்சி என்ற நூலும் சமுதாயப் பிரிவினைகளின் முன்னால் நம் முடைய பங்கு என்ற நூலும், ஆகும்.

மார்ச் திங்கள் 1926–வரையிலும் கேண்டானின் கூமின் டாங்கில் பணியாற்றினார் மாசே–துங். வலது–இடது கட்சிகள் இணைந்து கூமின்டாங்கில் ஒரே பொதுவுடைமைக் கட்சியான பிறகு இளவேனில் பருவத்தில் ஷாங்கை சென்றார் மாசே–துங்.

சியாங்கே ஷேக்கின் தலைமையில் இரண்டாம் பொதுக் குழு கூமீன்டாங்கில் நடைபெற்றது. ஷாங்கையில் பொது வுடைமைக் கட்சியின் விவசாய இயக்கத்தை முன் நின்று நடத்திக் கொண்டிருந்தார் மாசே–துங். அதன் பிறகு கூனானில் மேற்பார்வையாளராக இருந்தார்.

கூனானின் விவசாய அமைப்புகளையும் அரசியல் நிலைமைகளையும் மேற்பார்வையிட்டார் மாசே–துங். நடுவண் அமைப்புக்குத் தம்முடைய அறிக்கையினை அளித்தார். விவசாய இயக்கத்தில் புதிய அணுகுமுறை யினை அதில் அவர் வற்புறுத்தியிருந்தார். நிலங்களைப் பெருமளவில் பங்கிட்டு அளிக்கும் திட்டத்தினை அவர் விளக்கியிருந்தார். பொதுவுடைமைக் கட்சியின் ஐந்தாவது மாநாட்டில் அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆயினும், நடுவண் அமைப்புக் குழு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

விவசாயச் சீர்திருத்தங்களையும் மாசே–துங்கின் திட்டங் களையும் பொதுவுடைமைக் கட்சி நிறைவேற்றாமை அவர்க்கு ஏமாற்றத்தை அளித்தது. விவசாய இயக்கம் வெற்றி பெற்றிருந்தால் நாடு முழுவதும் நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டங்கள் வலிமை பெற்றிருந்தால் பொதுவுடைமைக் கட்சி மிகவும் வேகமாக வளர்ந்திருக்கும் எனவும், வலிமையுடன் நாட்டைக் கைப்பற்றியிருக்கும் எனவும் அவர் கருதினார்.

ஆனால், அவருடைய கொள்கைகளோ திட்டங்களோ நடுவண் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் அனைத்துச் சீன விவசாயிகள் சங்கம் உருவாக்கப் பெற்று அதனுடைய முதல் தலைவராக மாசே–துங் நியமிக்கப்பட்டார்.

சோவியத்துகளை அமைத்தல்.

ஆகிய ஐந்தில் ஐந்தாவது திட்டத்திற்கு எதிர்ப்பு இருந்ததால் அது கொள்கை அளவில் வாய்முழக்கமாக இருந்தது.

கூனானின் விவசாயிகள் சங்கத்தின் வழியே பரவலான போராட்டங்களுக்கான எழுச்சி வெற்றி பெற்றது. உழவுத் தொழிலாளர் படை உருவானது முதன் முதலில். மூன்று வகையானவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்; உழவுத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், கூமின்டாங்கின் புரட்சிப் படைவீரர்கள்.

இந்தப் புரட்சிப் படையமைப்பு, உருவாக்கப் பெற்று விவசாயிகளின் தொழிலாளர்களின் முதல் பிரிவுப்படை என்று அழைக்கப்பட்டது. படைகளின் உட்பிரிவு: சுரங்கத் தொழிலாளர் படை, விவசாயிகள் படை, படை வீரர் களாகவே இருந்து கலகம் விளைவித்து வெளியேறி வந்து புரட்சிப்படையில் சேர்ந்து கொண்டோர் படை எனப் பிரிவுகள் அமைக்கப்பட்டன.

கூனானின் மாநிலக் குழுவின் அனுமதியோடு இந்தப் புரட்சிப் படை உருவானது. ஆனால், இந்தப் படையையும் கூனானின் திட்டங்களையும் கட்சியின் நடுவண் செயற்குழு எதிர்த்தது. ஆதரவளிக்காமல் வேடிக்கை பார்த்தது.

மாசே–துங் படையமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொழுது–ஹன்யாங் சுரங்கங்களுக்கும் விவசாயக் காவலர் களுக்கும் இடையே அலைந்து கொண்டிருந்த பொழுது, கூமின்டாங் படையிடம் சிக்கிக் கொண்டு விட்டார். நூற்றுக்கணக்கான ஐயத்திற்குரிய சிவப்புச் சட்டை யினரைச் சுட்டுக் கொலை செய்து கொண்டிருந்தனர் கூமின்டாங் ஆட்சியாளர். அவர்களிடம் அகப்பட்டுக்

கொண்ட மாசே-துங்கை தலைமையிடத்திற்கு அழைத்துச் செல்லுமாறு ஆணையிடப்பட்டது. அங்கே அவர் சுட்டுக் கொல்லப்படுவார்.

நூற்றுக்கணக்கான டாலர் பணத்தை ஒரு தோழரிட மிருந்து பெற்று கொண்டார் மாசே-துங். தம்மைக் கைது செய்து அழைத்துச் சென்ற படை வீரர்களிடம் அந்தப் பணத்தை லஞ்சமாகக் கொடுத்து விட்டுத் தப்பித்து விட முயன்றார் மாசே-துங். படைவீரர்களுக்கு அவரைக் கொலை செய்வதால் எந்த லாபமும் இல்லை. அதனால் அவர்கள் மாசே-துங்கின் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களுக்கு மாற்றாக வந்த படை அதிகாரி அதனை ஒப்புக் கொள்ளவில்லை. ஆதலால் தப்பி ஓடிவிட வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார் மாசே-துங். தலைமை இடத்தை அடைவதற்கு ஒரு பர்லாங் தொலைவே இருந்தது. அப்பொழுது தம்முடைய பிடிப்பினைத் தளர்த்திக் கொண்டு வயல்களுக்குள் ஓடினார் அவர்.

ஒரு நீர்க்குட்டையின் உயர்ந்த இடத்தினை ஓடி அடைந்தார். அங்கே உயரமான புல் மண்டிக்கிடந்தது. கதிரவன் மறையும் வரையில் அதற்குள் ஒளிந்திருந்தார். சுற்றிலும் படை வீரர்கள் அவரைத் தேடினர். அவரைத் தேடிக் கொடுக்குமாறு விவசாயிகள் சிலரை வற்புறுத்தினர். தேடியவர்கள் பல தடவை அவர் மறைந்திருந்த இடத்திற்கு அருகிலேயே வந்து வந்து போனார்கள். தம்மைத் தொட்டு விடும் அளவுக்குக் கூட அவர்கள் தேடியதை அவர் உணர்ந்தார். நம்பிக்கை இழந்து, மீண்டும் பிடிபடப் போகிறோம் என்று எண்ணிக் கலங்கினார். கடைசியில் அவர்களே நம்பிக்கை இழந்து அவரைத் தேடுவதைக் கைவிட்டுத் திரும்பிச் சென்று விட்டனர்.

உடனே அவர் மலைகளின் மீது குறுக்கே நடந்து இரவு முழுவதும் பயணம் செய்தார். கால்களில் காலணிகள்

இல்லை. கால்கள் புண்ணாகிக் குருதி கசிந்தது. சாலையில் நடந்த பொழுது ஒரு விவசாயியைச் சந்தித்தார். அவன் அவருக்கு ஆதரவு கொடுத்தான். தங்குவதற்கு இடம் அளித்தான். பிறகு அடுத்த மாவட்டத்திற்கு அவனே துணையாக வந்து அவரை அனுப்பி வைத்தான். அவரிடம் ஏழு டாலர்கள் இருந்தன. காலணிகளுடன், குடையும் உணவும் வாங்கிக் கொண்டார். முடிவில் பாதுகாப்பாக விவசாயிகள் சங்கப் பாதுகாப்புக்குள் வந்து சேர்ந்தார். அப்பொழுது அவரிடம் இரண்டு செப்புக் காசுகளே இருந்தன.

கட்சியின் புதிய பிரிவு தொடங்கியதும் மாசே–துங் கட்சியின் முன்னணிக் குழுத் தலைவரானார். படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட யூ ஷாடோ துரோகமிழைத்து விட்டு நான்கிங் அரசில் சியாங்கே ஷேக்கிடம் வேலை செய்யப் போய் விட்டார்.

விவசாயிகளின் எழுச்சியில் உருவான சிறிய படை கூனான் வழியாகத் தென்பகுதியில் முன்னேறிச் சென்றது. ஆயிரக்கணக்கான கூமின்டாங் படைகளோடு போரிட்டது. ஆனால் படையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாததால் விவசாயிகள் படை தோல்வியுற்றது. பலர் படையிலிருந்து விலகிக் கொண்டனர். தளபதியான யூ ஷாடோ பகைவர் முகாமுக்குச் சென்று விட்டார்.

மீதம் இருந்த படை வீரர்களுக்கு செங்ஹோ தளபதி ஆனார். அவரும் காட்டிக் கொடுத்த துரோகி ஆனார். ஆயினும் முதலில் படையில் சேர்ந்த பலர் கடைசி வரையில் உண்மையோடு இருந்தனர். சிவப்புப் படையில் அவர்கள் சேர்ந்து கொண்டனர்.

மாசே–துங்கின் விவசாயிகள் எழுச்சிப் போரின் தோல்விகளும் முதல் படையின் போர்த் தோல்விகளும்

கட்சியின் தலைமையினால் பழி தூற்றப்பட்டது. நடுவண் குழு அவரைக் குறை கூறிற்று. முடிவில் மாசே-துங் 'போலிட் பீரோ'விலிருந்து நீக்கப்பட்டார். கட்சியின் முன்னணிக் குழுவிலிருந்தும் விலக்கப்பட்டார்.

கூனானின் மாநிலக் குழுவும் மாசே-துங் தோழர் களைக் குறை கூறித் தாக்கிற்று. 'துப்பாக்கி இயக்கம்' என்று கேலி பேசிற்று. ஆயினும் தங்களுடைய பாதையே நேரிய முறையான பாதை என உறுதியாக நம்பினர் மாசே-துங் குழுவினர். தொடர்ந்து படைக்கு ஆள் சேர்த்தனர். மீண்டும் படை முழுமை பெற்றது. அதனுடைய தளபதியானார் மாசே-துங்.

சிங்கான் ஷான் என்பது தகர்க்க முடியாத ஊடுருவ முடியாத மலைப்பகுதியாகும். ஒரு காலத்தில் கொள்ளைக் காரர்களின் கூடாரம் அது. கூனரன்-சியாங்ஷியின் எல்லையில் உள்ளது. அந்தப் பாதுகாப்பான மலையினைத் தங்களுடைய படைக்கு உரிய பகுதியாக அமைத்துக் கொண்டார் மாசே-துங். 1927- மழைக்காலம் முதல் 1928- இலையுதிர்க்காலம் வரையில் முதல் படையின் பயிற்சிக்களமாக அம்மலைப் பகுதி விளங்கிற்று. முதல் சோவியத் அரசாங்கம் சாலினில் அமைக்கப்பட்டது.

இந்த சோவியத்தில் ஜனநாயகத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. மென்மையான ஒழுங்கான வளர்ச்சித் திட்டங்கள் அவை. இது கட்சியின் தீவிரவாதிகளிடையே வெறுப்பை உண்டாக்கிற்று. அவர்கள் குறை கூறினர். அவர்களுக்குப் படை நடத்த வேண்டும்; நிலப்பிரபுக்களைக் கொன்றழிக்க வேண்டும்; அவர்களுடைய அமைப்புகளைக் கொளுத்த வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை முதல் படையின் முன்னணிக் குழு புறக்கணித்தது. அதனால் 'சீர்திருத்த வாதிகள்' என அது கேலி செய்யப்பட்டது. தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதற்காக

மாசே–துங் பழி தூற்றப்பட்டார்; வசை மொழிகளுக்கு ஆளானார்.

1928 – மே திங்களில் சூடே சிங்கான்ஷான் வந்ததும் படைகள் இணைக்கப்பட்டு வலிமையூட்டப்பட்டது. சோவியத் பகுதியை உருவாக்க திட்டம் வகுக்கப்பட்டது. கூனான் – கியாங்ஷி – க்வாண்டுங் எல்லைகளின் மாவட்டங்களில் பொதுவுடைமை அதிகாரத்தினை நிலைநாட்ட திட்டம் தீட்டப்பட்டது. அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு எல்லைகளை விரிவுபடுத்திச் செல்ல வேண்டும்.

இத்திட்டங்கள் கட்சியின் எண்ணங்களுக்கு எதிர்ப்பானவையாகக் கருதப்பட்டன. படைக்குள்ளேயே மாசே–துங்குக்கும் சூடேக்கும் இடையில் இரண்டு வகையில் கருத்து மோதல்கள் எழுந்தன.

முதலில் சாங்ஷாவை நோக்கி படைகள் உடனே முன்னேறிச் செல்ல வேண்டும்; அது துணிவான செயலாக இருக்கும். குவான்டுங் எல்லையிலிருந்து திரும்பி வந்து விட வேண்டும்; அது திரும்புதலாகக் கருதப்படும். முதல் செயலாக நிலங்களைப் பங்கிட்டு அளித்து சோவியத் அமைப்பை உருவாக்குதல் வேண்டும். பொது மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தல் வேண்டும். அவர்களுக்கு ஆயுதம் வழங்குதல் வேண்டும். சுதந்திர வாணிபம் எனவும், சிறைப்பட்ட பகைவர் படையினரிடம் நட்பு பாராட்டுதல் எனவும், அது பொதுவான ஜனநாயக அமைப்பு முறை எனவும் கூறப்பட்டது. எனினும் நடுவண் குழு அவற்றில் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

1928–ன் மழைக்காலத்தில் மாஸ்கோவில் கூடிய ஆறாவது பொதுவுடைமைக் கட்சியின் தீர்மானங்கள் சின்கான் ஷான் வந்து சேர்ந்த பிறகு பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

கட்சியின் பொதுக்குழு தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகு மாசே-துங்கும் சூடேயும் முழுமையானஒருங்கிணைந்த திட்டங்களில் ஒற்றுமை ஆகிவிட்டனர். விவசாய மாநிலங் களில் நிலவிய கருத்து வேற்றுமைகள் மறைந்துவிட்டன. கட்சியின் ஒருமைப்பாடு கட்டிக் காப்பாற்றப்பட்டது. பழைய அனுபவங்களின் அடிப்படையில் புதிய வழி முறைகள் பொதுக் குழுவில் இனங்காட்டப்பட்டன.

இக்காலகட்டத்தில் சீனா முழுவதும் சிவப்புப் படை யினர் தலைதூக்கத் தொடங்கினர். மேற்கிலும் கிழக் கிலும் எழுச்சிகள் முகிழ்த்தன. புதிய சோவியத் மாவட்டங் கள் தோன்றின. உழவுத் தொழிலாளர் படைகள் உருவாயின. வலிமையான சோவியத் அமைப்புகள் ஏற் பட்டன. மாவட்டங்களின் சிவப்பு படைத்தலைமைக்கும் மாசே-துங், சூடே குழுவினர்க்கும் தொடர்புகள் உண்டாகி இணைந்தன.

சின்கான் ஷான் மலையினைப் பகைவர் கைப்பற்றும் இரண்டு முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. சிவப்புக் காலாட் படைகளின் படைவீடாக அந்த மலை விளங்கிற்று. இயற்கைப் பாதுகாப்பும் சுற்றிலும் விளை நிலங்களும் அமைந்திருந்ததால் படைக்கான உணவும் கிடைத்தது.

மலையில் இணைந்து உருவான சிவப்புப் படையினைக் கட்சியும் ஏற்றுக் கொண்டதால் அரசியல் தலைவராக மாசே-துங்கும் படைத்தளபதியாக சூடேவும் பதவி ஏற்றார் கள். படைகள் மேலும் மேலும் மலைப்பகுதிக்கு வந்து இணைந்தன.

அதனால் வசதிக் குறைவுகள் தோன்றின. படைகளுக்கு மழைக்காலச் சீருடைகள் இல்லை. உணவுப் பஞ்சமும் ஏற்பட்டது. பல திங்கள் பழச்சாறு போன்றவற்றை உட் கொண்டனர், மாசே-துங் உட்பட. படைவீரர்கள் தாங்

களாவே சில முழக்கங்களைப் படைத்துக் கொண்டனர்: 'முதலாளி ஆதிக்கம் ஒழிய, பழச்சாறைப் பருகுவோம்!' முதலாளி ஆதிக்கம் என்பது நிலப்பிரபுக்கள்; நிலப்பிரபுகளின் பழச்சாறு.

1929-ல் வெள்ளைப் படையை வென்று சிவப்புப்படை முன்னேறியது. அதனால் மலை முழுவதுமாக விடுவிக்கப் பட்டுச் சிவப்புப்படையின் உரிமையாயிற்று.

இவ்வாறே நாட்டின் பல பகுதிகளில் சோவியத்துகள் தோற்றுவிக்கப் பட்டன. சிவப்புப்படை வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கிற்று. விவசாயிகளின் எழுச்சியே எல்லா வெற்றிகளுக்கும் காரணமாயிற்று.

சிவப்புப் படையின் நிலைமையில் முன்னேற்றம் ஏற் பட்டது. ஆயினும் பல்வேறு தீய நிலைமைகளும் இடம் பெற்றிருந்தன. ஒழுங்கும் கட்டுப்பாடும் குன்றியிருந்தது. கொள்ளையடிக்கும் மனப்பான்மை வேரூன்றியிருந்தது. தளபதிகள் படைவீரர்களுக்கு மிகுந்த தண்டனை அளித் தனர். சிலருக்குச் சலுகை காட்டினர்.

இத்தகைய குறைகள் 1929-டிசம்பரில் நான்காவது சிவப்புப் படையின் மாநாட்டில் பேசித் தீர்க்கப்பட்டன. புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. வழிகாட்டி நெறிகள் வலியுறுத்தப்பட்டன. எதிர்ப்புகள் இருந்த போதிலும் படையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் வெற்றிப் பாதையில் வெளிச்சம் தெரிந்தது.

கியான்ஷியில் 'சோவியத்' நிலை நாட்டப்பட்டது. சிவப்புப் படையின் அதிகாரத்தின் கீழ் சியான்ஷியின் தென் பகுதி வந்தது. நடுவண் சோவியத் அமைப்புக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.

1930 பிப்ரவரியில் நிலச் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப் பட்டு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதனால் சோவியத்

அமைப்பு தீவிரமாயிற்று. கியான்ஷியில் சோவியத் அரசாங்க மாநிலம் அமைந்தது. விவசாயிகள் ஆர்வம் பொங்க கூமிண்டாங் படைகளை முரியடிக்கக் கிளர்ந்தெழுந்தனர்.

எல்லாவற்றிலும் மாசே-துங் தலைமையாகவும் முன்னணியினராகவும் வழி காட்டியவராகவும், வழி நடப்பவராகவும் விளங்கினார். தாமே காரணமாகவும், காரணத் தலைவராகவும், எண்ணுபவராகவும் செயலாற்று பவராகவும் செயல் நடத்துபவராகவும் திகழ்ந்தார்.

எனினும் 'நான்' என எண்ணாமல் 'நாம்' என எண்ணினார். 'நான்' எனச் சொல்லாமல் 'நாம்' என முழங்கினார். 'நான்' எனக் குறிப்பிடாமல் 'சீனச் சமுதாயம்' எனக் குறிப்பிட்டார். கட்சி என்றார்; சிவப்புப் படை விவசாயிகளின் எழுச்சி என்றார்; பேரணி என்றார்.

அதுவே அவருடைய ஒப்பற்ற சிறப்பு. புரட்சிப் பாதையின் வெற்றியும் அதுவே.

**மலைகள்!**
**என்னுடைய சேணத்தில் ஒட்டிக்கொண்டு**
**சாட்டையால் அடிக்கிறேன்**
**விரைந் தோடும் என் குதிரையை!**
**திடுக்கிட்டு என் தலையைத் திருப்புகிறேன்**
**எனக்குமேல் மூன்றடி உயரத்தில் இருக்கிறது**
**வானம்!**

— மாவோவின் கவிதை

# 10

சிவப்புப் படையின் பணிகள் பொது மக்களோடு மெல்ல மெல்ல ஒட்டி உறவாடி வளரத் தொடங்கிற்று. உழவர் மக்கள் புரட்சிக்குத் தோள் கொடுக்க தாமே முன் வந்தனர். ஒழுக்கமும் கட்டுப்பாடும், கடமை உணர்வும் படையிடம் வற்புறுத்தப் பட்டது. ஏழை எளியவர்களிடம் பணிவுடனும் அன்புடனும் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய பொருள்களை விலை கொடுத்து வாங்க வேண்டுமே அன்றி கைப்பற்றுதல் கூடாது. நிலப் பிரபுக்களிடம் கைப்பற்றுவதை முறைப்படி அரசாங்கத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

எட்டு சட்டங்கள் சிவப்புப் படைகளுக்கு: சீன வீட்டின் கதவுகள் கழற்றி எடுக்கக் கூடியவை. அவற்றை இரவு படுக்கைக்காக எடுத்துக் கொண்டால் மீண்டும் அவற்றைப் பொருத்தி விட்டுச் செல்ல வேண்டும். பாய் படுக்கைகளைத் திருப்பி அளித்தல் வேண்டும். மக்களிடம் அன்புடனும் மரியாதையுடனும் பழகி அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். கடன் பெற்றவற்றைத் திருப்பிக் கொடுத்து விடுதல் வேண்டும். உடைந்து விட்ட அழிந்து விட்ட பொருள்களை மாற்றிக் கொடுத்தல் வேண்டும். விவசாயி களிடம் பணிவுடன் எல்லாவற்றிலும் நடந்து கொள்ள வேண்டும். எல்லாப் பொருளையும் விலை கொடுத்தே வாங்குதல் வேண்டும். குடியிருப்பு வீடுகளிலிருந்து வெகு தொலைவில் கழிப்பிடங்களை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மூன்று கடமைகள் சிவப்புப் படைக்கு: பகைவரை எதிர்த்துச் சாகும் வரையில் போரிட வேண்டும். பொது

மக்களுக்கு ஆயுதம் வழங்குதல் வேண்டும். போராட்டத் திற்குப் பணம் வசூலித்தல் வேண்டும்.

நாடெங்கணும் சிவப்புப் படைகள் தோன்றின. பத்துப் பிரிவாக இருந்த முதற்படையில் பத்தாயிரம் வீரர்கள் இருந்தனர். அதில் அரசியல் தலைவராக மாசே–துங் விளங்கினார்.

சிவப்புப் படைக்கு நான்கு முழக்கங்கள்: பகைவர் முன்னேறும் பொழுது நாம் பின் வாங்குவோம்; பகைவர் படை வீடுகளில் ஓய்வு கொள்ளும் பொழுது நாம் துன்புறுத்துவோம். பகைவர் போரை விரும்பாத பொழுது நாம் தாக்குவோம்; பகைவர் புறமுதுகிட்டுப் பின் வாங்கும் பொழுது நாம் முன்னேறித் துரத்துவோம்.

பகைவரின் படை பத்து இருபது மடங்கு மிகப் பெரியது. சிவப்புப் படையோ சிறியது. எனவே கொரில்லா போர் முறைகளையே சிவப்புப் படை பின்பற்றியது.

1929—இலையுதிர் காலத்தில் வடக்கு கியான்ஷியில் சிவப்புப் படை முன்னேறியது. பல நகரங்களைக் கைப் பற்றியது. கூமின்டாங் படைகள் பல தோல்விகளைத் தழுவின.

1930—சூன் திங்களில் மூன்றாவது படையும் முதல் படையும் இணைந்து சாங்ஷாமீது இரண்டாவது தாக்கு தலைத் தொடங்கிற்று.

சிவப்புப் படைக்கு ஆதரவு கூனானிலும் பரவியது. சீனத் தொழிலாளர்கள் விவசாயிகள் புரட்சிக் குழு தொடங்கப் பெற்று அதனுடைய நிர்வாக அதிபராக மாசே–துங் தேர்ந்தெடுக்கப் பெற்றார். கூனானின் விவசாயி களிடையே அவர் புகழ் பரவிற்று. அவரை உயிரோடு அல்லது பிணமாக கொடுப்போர்க்குப் பெரும் பரிசு

அளிப்பதாக அறிவித்தது அரசாங்கம். சூடேவுக்கும் அதே நிலை.

கூமின்டாங்கின் அரசாங்கம் மாசே–துங்கின் நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டது. அவருடைய மனைவியும் சகோதரியும் மற்ற உடன் பிறப்புகளின் மனைவியரும் மாசே–துங்கின் மகனும் ஹோ சென்னால் கைது செய்யப்பட்டனர். மாசே-துங்கின் மனைவியும் சகோதரியும் மரண தண்டனையில் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் பின்னொரு காலத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

சிவப்புப்படை மாசே–துங்கின் சொந்த ஊரிலும் ஊடுருவிப் பரவிற்று. உள்ளூர் உழவர்களிடையே வேடிக்கையான வதந்திகளும் பேசப்பட்டன; 'அவர் ஊருக்குத் திரும்பி வருவார். தலைக்கு மேலே பறக்கும் வானூர்தியில் செல்பவர் அவர்தான்'. அதுவரையில் அவருடைய நிலத்தைப் பயிரிட்டு வந்தவரையும் எச்சரிக்கை செய்தனர்; 'அவர் திரும்பி வந்து நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்வார். ஏதாவது மரத்தை வெட்டி விட்டால் கேட்பார். சியாங்கேஷேக்கிடம் அதற்காக இழப்பீட்டுத் தொகையும் கேட்பார்'.

சாங்ஷா மீது சிவப்புப் படையின் தாக்குதல் தோல்வியுற்றது.

படையில் ஆள் சேர்ப்பு தீவிரப் படுத்தப்பட்டது. வெற்றி பெற்ற பகுதிகளில் 'சோவியத்' நிறுவப்பட்டது.

1930-ல் பகைவர் படை விரிவுபடுத்தப்பட்டது. வலிமை கூடிற்று. 1,00,000 பகைப் படையினர் சிவப்புமண் பகுதிகளை வளைத்துப் போரிட்டனர். சிவப்புப் படையில் இருந்த 40,000 வீரர்கள் எதிர் கொண்டு தாக்கிச் சிறந்த

போர் முறைகளினால் வெற்றி பெற்றனர். 1931–சனவரியில் வெற்றி சிவப்புப் படைக்கே என முடிந்தது.

அடுத்த நான்கு திங்களுக்குப் பிறகு 200000 பகைப் படையினர் ஏழு பாதைகள் வழியே சிவப்புப் பகுதியைத் தாக்கி முற்றுகையிட்டனர். வலிமைக் குன்றிய சிவப்புப் படை புதிய தந்திரங்களைக் கையாண்டது. பகைவர் படையின் ஏழு முனைகளில் ஒரு முனையைத் தங்கள் பகுதிக்குள் நுழையவிட்டுப் பிறகு அதனைச் சுற்றி வளைத்து வீழ்த்திற்று. அவ்வாறே வெவ்வேறு முனைகளில் தந்திரங் களால் பகைவரின் பெரிய படையினைப் புறங்கண்டது சிவப்புப் படை.

ஒரு திங்களுக்குப் பிறகு சியாங் கே ஷேக் 300000 வீரர்களைச் சேர்த்தார். 'சிவப்புக் கொள்ளையர்களை' அழித்தொழிக்க ஆயத்தம் செய்தார். சிறந்த படைத் த்ளபதிகள் நியமிக்கப் பட்டனர். புயலாகத் தாக்கிச் சிவந்த மண்ணைக் கைப்பற்ற கட்டளையிடப் பட்டனர். சோவியத் மண்ணில் முன்னேற முடுக்கிவிடப் பட்டனர். 30,000 வீரர்களைக் கொண்ட சிவப்புப் படை ஐந்து வெவ்வேறு போர்க்களங்களில் ஐந்து நாட்களில் போரிட்டுப் பகைவரின் போர்க் கலன்களைக் கைப்பற்றியது. பல்லாயிரவரை சிறை பிடித்தது. அக்டோபரில் சியாங்கே ஷேக் படை களுடன் பின்வாங்கிச் சென்றார்.

இப்பொழுது சிவப்புப் படையின் பணிகள் மிக எளிதாக அமைந்தன. அமைதிக்காலம் படையின் வலிமையைப் பெருக்கிற்று. சிவப்புப் பகுதிகள் விரிவடைந்தன. 1931 டிசம்பர் 11–ல் முதல் சோவியத் காங்கிரஸ் கூடி நடுவண் சோவியத் அரசாங்கத்தை அமைத்தது. அதனுடைய தலைவரானார் மாசே–துங். சிவப்புப் படையின் தலைமைத் தளபதியானார் சூடே. அதே திங்களில் கூமின்டாங்கின்

அரசாங்கப் படையில் புரட்சி ஏற்பட்டு 20,000 படை வீரர்கள் சிவப்புப் படையில் சேர்ந்து கொண்டனர்.

1932-ல் சிவப்புப்படை பல நகரங்களை வீழ்த்தித் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்திற்று.

1933 ஏப்ரலில் பகைவர்க்கு பெரிய இழப்புகளை உண்டாக்கிற்று சிவப்புப் படை. வாழ்க்கையிலேயே பெரிய தலைக்குனிவு என்று தம்முடைய படைத் தளபதிக்குக் கடிதம் எழுதினார் சியாங் கே ஷேக். சிவப்பு வீரர்களை அழிப்பது ஒன்றே தம் வாழ்நாள் கடமை எனவும் அதுவே வாழ்நாள் தண்டனை எனவும் அவருடைய படைத் தளபதி மக்களிடம் பேசினார். அதனால் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

ஐந்தாவதும் கடைசியுமான படையெடுப்பினை ஒரு மில்லியன் படைவீரர்களுடன் புதிய போர் முறைகளுடன் மேற்கொண்டார் சியாங் கே ஷேக். ஜெர்மன் அறிவுரையாளர்கள் அவருக்கு உதவினர்.

இக்கால கட்டத்தில் சிவப்புப் படையினர் இரண்டு தவறுகளைச் செய்தனர். படைகளை ஒருங்கிணைக்காமல் இருந்து விட்டனர். பழைய தந்திர முறைகளைக் கையாளாமல் எளிமையாகப் போரிட முனைந்தனர். ஜப்பானின் மஞ்சூரியா படையெடுப்புஒருபுறம். ஷான்கையை நோக்கியும் ஜப்பானின் படையெடுப்பு. ஜப்பானை சீனாவின் ஒருங்கு திரண்ட சக்தியே முரியடிக்க வேண்டும் என்ற கொள்கை முழக்கம் எழுந்தது.

இழப்புகள் இருபுறமும் சேர்ந்தன.

அதனுடைய இறுதி முடிவாக 1934 அக்டோபரில் நெடுப்பயணம் தொடங்கிட ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

1935 சனவரியில் நெடும்பயணச் சிவப்புப் படையின் முன்னணிப் படைகள் சன்யீயை அடைந்தன. அடுத்த நான்கு திங்களில் பெரிய போர்க்களங்களைச் சந்தித்து முன்னேறின. சீனாவின் ஆபத்தான நீளமான ஆழமான ஆறுகளைக் கடந்து சென்றன. உயரமான ஏறுவதற்கு கடினமான மலைகளைக் கடந்து சென்றன சிவப்புப் படைகள். சிற்றூர்களின் வழியாகவும் நெடுந்தொலைவுக்குப் பரந்துகிடந்த புல்வெளி வழியாகவும் சிவப்புப் படைகளின் நீண்ட நெடும்பயணம் பல்வேறு இழப்புகளோடும் இன்னல் களோடும் நடந்தது. குளிர்காற்றையும் தாங்கிக் கொடும் வெப்பத்தையும் தாங்கிப் புகழ்மிக்க நெடும்பயணம் தொடர்ந்தது. கடும் காற்றைப் பொருட்படுத்தாமல் பனிப் பொழிவைக் கண்டு அஞ்சாமல் புயல் மழையைத் தாங்கிக் கொண்டு சீன வரலாற்றின் சிறப்புமிக்கச் சிவப்புப் படைகள் பகைவரை முரியடித்து முன்னேறின. உள்நாட்டுப் படை களையும் அந்நிய வெள்ளைப் படைகளையும் எதிர்த்து முன்னேறின. குவாங்டங், கூனான், கிவான் ஷி, கீ சௌ, யூன்னான், சிக்காங், ஷிசூவான், கான்சூ, ஷென்சி ஆகிய பகுதிகள் வழியே சிவப்புப் படைகள் அக்டோபர் 1935–ல் வடக்கு ஷென்சியை அடைந்தன.

வெற்றி மிகுந்த சிவப்புப் படைகளின் நெடும்பயணத்தில் கான்சூவும் ஷென்சியும் பொதுவுடைமைக் கட்சியின் ஆளுகைக்கு வந்த பிறகு அதனுடைய தலைமையை மாற்றியது. அது மார்க்சிஸ்ட் லெனினிசத்தின் உண்மையான நம்பிக்கை ஒளியில் நடைபோட்டது. வெற்றி பெறும் வரையில் ஓயாமல் சென்றது.

பல்லாயிரக் கணக்கானோர் இடையிலே சோர்ந்து நெடும்பயணத்திலிருந்து விலகிக் கொண்டாலும் பல்லாயிரக் கணக்கான உழவர்கள் எளிய தொழிலாளர்கள், அடிமைகள், அரசாங்கப் படையிலிருந்து விலகிக்

கொண்டோர், தொழிலாளர்கள் ஆகியோர் மேலும் மேலும் பயணச் சிவப்புப் படையில் சேர்ந்து கொண்டே இருந்தார்கள்.

6000 – மைலின் நீண்ட நெடும் பயணத்தில் மாசே–துங் பாடல்களும் எழுதினார்:

**“சிவப்புப் படைகள் எப்பொழுதுமே**
**நீண்ட நெடும்பயணச் சவாலுக்கு**
**அஞ்சியதே இல்லை!**
**எண்ணற்ற மலைச் சிகரங்களையும்**
**ஆறுகளையும் அலட்சியமாய்ப்**
**பார்த்தன படைகள்!**
**வூலியாங் ரேன்கின் பொங்கிவந்த நீரையும்**
**வடிந்துவிட்ட நீரையும் சின்னஞ்**
**சிறிய அலைகளையும்,**
**வூ மெங்கின் பச்சைப் பசுமை போர்த்திய மலையின்**
**வட்ட வழுக்குச் சரிவுப் படிகளையும்**
**அலட்சிய மாய்ப் பார்த்தன**
**படைகள்!**

**தங்க மணல் பரந்து வெம்மை சூடிய**
**ஆற்றின் அலைகள் கொடும்**
**பாறைகளில் மோதுவதையும்**
**டாட்டு பாலத்தின் தண்ணென்று குளிர்ந்த**
**இரும்புச் சங்கிலி கோர்த்தப்**
**பாலத்தின் இடைவெளிக் கண்களையும்**
**அலட்சிய மாய்ப் பார்த்தன**
**படைகள்!**

**மின் தூலின் ஆயிரக் கணக்கான**
**மகிழ்ச்சி திளைக்கும் புத்தம்**
**புதிய பனிப் பொழிவையும்**

**கடந்து சென்றதும் திரும்பிப் பார்த்து**
**முப்படைகளும் மென்மையாகப்**
**புன்னகைச் செய்தன!''**

உணர்வூட்டும் கவிதை நடை கேட்டு நெடும் பயணத்தில் மாசேதுங்குடன் வீரம் பொங்கிய நடை போட்டன சிவப்புப் படைகள் – புரட்சிப் படைகள், உண்மையான புரட்சித் தலைவனின் புரட்சிப் பாதையில் – புரட்சி எனும் சொல்லுக்கு இலக்கணமாய்த் தலைமை வகித்தவன் பாதையில்.

## 11

கியான்ஷி, பூகெயின், கூனான் ஆகிய பகுதிகளில் மெல்ல பொதுவுடைமைக் கட்சி வேரூன்றி நான்கிங் ஆட்சிக்கு எதிராகச் செயல்படத் தொடங்கிற்று. சீனா முழுவதும் சிவப்புப் படைகள் தோன்றின. பெரியதும் சிறியதுமாக சோவியத்துகள் ஆங்காங்கே அமைந்தன.

புதிய ராபின்குட் எனப் புகழப்பட்ட லியூஷுடான் செல்வர்களுக்குப் பகைவராக ஏழையர்க்கு நண்பராக ஷென்சி, கான்சு, நின்க்சியா பகுதிகளில் சோவியத்துகளை நிறுவினார். நிலப்பிரபுக்களும், வட்டி முதலாளிகளும் கடவுள் தூதர்களும் அவருடைய பெயரைக் கேட்டு நடுங்கினர்.

1934—35-ல் ஷென்சியின் சிவப்புப் படையினர் தங்கள் வலிமையைப் பெருக்கி பல மாவட்டங்களில் சோவியத் துகளை உண்டாக்கினர். கட்சியின் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. வங்கிகள் அஞ்சலகங்கள் நாணயங்கள்

அஞ்சல் பில்லைகள் எல்லாமே அவர்களுடையவை. நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். லியூஷ-டான் பொதுவுடைமை ஆட்சியை விரிவுபடுத்திக் கொண்டே இருந்தார்.

சியாங்கேஷேக் தம்முடைய பெரிய படையை ஷென்சிக்கு எதிராக அனுப்பினார். சிவப்புப் படைகள் ஒருங்கிணைந்து போரிட முனைந்தன. பல முனைகளில் வெற்றி கிட்டிய போதிலும் கட்சியின் நிர்வாகம் லியூஷ-டான் மீது நடவடிக்கை எடுத்து அவரைப் பதவியி லிருந்து நீக்கி விட்டது. மேலும் நூறு உறுப்பினர்களைக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு நீக்கியது.

அப்பொழுது தென்பகுதி சிவப்புப் படையின் தலைமை யில் இருந்த லின்பியோ, சூஎன்லாய், பென்டெஹ்கூய், மாசே-துங் ஆகியோர் கட்சியின் அத்தகைய நடவடிக்கை களை ஆராய்ந்து நடந்துவிட்ட தவறுகளை உணர்ந்தனர். லியூ மீதும் மற்றவர் மீதும் தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு களைக் களைந்துவிட்டு மீண்டும் லியூவைப் பதவியில் அமர்த்தினர். தவறாக நடவடிக்கை எடுத்த சாங் என்பவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

1936-ல் சிவப்புப் படையின் இணைந்த படைகள் கூட்டுறவாக ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டன. அந்தப் போரில் வீரமரணம் எய்தினார் லியூ.

அவருடைய விதவை மனைவிக்கும் சிறுவனான மகனுக்கும் சிவப்புப் படையினரிடையே பெரிய மதிப்பு இருந்தது. அந்தச் சிறுவனுக்குச் சிவப்புப் படை சீருடை அணிவித்து, தலைவரின் இடுப்பு வாரைக் கட்டிவிட்டு, சிவப்பு நட்சத்திரக் குல்லாவைத் தலையில் வைத்து அழகு பார்த்தனர் படைவீரர்கள். அச்சிறுவன் அவர்களுக்கு ஓர்

இலட்சிய உருவம். அவன் கம்பீரமாக உலா வந்தான் தந்தை நினைப்போடு.

பொதுவுடைமைக் கட்சி ஆட்சி நடத்திய சீனச் சோவியத் பகுதிகளில் நிலவுடைமை முதன்மையான சீர்திருத்தமாக விளங்கியது. நிலத்தைத் தாமே பயிரிடாமல் குத்தகைக்குக் கொடுத்து வருவாய் ஈட்டியவர்கள் நிலப் பிரபுக்கள் என வரையறுக்கப்பட்டது. அவர்களுடைய நிலங்களைக் கையகப் படுத்தி நிலமற்ற உழவர்க்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டது. சொந்த தொழிலாக நிலத்தை வைத்திருந்தோர் அனுமதிக்கப்பட்டனர். ஏழை விவசாயிகள் கடன் பெற்று நிலத்தைப் பயிரிட்டனர். நிலவரி அவர் களுக்கு இல்லை. அடிப்படையான விவசாயப் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கால்நடை வளர்ப்புப் பள்ளி களும் தொடங்கப்பட்டன. வயிற்றுக்குச் சோறிடுதல் அடிப்படைக் கொள்கை. அதுவே சிவப்புப் படையின் வெற்றி.

கூட்டுறவு இயக்கம் செம்மையாகச் செயல்படுத்தப் பட்டது. உற்பத்தியும் பங்கிடுதலும் ஒழுங்காக இயங்கின. பொது நிலங்களும் படையினர் நிலங்களும் கூட்டுறவு முறையில் பயிரிடப்பட்டன. சோம்பேறி நில வாழ்க்கை ஒழிந்தது. 'சனிக்கிழமை படைகள்' என்ற பெயரில் வாரத்தில் ஒருநாள் எல்லாரும் பண்ணைகளில் வேலை செய்தல் வேண்டும். எவரும் விதிவிலக்கல்ல. குழந்தை களின் அமைப்புகள், அதிகாரிகள், சிவப்புப் படையினர், பெண்டிர் அமைப்புகள், காவலர்கள் எல்லாருமே உழைத் திடல் வேண்டும். மாசே-துங் கூட இந்த ஒருநாள் வேலையில் பங்கு கொண்டு பண்ணையில் உழைத்தார்.

கூட்டுறவு மனப்பான்மையும் சமுதாய உணர்வும் சிவப்பு மக்களால் பொது மக்களுக்குப் பயிற்சியாக ஊட்டப்பட்டன,

பொருளாதார, அரசியல் கலாச்சார விழிப்புணர்வு விவசாய மக்களுக்கு அளிக்கப்பட்டது. அதுவே பொதுவுடைமை ஆக்கத்திற்கு வழிகாட்டி.

வேலை இல்லாத் திண்டாட்டம், இரந்து வாழ்தல், அதிகாரிகளின் ஊழல் அழித்தொழிக்கப்பட்டன. சமுதாயப் பழைய திருமண முறைகள், விபச்சாரம், மாமியார் சர்வாதிகாரம், பெண்ணடிமை, பெண்களை வாங்குதல் விற்றல் ஆகியவை கடுமையாக ஒழிக்கப்பட்டன. நகராட்சி, ஊராட்சி நிர்வாகங்கள் இலவசமாகத் திருமணச் சான்றிதழ்களை வழங்கின. சுதந்திரக் காதலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறக்கும் குழந்தைகள் உரிமை உடையவை. அநாதைக் குழந்தைகளே கிடையாது. பிறப்பவை எல்லாமே சட்டபடியான குழந்தைகளே.

மணவிலக்கு முறைகளும் தளர்த்தப்பட்டன. பிரிந்தவரின் சொத்துரிமை முறைப்படுத்தப்பட்டது. கல்வியறிவு ஊட்டுதல் பெற்றோரின் கடமை. சுதந்திரமான உலகக் கல்விக்கு வழி வகுக்கப்பட்டது. கல்லாமை அகற்றப்பட்டது பொதுவுடைமைச் சமுதாயத்தில்.

கல்வி முறைகளில் படைப்பயிற்சி முதன்மை பெற்றிருந்தது. அரசியல் கல்வியில் பொதுவுடைமை வலியுறுத்தப்பட்டது. சமுதாயக் கல்விக்கூடங்கள் தோன்றின.

அக்கல்விக் கூடங்களில் கற்றோரின் முழக்கம் மலைகளில் எதிரொலித்தது.

"இது என்ன?,,

"இது சிவப்புக் கொடி"

"இவன் யார்?"

"இவன் ஓர் ஏழை"

"சிவப்புக் கொடி என்பது என்ன?"

"சிவப்புக் கொடி சிவப்புப் படையின் கொடி"

"சிவப்புப் படை என்பது என்ன?"

"சிவப்புப் படை என்பது ஏழைகளின் படை!"

விவசாயிகளும் தொழிலாளர்களும் ஏழை எளியவர்களும் சீனப் பொதுவுடமைக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை உள்ளத்தின் ஆழத்தில் பதித்துக் கொண்டனர். கல்வியிலும் எழுத்திலும் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொழிற்சாலைகள் அமைப்பதிலும் சிவப்புப் படையினர் முன்னேற்றம் கண்டனர். தேவைக்கேற்ற தொழில் வளத்தில் தன் நிறைவை எட்டிற்று சீனச் சோவியத் அரசுகள். மாணவிகளுக்குக் கல்வி மூன்று மணி நேரமும், நூல் நூற்றல் ஐந்து மணி நேரமும் பயிற்சி அளிக்கப்பட்டது. சில தொழிற்சாலைகளில் துப்பாக்கிகளும் குண்டுகளும் தயாரிக்கப்பட்டன. பல்வேறு தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. மருத்துவ மனைகள் சிறப்பாக இயங்கின. வானொலி நிலையங்கள் நிறுவப்பட்டன. எங்கும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமும், ஊதியத்துக்கு ஏற்ற உழைப்பும் வற்புறுத்தப்பட்டது. ஆடவர் பெண்டிர் இருசாரார்க்கும் சமமான ஊதியம்.

செஞ்சீனாவை உருவாக்கிய சிவப்புப் படையின் வீரர்களைப் பற்றி வெளி நாடுகளில் மிகத் தவறான மதிப்புக் குறைந்த எண்ணங்கள் பரப்பப்பட்டிருந்தன. ஆனால் உண்மைகள் வேறு. சிவப்புப் படை எந்தச் சக்தியாலும் வெல்ல முடியாதவை. அது அதனுடைய நெடும் பயணத்தில் நிரூபிக்கப் பட்டிருந்தது.

நின்க்சியாவிலும் கன்சூவிலும் சிவப்புப் படை வீரர்கள் குகைகளில் தங்கியிருந்தனர். அவர்களில் பலர் செல்வச் செழிப்பாக வாழ்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வைக் கோல் படுக்கைகளில் உறங்கினார்கள். இப்பொழுது குட்டிச் சுவரான வீடுகளிலும் அவர்கள் மகிழ்வுடன் தங்கினார்கள். அவர்கள் உண்மையான மார்க்சிஸ்டுகளாகவும் பொது வுடைமைக் கட்சியின் ஆர்வலர்களாகவும் விளங்கினார்கள்.

சியாங்கே ஷேக்கின் விமானங்கள் சிவப்புப் பகுதிக்கும் மேலே பறந்து பல வகையான விளம்பர வேண்டுகோள் அறிக்கைகளை வீசிச் செல்வது உண்டு. காட்டிக் கொடுப் போர்க்குப் பரிசளிப்பதாகவும் கேட்டுக் கொள்வது உண்டு.

'மாசே-துங்கையோ அல்லது சூஹை டுங்கையோ கொல் பவர்களுக்கு நாங்கள் 100,000 டாலர் கொடுத்து எங்கள் படையில் சேர்த்துக் கொள்வோம். வேறு எந்தக் 'கொள்ளைக்காரத்' தலைவர்களைக் கொன்று விட்டு வந்தாலும் தகுந்த பரிசுகள் கொடுப்போம்.'

1936-ல் செப்டம்பரில் நின்க்சியா, கன்சூபகுதியில் இருந்த சிவப்புப் படைகள் பென்க்டே கூய் தலைமையில் மஞ்சள் ஆற்றை நோக்கி நகர்ந்தன. சூடேயின் படைகள் தெற்கி லிருந்து வந்து இணைந்தன. அக்டோபர் இறுதியில் வடகன்சூ முழுவதையும் கைப்பற்றிக் கொண்டன.

ஜப்பானைப் பொதுப் பகைவனாக எதிர்ப்பதற்காக உள்நாட்டுப் போரினைத் தவிர்த்துக் கொண்டது சிவப்புப் படை. அரசியல் விளக்கங்களை மக்களிடையே பரப்புவதில் கவனம் செலுத்திற்று. பொதுவுடைமைக் கொள்கை மலர் களைத் தூவிற்று.

நாள்தோறும் ஓரளவு மண்ணைச் சிவந்த மண்ணாக்கி விடும் கடமை சிவப்புப் படைக்கு இருந்தது. படையெடுப்பு

இல்லாத காலங்களில் சிவப்புக் கம்பளங்களை வயல்கள் மீதும் ஊர்கள் மீதும் விரித்துக் கொண்டே இருந்தன. படைகள் நகர்ந்து சென்று கொண்டே இருக்கும். பெரிய நிலப்பிரபுக்கள் அண்டை அயலாரின் சிறிய நிலப்பகுதியைத் தம் வசம் எடுத்துக் கொள்வதைப் போலச் சிவப்புப் படையினர் தம்முடைய ஆளுகையை விரிவுபடுத்திக் கொண்டனர்.

பென்க்டே கூய் ஓரிரவில் முகமதிய உழவர்கள் வீட்டில் தங்கியிருந்தார். தேச வரைபடம் சுவரில் பொருத்தப் பட்டது. வானொலி செயல்பட்டது. செய்திகள் வந்தன. பென்க் ஓய்வு கொண்டிருந்தார். முகமதிய உழவர் மக்களை அழைத்தார். அவர்களிடம் சிவப்புப் படையின் கொள்கை களையும் திட்டங்களையும் விளக்கினார். முதிய பெண்மணி ஒருவர் அவரிடம் இரண்டு மணி நேரம் பேசினார். தம்முடைய துன்பங்களையும் தொல்லைகளையும் பொழிந் தார். உடனே சிவப்புப் படையின் விவசாயப் பிரிவு நகர்ந்தது. ஒரு நிலப்பிரபுவின் நிலத்தில் அறுவடை செய்தது. நிலப்பிரபு ஓடிவிட்டார். ஒரு 'துரோகி'யின் நிலங்கள் சிவப்புப் படையின் ஆளுகைக்குள் அடங்கிப் போனது. மற்றொரு படைப்பிரிவு உள்ளூரின் மசூதியைத் தூய்மை படுத்திற்று. உழவர்களுடன் உறவு வலுப் பெற்றது. உழவர்கள் வரிச்சலுகைக்காக நன்றி கூற திரண்டு வந்தனர். சிலர் பென்க்கிடம் அழகான மரக்கட்டிலைப் பரிசளித்தனர். அவர் சிரித்துவிட்டு உள்ளூர் பொது இடத்திற்கு அதனை வழங்கி விட்டார்.

சூடேயின் நான்காவது முன்னணிச் சிவப்புப் படை வடக்கு நோக்கி நகர்ந்த பொழுது அதனைத் தடுத்து நிறுத்த கூமின்டாங் படைகள் வந்தன. பகைவரின் அந்தப் படைக்குள் பொதுவுடைமை உணர்வுள்ள வீரர்கள் மறைந்திருந்தனர். 3000 வீரர்கள் லூங்சி அருகே வந்த

பொழுது சிவப்புப் படையினருடன் சேர்ந்து கொண்டு விட்டனர். அது நான்கிங் அரசுக்குப் பெரியதொரு வீழ்ச்சி யாக அமைந்தது.

மீண்டும் ஒரு படையெடுப்பு. அதனையும் சூடேயின் படைகள் தந்திரமாக முறியடித்தன. படைகள் நகர்ந்து சென்ற பொழுதே ஆங்காங்குள்ள ஏழை உழவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்தன. நிலப்பிரபுக்களை ஓட்டிவிட்டு நிலங்களை உண்மை உழவர்களுக்கு அளித்தன. சிறுவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவும் உதவின. வட்டி முதலாளிகளை ஊரை விட்டு வெளியேற்றி ஏழை களின் பொருள்களை ஒப்படைத்தன.

படை வீரர்களின் 'படைச்செருக்கு' மிகவும் பாராட்டக் கூடியதாக இருந்தது. தெருவில் வீரர்கள் சிலர் நின்று ஒரு விவசாயியின் குறையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுடைய தலைக்கு மேல் ஒரு விமானம் பறந்து சென்றது. பகைவரின் விமானம் என்பது தெரிந்ததும் வீரர்கள் ஓடித் தரையில் பதுங்கினார்கள். இரண்டு முறை வட்டமடித்து விமானம் ஒரு குண்டைப் போட்டது. 'இரும்பு முட்டை போடுகிறது' எனவும், 'பறவை எச்சமிடுகிறது' எனவும் கேலி பேசினார்கள் வீரர்கள். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் மெல்ல ஈடுபட்ட வீரன் ஒருவனுக்குக் குண்டினால் காயம் ஏற்பட்டது. அவனுக்குக் கட்டு போடப்பட்டதும் அவன் நடந்தே சென்றான், அலட்சியமாக.

போர் முனை ஒன்றில் பகைவரின் ஒரு பிரிவுப் படை சுற்றி வளைக்கப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டது. சிவப்புப் படையினர் சிறைப்பட்டோர்க்கு வாழ்த்து கூறினர். அவர்கள் பட்டினியாக இருந்ததால் 200 ஆடுகளை அவர்களுடைய உணவுக்காக அனுப்பி இதுதான் சிவப்பின் கொள்கை எனக்

கூறினர். மாலையில் அவர்களை ஆயுதங்களுடன் திருப்பி அனுப்பி விட்டனர்.

சியாங்கே ஷேக் சிவப்புப் படையைப் பற்றிய தவறான வதந்திகளை மக்களிடையே பரப்பி வந்தார். அதனை முறியடித்துக் தங்கள் தூய்மையை நேர்மையைக் கொள்கையைப் பரப்ப வேண்டிய வேலை சிவப்புப் படைகளுக்கு ஏற்பட்டது.

ஓய்ந்த நேரங்களில் கொள்கை விளக்க நாடகங்களையும் படைகள் அரங்கேற்றின.மக்கள் எளிதில் நிலைமைகளைப் புரிந்து கொண்டனர்.

சிவப்புப் படைகளின் அனைத்துப் பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டது. சூடேயின் ஒப்பற்ற தலைமையின் கீழ் 'அனைத்துச் சீனச் சிவப்புப் படை' உருவாயிற்று. அவருடைய வெற்றிகள் பெருமைக்குரியவை. அவருடைய துணையுடன் மாசே–துங் அரசியல் தலைவராகப் பணியாற்றினார்.

**மலைகள்!**
**பொங்கி எழும் கடலின் பெரிய**
**அலைகளின் எழுச்சி போல!**
**ஆயிரக் கணக்கான ஆண்குதிரைகள்**
**கடுமையான போர்க்களத்தில்**
**முழுவேகத்தில் மோதிப் பாய்வது போல!**

— மாவோவின் கவிதை

# 12

சீனாவின் ஷென்சி, கான்சு, நின்க்சியா, கெச்சுனான், சின்கியாங் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் முகமதியர்கள் நெடுங்காலமாக ஆட்சியிலும் ஆட்சி இழந்தும், உழவர்களாகவும், ஏழைகளாகவும் வாழ்ந்து வந்தனர். சீனாவின் முகமதியர்கள் அக்காலத்தில் 20, 000 000 எனக் கணக்கிடப் பட்டிருந்ததில் மேற்கண்ட மாநிலங்களில் பாதிக்கு மேற்பட்டோர் வாழ்ந்தனர். மசூதிகளும் ஏராளமாக இருந்தன. குரான் முறையிலான வாழ்க்கையிலும் வழுவாமல் இருந்தனர். துருக்கி அராபிய வழிவந்தோர் அவர்கள். ஆனால் சீனமொழியே அவர்களுடைய வழக்கத்தில் இருந்தது. சீனக்கலாச்சாரமும் அவர்களிடம் பரவியிருந்தது. அதனால் இயல்பாகவே சீனச்சிவப்பில் அவர்களும் கலந்து விட்டனர். ஜப்பானின் ஆதிக்கத்தை அவர்களும் எதிர்த்தனர்.

சிவப்புப் படைகளில் முகமதியரும் சேர்ந்தனர். அவர்களுக்கென தனிப்படைப் பிரிவுகளும் அமைந்தன. சிவப்பு முஸ்லீம் படைப் பிரிவுகள் அவை. பொதுவுடைமைக் கருத்துகளை ஏற்று அவர்களும் ஒன்றுதிரண்டனர். மார்க்சின் கொள்கைகளில் அவர்களுக்கும் உடன்பாடு. ‘கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ’ ‘இனப் போராட்டங்கள்’ ஆகியவற்றை முகமதியர்கள் படித்தார்கள்.

‘‘சீனர்களும் முகமதியர்களும் உடன் பிறந்தோரே எனவும், சீனக் குருதியே உடம்பில் ஓடுகிறது எனவும், எங்களுடைய பொதுப் பகைவர் நிலப்பிரபுக்களும், முதலாளிகளும், வட்டிச்சுரண்டல் காரர்களும், ஆட்சியாளர்களும் ஜப்பானியரும் ஆவர், எமது பகைவரை எதிர்த்து

நாங்கள் புரட்சியில் ஈடுபடுகிறோம்'' என்றனர் முகமதியர்கள்.

சிவப்புப் படையினர் முகமதியரின் மதவழிபாடுகளில் தலையிடுவதில்லை. செல்வந்தரான முகமதியர்களைச் சிவப்பு முகமதியர்கள் தண்டிக்காமல் விட்டதுமில்லை. அதனால் முகமதியர்கள் சீனர்கள் வேறுபாடில்லாமல் எல்லாரும் சிவப்பில் ஒன்றுபட்டு நின்றார்கள். போரிட்டார்கள். இலட்சியக் கொள்கைகளில் உறுதியுடன் திகழ்ந்தார்கள். சிவப்புச் சீனாவுக்கும் முகமதியர்களுக்கும் ஒருமைப்பாடு நிலவியது.

எனவே, சீனா முழுமையும் சிவப்புத்தீவுகள் தோன்றிய வண்ணம் இருந்தன. மதங்களுக்கு அப்பாற்பட்டு அவைப் பெருகி வளர்ந்தன.

அனைத்துச் சிவப்புப் படைகளும் ஒருங்கிணைக்கப் பட்டன. குறிப்பிட்ட ஒரே பகுதியில் அவை கவனம் செலுத்துமாறு சிறப்புத் தலைமைத் தளபதி சூடேயின் சீரிய தலைமையில் இணைந்தன.

சூடேயின் சிவப்புப் பயணத்தில் நிகழ்ந்த வியப்பான வீரமிக்க செயல் அவருக்கு 'சமையல்காரன்' என்ற வேடிக்கைப் பெயரினை அளித்தது.

சியாங்கே ஷேக் சூடேயை ஒழித்துவிட படைகளை அனுப்பித் தேடுதல் நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்த காலம்.

ஒரிரவு சூடே தம்முடைய தோழர்கள் நாற்பது பேருடன் விடுதி ஒன்றில் தங்கியிருந்தார். அவ்விடுதியைச் சியாங்கே ஷேக்கின் படைகள் சுற்றி வளைத்தன. துப்பாக்கி ஒசை கேட்டது. எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால் பகைவர் படையினரால் எவரையும் அடையாளம் காண இயல

வில்லை. ஆயினும் பகைவர் பலர் சூடேயைச் சூழ்ந்து நின்று அவருடைய தலைக்குக் குறிவைத்தனர். "என்னைச் சுட்டு விடாதீர்கள். நான் விடுதியின் வெறும் சமையல்காரன். உங்களுக்கும் சேர்த்துச் சமையல் செய்து போடுபவன்." என உரக்கக் கத்தினார் சூடே. படை வீரர் களுக்குப் பசி நேரம். சிறிது தயங்கினார்கள். 'சமையல் காரனை'ச் சுடுவதற்கு சூடேயை வெளிச்சத்திற்கு இழுத்துச் சென்று அருகில் அடையாளம் பார்த்தனர். அங்கே பகைப் படையின் தலைவன், "இவர்தான் சூடே கொல்லுங்கள்" எனக் கத்தினான்.

அதற்குள் சூடே தம்மிடம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் அவனைச் சுட்டுவிட்டுப் படைகளை தள்ளிப் புறங்கண்டு தப்பி ஓடிவிட்டார். அவருடன் தோழர்கள் ஐவரே தப்பிச் செல்ல முடிந்தது.

இந்த நிகழ்ச்சி சிவப்புப் படைகளில் வேடிக்கையான அன்புடன், "சமையல்காரர்களின் தலைவர்"! என்ற புனை பெயரினை அளித்தது சூடேக்கு.

மாசே-துங்கின் விவசாயப் படை கூனானின் வழியாக சிங்கான்ஷான் வந்து சேர்ந்த பொழுது அவர் தம்முடைய உடன்பிறப்பான மாசே-மிங்கைத் தூதாக அனுப்பினார் சூடேயிடம். கட்சியின் ஒப்புதல்படி சூடேயின் படைகளும் மாசே-துங்கின் படைகளும் இணைந்தன. ஐந்து மாநிலங் களைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. 50000 ஆதரவாளர்கள் திரண்டனர். 4000 படைவீரர்களிடம் துப்பாக்கிகள் இருந்தன. 10000 வீரர்களிடம் ஈட்டிகளும் கத்திகளும், வாள்களுமே இருந்தன. மற்றவர்கள் கட்சித் தொண்டர்கள், கொள்கை விளக்கமளிப்போர்; சொற்பொழி வாளர்கள் குடும்பங்கள்-குழந்தைகள் உட்பட.

இவ்வாறு சூ-மாவோ இணைப்பு தெற்குச் சீனாவில் அடுத்த ஆறு ஆண்டுக் காலத்தின் வரலாற்றைப் படைத்தது. சோவியத்துகளை உருவாக்கி படைகளைப் பெருக்கிப் போர்க்களங்களைக் கண்ட வரலாறு மாசே-துங்கினையும் சூ-டேவையும் சாரும்.

'சிவப்புக் கழுகு' என இலட்சக்கணக்கான மக்களால் போர்க்களங்களில் புகழப் பெற்றவர் சூடே. அவர் எத்தனையோ முறை இறந்துவிட்டதாக கூமின்டாங் பகைவர்களால் கதை சொல்லப்பட்டது. ஆனால், அவர் மீண்டும் மீண்டும் உயிர் பிழைத்துச் சிவப்புப் படைகளைச் சீனா முழுவதும் நடத்தினார். ஐம்பது வயதுக்கு மேற்பட்ட காலத்திலும் அவர் தமக்கு எப்பொழுதுமே நாற்பத்தாறு வயது என்று கூறிக் கொண்டதைத் தோழர்கள் வேடிக்கை செய்வதுண்டு. புதிதாக அவர் ஒரு விவசாயக் குடும்பத்துப் பெண்ணை மணந்துகொண்ட பிறகு வயது எண்ணுவதையே நிறுத்திவிட்டார் என்றும் கேலி பேசுவதுண்டு. அந்தப் பெண்மணியோ வீரம் மிக்கவர். துப்பாக்கிச் சுடுவதில் வல்லவர். குதிரையேறி போர்க்களம் செல்பவர். ஒரு படைக்குத் தலைமை தாங்கி நடத்தினார். காயமுற்ற தோழர்களைத் தம்முடைய தோளில் தூக்கிச் சென்று காப்பாற்றும் வலிமையுடையவர். துணிச்சல் மிகுந்தவர்.

சூடே தம்முடைய படைவீரர்களுடன் கலந்து எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். எந்தத் தவறையும் நேரில் கேட்டறிவார். களைத்துவிட்ட தோழர்க்குத் தம்முடைய குதிரையைக் கொடுத்துவிட்டு நடந்து செல்வார். மனித அன்பில் சிறந்தவர். எனினும் கைகள் குருதியில் தோய்ந் தவை. இரத்தம் நனைந்த கைகள். அது அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவரின் கைகளா அல்லது கொலைகாரரின் கைகளா என்பதை அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது. அவர் துறவியும் அன்று. ஆனால் அவர்

தம்முடைய ஏழை மக்களிடையே, பெரும்பான்மையான சீன மக்களிடையே மிகவும் நேசிக்கப் பெற்ற மாமனிதர். ஏழையர்க்குச் சுதந்திரம் அளித்தவர். மனித அன்பை நிலைநாட்டப் போரிட வேண்டிய காலத்தின் கட்டாயத் துக்கு ஆளானவர்.

இவ்வாறு மாசே-துங்கும் சூடேயும் சீனத்தைச் சிவப்பாக்கிக் கொண்டிருந்த பொழுது சியாங்கேஷேக் அந்நிய ஆதிக்கத்துக்கு வரவேற்பு அளித்துத் தம்மை நாட்டின் தலைமைப் பதவி அளவுக்கு உயர்த்திக் கொண்டுவிட்டார்.

சிவப்பினை ஒழித்து வெண்மையாக்குவதே அவருடைய தலையாய நோக்கம். ஜப்பான் அவரை விருப்பம் போல ஆட்டி வைத்தது. சியாங்கே-ஷேக்கின் படைகள் இருவகை யாகப் பிரிந்தன. அவருக்குக் கட்டுப்பட்ட படைகள். அவர் ஆணைப்படி சிவப்புப் படைகளைச் சீன மண்ணிலிருந்து அழித்து ஒழிக்கும் நோக்கத்தில் போரிடுபவை. மற்றொரு பிரிவினர் தம் இனத்தவரோடு போரிட விரும்பாமல் அஃதாவது சீனச் சிவப்போடு போரிடாமல் அந்நியரான ஜப்பானியரை விரட்டிவிட்டுச் சீனாவை இணைத்து ஒரே சீனா ஆக்கிட போரிடுபவர்கள்.

சிவப்புப் படைகள் ஜப்பானின் ஆதிக்கத்தை விரட்டி யடித்து ஒரே மண்ணாக மாற்றுவதே தங்களுடைய முதல் கடமை என அறிவித்தது. ஆயினும் சியாங்கேஷேக் ஜப்பானின் கைப்பாவையாகி விட்டார். மக்களுடைய ஜப்பான் எதிர்ப்பினையும் அவர் மதிக்கவில்லை.

சியாங்கேஷேக்கின் கருத்துக்கு எதிராக அவருடைய படையிலேயே விளங்கியவர் சாங்சூயாலியாங். அவரைப் படைவீரர்கள் ஆதரித்தனர். உண்மையில் சிவப்புப் படைகள் அரசாங்கப் படைகளுக்கு ஆதரவளித்து ஜப்பானை எதிர்த்துப் போரிட்டால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்

என விரும்பினார் சாங். ஆனால் சியாங்கேஷேக் அதனை விரும்பவில்லை. சிவப்பை ஒழித்துக்கட்டு என்றார் அவர். ஜப்பானை ஆதரிக்க அவர் தீர்மானம் நிறைவேற்றினார். 'சிவப்பை ஒழிப்போம்' தீர்மானம் போட்டார்.

இந்த அறிவிப்பினை சாங் ஏற்றுக்கொள்ளாவிடில் சாங்கைப் பதவி நீக்கம் செய்வது எனவும் அவருடைய படைவீரர்களிமிருந்து ஆயுதங்களைப் பறித்துக் கொள்வது எனவும் ஆணையிட்டார் சியாங்கேஷேக். சிவப்புக்கு ஆதரவான படைவீரர்களைக் கைது செய்யவும் உத்தர விட்டார். சாங் கைது செய்யப்பட வேண்டிய நேரம்.

உடனே சாங் தம்முடைய ஆதரவுப் படைத்தலைவர் களின் கூட்டத்தைக் கூட்டினார். மறைவான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. தலைமைத் தளபதி சியாங்கே ஷேக்கைக் கைது செய்து சிறையில் அடைக்க தீர்மானிக்கப் பட்டது. இரவு பத்து மணிக்கு 1,70,000 படைவீரர்கள் ஆயத்தமாயினர்.

அச் செய்தி சியாங்கேஷேக்கிடம் சேர்ந்திராத நேரம். விடியற்காலை ஆறுமணி. நீலசட்டைப் படைகள் சுற்றி வளைக்கப்பட்டன. தலைமையானவர்கள் சிறை பிடிக்கப் பட்டனர். தலைமைக் காவல் துறையினரும் சிறைப் பட்டனர். வானூர்திகளும் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. குருதி சிந்தாமலே எல்லாம் முடிந்தன.

ஆனால் பத்துக்கல் தொலைவில் உல்லாச புரியில் தங்கியிருந்த சியாங்கே ஷேக்கைச் சிறைப் பிடிப்பதில் குருதி வெள்ளம் பாய்ந்தது. நள்ளிரவில் லின்டங் என்ற அந்த இடத்தை வளைப்பதற்குச் சாங்கின் தளபதி 26 வயதுடைய சன்மிங்சியூவின் தலைமையில் படைகள் சென்றன.

பாதி தொலைவிலேயே 200-க்கு மேற்பட்ட படை யினரைச் சிறை பிடித்தான் சன். விடியல் மூன்று மணிக்கு

பாதுகாவல் படையினை விரட்டியடித்தான். ஐந்து மணி வரை காத்திருந்து முதல் லாரி காவலருடன் வந்ததும் தாக்குதல் தொடங்கினான். சியாங்கே ஷேக் ஓய்வு கொண்டிருந்த மாளிகை நோக்கிப் படை நடத்தினான்.

சிறிதும் எதிர்பாராத காவல் படையினர் எதிர் தாக்குதல் நடத்தினர். தங்களுடைய தலைவர் சியாங்கே ஷேக் தப்பிச் செல்வதற்கு நேரம் கொடுத்துத் தடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களை வென்று சன் சியாங்கே ஷேக்கின் படுக்கை அறைக்குள் நுழைந்த போது அவர் தப்பிச் சென்றிருந்தார்.

அவரைத் தேடிக் கண்டுபிடிக்க ஆணையிட்டான் சன். படைகள் அருகிலிருந்த மலைப் பகுதிகளில் பனி நிரம்பிய முகடுகளில் தேடின. முடிவில் மலையின் குகைக்குள் சியாங்கே ஷேக் மறைந்திருந்ததைக் கண்டுபிடித்தான் சன்.

சன் மிங் சியூவைக் கண்டதும் தம்முடைய முதல் சொல்லாகச் சியாங்கே ஷேக் கூறினார்: 'நீ என்னுடைய தோழன் என்றால் என்னைச் சுட்டுக் கொன்று விடு. எல்லாமே முடிந்து போகட்டும்.'

சன் கூறினான்: 'நாங்கள் சுட மாட்டோம். ஜப்பானுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து நம்முடைய நாட்டினைக் காப்பாற்ற வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.'

"சாங் இங்கே வந்தால் நான் கீழே இறங்கி வருகிறேன்" என்றார் தலைவர்.

"சாங் நகரத்தில் இருக்கிறார். உங்களைக் காப்பாற்றி அழைத்துச் செல்ல நாங்கள் வந்திருக்கிறோம்."

"குதிரையை மலைக்குக் கொண்டு வந்தால் நான் வருகிறேன்" என்றார் தலைவர்.

"இங்கே குதிரை இல்லை" என்ற சன், "நீங்கள் என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள். உங்களைச் சமவெளியில் கொண்டு போய் விடுகிறேன்" என்றான்.

அவர்க்கு முன்னால் மண்டியிட்டான் சன். அவர் அவன் முதுகில் தாவி ஏறிக் கொண்டார்.

மலையடி வரையில் முதுகுச் சுமையின் நடைப் பயணம் தொடர்ந்தது. அங்கே கொண்டு வரப்பட்ட காரில் சியாங்கே ஷேக் அழைத்துச் செல்லப்பட்டார் சியான் நகருக்கு.

"நடந்தது நடந்து விட்டது. இனிமேல் சீனாவில் புதிய நடைமுறை வேண்டும். நீங்கள் என்ன செய்வதாக எண்ணம்?" என்றான் சன் சியாங்கே ஷேக்கிடம். "சீனாவின் உடனடி வேலை ஜப்பானுடன் போரிட வேண்டியதுதான். மக்களுடைய எண்ணமும் அதுதான். நீங்கள் ஏன் சிவப்புப் படையுடன் போரிடுகிறீர்கள், ஜப்பானுடன் அல்லவா போரிட வேண்டும்?" என்றான், சன்.

"நான் சீனாவின் தலைவர், நான் நாட்டின் பிரதிநிதி. என்னுடைய கொள்கை சரியானதே" என்றார் சியாங்கே ஷேக்.

அவர் பாதுகாப்பாக வீட்டோடு வைக்கப்பட்டார்.

எட்டு திட்டங்கள் நாடு முழுவதும் அறிவிக்கப்பட்டன.

நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாடுக்கும் எல்லாரும் பொறுப்பேற்க வேண்டும். நான்கிங் அரசினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜப்பானை எதிர்த்துப் போரிட உள்நாட்டுப் போரினைத் தவிர்த்தல் வேண்டும்.

ஷாங்கையில் தலைவர்களை விடுதலை செய்தல் வேண்டும்.

எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் வேண்டும்.

மக்கள் சுதந்திர அமைப்புகளை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

மக்களின் உரிமைகளையும் அரசியல் சுதந்திரத்தையும் நாட்டுப்பற்று அமைப்புகளையும் பாதுகாத்தல் வேண்டும்.

டாக்டர் சன் யாட்சென்னின் விருப்பங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

நாட்டை விடுவிக்க விடுதலைக் கூட்டமைப்பினைக் கூட்டுதல் வேண்டும்.

இத்திட்டங்களைச் சீனச் சிவப்புப் படையும், சோவியத் அரசும், சீனப் பொதுவுடைமைக் கட்சியும் உடனடியாக ஏற்றுக் கொண்டு ஆதரவளித்தன.

சில நாட்களுக்குப் பிறகு சாங்சூயா லியாங் தம்முடைய சொந்த விமானத்தை அனுப்பிச் சிவப்புப் படையின் பிரதிநிதிகளாக சூ என்லாய், யே சியன் யீங், போகூ ஆகிய மூவரையும் சியான் நகரத்துக்கு அழைத்து வந்தார். அரசாங்கப் படைகளும் சிவப்புப் படைகளும் இணைந்து ஜப்பானை எதிர்த்துப் போரிட முடிவு செய்யப்பட்டது. 130,000 சங்பை படையினர், 40,000 சிப்பை படையினர் (இரு சாராரும் நான்கிங் படையினர்) சிவப்புப் படையின் 90,000 – அனைவரும் இணைந்த கூட்டுப்படை ஜப்பானை எதிர்த்துப் போரிடுதல் வேண்டும். சாங் தலைமைத் தளபதி என அறிவிக்கப்பட்டார்.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. சிவப்புப் படைகள் பல மாநிலங்களைக் கைப்பற்றி முன்னேறின. நாட்டை அந்நியரிடமிருந்து விடுவிக்கப் போரிட்டன. கூட்டுப் படைகளும் வெற்றி ஈட்டின.

ஆனால், நான்கிங் அரசில் சிலர் சியாங்கே ஷேக்கை விடுதலை செய்ய வேண்டும் எனவும், சாங்கைக் கைது செய்து கூட்டுப்படைத் தலைமையிலிருந்து நீக்கிவிட வேண்டும் எனவும் மக்களிடையே பிரசாரம் செய்து குழப்பம் விளைவித்தனர்.

அதனால் படைகள் செயலிழந்து நின்றன. சியாங்கே ஷேக் இறந்து விட்டதாகவும், அதற்குக் காரணம் சாங் எனவும் வதந்திகள் பரவின. வானொலியும் செய்தித் தாள்களும் தூபமிட்டுக் குழப்பம் விதைத்தன; பொய்களைப் பரப்பின.

சிவப்புப் படைகளுக்கும் அரசுப் படைகளுக்கும் பூசலை உண்டாக்கின. பொய் மூட்டைகள், சாங் ஒரு சிவப்பு மனிதர் எனவும் அவர் கொல்லப்பட்டதாகவும் எழுதினர்; பேசினர். "பொய்ச் செய்திகளைப் பரப்பலாம். ஆனால், அதற்கும் ஒரு எல்லை உண்டு" என்றார் லெனின். சீனச் செய்தி ஏடுகளும் வானொலியும் எல்லையற்ற பொய்ச் செய்திகளையே பரப்பி வந்ததால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டு ஜப்பானில் எதிர்ப்பினை பலவீனப் படுத்திற்று. சியாங்கே ஷேக் உண்மைகளை உணரத் தொடங்கினார்.

ஜப்பானைத் தடுத்து நிறுத்திச் சீனாவை மீட்பதற்குச் சீனச் சிவப்புப் படைகளும் அரசுப் படைகளும் உறு துணையாய்ச் செயல்பட வேண்டும் எனச் சோவியத் அரசாங்கமும் பொதுவுடைமைக் கட்சியும் பேசி முடிவு செய்தன. தூதாகச் சூ என்லாய் சியானுக்குச் சென்றார்.

சாங்கைச் சந்தித்து விட்டு, சியாங்கே ஷேக்கைச் சந்திக்கச் சென்றார் அவர்.

80,000 டாலர் சூ என்லாயின் தலைக்கு விலை வைத்த சியாங் கே ஷேக்கை அவருடைய அறைக்குள் சென்று சந்தித்தார் சூ என்லாய். மிகவும் இளைத்து வெளுத்துப் போயிருந்தார் சியாங். முதலில் அஞ்சி நடுங்கினார் அவர். பிறகு நிலைமையைப் புரிந்து கொண்டார். சாங்கும் மற்றையோரும் அவரையே தலைவராக ஏற்றுக் கொண்டனர். பொதுவுடைமையரைப் புரிந்து கொள்ளுமாறு அவரை வற்புறுத்தி ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். ஜப்பானை எதிர்த்துப் போரிட ஒப்புக் கொண்டார் நான்கிங் தலைவர். உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரவும் ஒப்புக் கொண்டார்.

செஞ்சீனாவின் வரலாற்றில் இத்தகைய ஒப்பந்தங்கள் மக்களுடைய விடுதலைக்காகவும், சீனத்தின் மீட்புக்காகவும் நிறைவேற்றப்பட்டன. இவை, பொதுவுடைமைக் கட்சியின் வெற்றிப் பயணங்களில் சில படிக்கட்டுகள் எனலாம்.

**மலைகளே!**
**முனை மழுங்காத உங்களுடைய சூலாயுதங்களால்**
**நீலவண்ண ஆகாயத்தைக் குத்தி கிழித்தெறியுங்கள்!**
**ஆகாயம் கீழே விழும்!**
**ஆனால் உங்களுடைய வலிமையால் அதைத்**
**தாங்கிக் கொள்ளுங்கள்!**

— மாவோவின் கவிதை

# 13

சீனாவின் வளர்ச்சியில் ருஷியா பெரும் பங்கு வகித்தது– நேரடியாகவும் மறைமுகமாகவும்; கொள்கை அளவிலும் உதவியாலும்; அறிவுறுத்தும் வகையிலும் ஆக்கமளிக்கும் வகையிலும்.

சீனாவின் கல்வி கற்ற இளைஞர்களிடையே ருஷியா ஓர் இலட்சிய நாடாக விளங்கிற்று. சீனாவின் சமுதாய, அரசியல், பொருளாதார, கலாச்சாரச் சிக்கல்களிலும் வளர்ச்சியிலும் ருஷியாவின் சார்பு பெரிதும் இருந்தது. கூமின்டாங் ஆட்சி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் சீனச் சோவியத்துகளில் அதுவே உண்மை. சீன இளைஞர்கள் மார்க்ஸ் கொள்கைகளில் முழு நம்பிக்கை கொண்டு இலங்கினர். மதங்களுக்கு ஒரு மாற்று போல அத்தத்துவங்கள் இளைஞர்களிடையே வேரூன்றியிருந்தன. இளம் சீனர்கள் லெனினைக் கடவுளைப் போல் மதித்து வணங்கினர். ஸ்டாலின் அவர்களிடையே புகழ் வாய்ந்த வெளிநாட்டுத் தலைவர். சோஷலிசம் சீனச் சமுதாயத்தின் வருங்காலக் கனவு. ருஷிய இலக்கியம் இளைஞர்களிடையே செல்வாக்குடன் பரவிற்று. எடுத்துக்காட்டாக மாக்ஸிம் கார்க்கின் படைப்புகள் சீன ஆசிரியர் லூசூனுக்கு இணையாக மதிக்கப்பட்டன.

சிறப்பித்துச் சொல்லக் கூடிய காரணமும் இருந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய முதலாளி ஆதிக்க நாடுகள் அல்லது சர்வாதிகார நாடுகள் ஆயிரக்கணக்கான அரசியல், கலாச்சார, பொருளாதார தொண்டு நிறுவனங்களைச் சீனா வுக்குள் குவித்துக் கொண்டிருந்தன. தங்களுடைய நாடுகளின்

பொருளியலையும் அரசியலையும் பண்பாடுகளையும் பெரு மளவில் பிரசாரம் செய்து விளம்பரப்படுத்திக் கொண்டி ருந்தன. ஆயினும் ருஷியா அத்தகைய முயற்சிகளில் ஈடுபடவே இல்லை. சீனாவின் சோவியத் மாவட்டங்களைத் தவிர மற்ற பகுதிகளில் மறைமுகமாகவே கொள்கை விளக் கங்கள் விதைக்கப்பட்டன. அதுவும் கூமின்டாங் அரசால் எதிர்க்கப்பட்டது.

ஆயினும் பொதுவுடைமைக் கொள்கைகளும் ருஷியப் புரட்சி வரலாறும் மார்க்ஸ் தத்துவச் சிறப்புகளும் சீன மக்களிடையே பரவிய வண்ணம் இருந்தன. முதலாளி ஆதிக்க கிறிஸ்துவ நலச் சங்கங்களின் பிரசாரங்களை விட மார்க்சிஸம் எளிய மக்களிடம் பரவலாகவும் விரைவாகவும் பரவிற்று. சீன மக்களுக்கு ருஷியா ஓர் இலட்சிய நாடாகவும் கனவாகவும் விளங்கிற்று. 'தொழிலாளர்களுக்கு நாட்டு எல்லை கிடையாது' என்பது மார்க்சும் ஏஞ்சலும் கூறினார்கள். ஆனால் சீன பொதுவுடைமைக் கட்சியினர் தங்கள் நாட்டுக்கு ஒரு தந்தை நாடு உண்டு எனவும் அதுவே ருஷ்யா எனவும் கருதினர். அதுவே அவர்களுக்கு இலட்சியத் தூண்டுதல்; புரட்சிக்கு ஊட்டச்சத்து.

முதலாம் அனைத்துச் சீன சோவியத் காங்கிரஸ் மாநாடு நிறைவேற்றிய தீர்மானம்: 'சீனாவின் சோவியத் அரசாங்கம் உலகத்தின் புரட்சி அமைப்புகள் எல்லா வற்றையும் ஒருங்கிணைக்கவும், உலகத் தொழிலாளர் களையும் நசுக்கப்பட்ட நாடுகளையும் ஒன்று திரட்டவும் முனைந்திருக்கிறது. உலக சோவியத் இணைப்பை உருவாக் கவும், தொழிலாளர் சர்வாதிகார நிலமாகப் படைக்கவும் தயாராக இருக்கிறது. அதற்கு உண்மையான கூட்டுறவை ஏற்படுத்தவும் ஆயத்தமாக இருக்கிறது' என்பது அத் தீர்மானம்.

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் இத்தீர்மானத்தை வெளியுலகம் உணர்தல் எளிதன்று. அவர்கள் 'உலகப் புரட்சி நெடுங்காலம் வாழ்க, எனவும், 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள், எனவும் முழங்கிய முழக்கத்தில் இன, மத, மொழி, கலாச்சார, நாடு, நாட்டெல்லை கடந்த உலக நட்பும் உலகச் சகோதர உலக உடன் பிறப்புத் தத்துவமும் ஓங்கி ஒலித்தன. சோஷலிசக் கனவுகளின் இலட்சிய முழக்கமாக அவை உலகச் செவிப்பறைகளில் அறைந்தன.

சீனச் சிவப்புப் படையினர் ஜப்பானை எதிர்த்தார்களே தவிர ஜப்பானின் சீன மண் ஆதிக்கத்தை எதிர்த்தார்களே தவிர, ஜப்பானியரை வெறுக்கவில்லை. அங்கே மனித அன்பு மிளிர்ந்தது. அமெரிக்க ஆதிக்க மனப்பான்மையை வெறுத்தார்களே தவிர வெள்ளையர் என்பதற்காக வெறுக்கவில்லை. உலக நட்பும், உலக உடன் பிறப்புக் கொள்கையும் அவர்களிடம் வேரூன்றி இருந்தது.

சீனப் பொதுவுடைமையாளரைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் சிக்கவைக்க நான்கிங் அரசு திட்டமிட்டது. அதற்கு ஸ்டாலின்–டிராட்ஸ்கி பிளவுகளைப் பயன்படுத்திற்று. சீன டிராட்ஸ்கி பிரிவினர் தோன்றினர். அவர்கள் உளவுப்படையாகவும் காட்டிக் கொடுப்போராகவும் மாறிச் செயல் பட்டனர். நீலச் சட்டைப் படையாக உருவாகித் தங்களுடைய பழைய சிவப்புச் சட்டைத் தோழர்களைக் காவலர்க்குக் காட்டிக் கொடுத்தனர். ஆனால், அவர்கள் வளர முடியவில்லை. மக்கள் சக்தி அவர்களுக்குக் கிட்ட வில்லை. சீனப் பொதுவுடைமைக் கட்சியின் வலிமை மிக்க தலைமைக்கு எதிராக அவர்கள் தலைதூக்க முடியவில்லை.

சீனச் சிவப்புப்படை ருஷிய முறையில் அமைக்கப் பட்டது. ருஷிய போர் முறைகள் பின்பற்றப்பட்டன. ருஷியா போல் ஷிவிசம் முறையில் சமுதாய அமைப்புகள் தோற்று

விக்கப்பட்டன. சிவப்புப் பாடல்கள் ருஷிய இசை அமைப் பினைப் பின்பற்றின. தழுவலாக அனைத்தும் அமைந்தன.

சீனப் படைகள் சமுதாய அமைப்புக்கும் கொள்கைக்கும் சீன முன்னேற்றத்துக்கும் ருஷிய சோவியத்தைத் தழுவி ஆக்கப்பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த அதே காலகட் டத்தில் தளபதி சியாங்கே ஷேக் இத்தாலிய படைவிமானங் களிலிருந்து குண்டுகளைப் பொழிந்து அவர்களை அழித்துக் கொண்டிருந்தார். ஒய். எம். சி. ஏ. கட்டடத்திலிருந்து பொதுவுடைமைக் கொள்கை எதிர்ப்புகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

சீன ருஷியச் சிவப்பின் தொடர்பு வரலாற்றினை 1923 முதல் 1937–வரையில் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1923 முதல் 1927 வரையில் தேசீயப் புரட்சிகள் காலத்தின் ருஷியத் தொடர்பு. அந்நிய ஆதிக்கச் சக்திகளை முரியடிக்க அன்றைய சீன அரசாங்கத்தை வீழ்த்துவது அதன் நோக்கம்.

1927 முதல் 1933–வரையில் சீனத் தொடர்பிலிருந்து ருஷியாவைத் துண்டித்து வைத்திருந்தது நான்கிங் அரசாங்கம். மாஸ்கோ 1933–ல் நான்கிங்குடன் அரசியல் தொடர்பு வைத்துக் கொண்டது. அந்தக் காலத்திற்குப் பிறகு மீண்டும் தொடர்பு.

மாஸ்கோ எதிர்ப்பினை பிற்காலத்தில் கையாண்டது நான்கிங். சீனச் சிவப்புகளைக் கொன்றழிப்பதே நான்கிங் கொள்கையாக இருந்த காலக் கட்டம் அது.

ருஷியாவுக்குள் ஸ்டாலின் — டிராட்ஸ்கியின் கருத்து வேற்றுமைகள் அவ்வப் பொழுது ஒரளவே சீனச் சிவப்பினைப் பாதித்தது.

சீனப் புரட்சி தோல்வியுற்ற கால கட்டத்தில் ஸ்டாலின் அனைத்து நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிதான் அத் தோல்விக்குக் காரணம் எனவும் மார்க்ஸிச கொள்கையற்ற டிராட்ஸ்கியின் அணுகுமுறைகளே காரணம் எனவும் குற்றம் சாட்டினார்.

ஸ்டாலின் சீன உறவு அணுகுமுறைகள் பிற்காலத்தில் சீனப் புரட்சிகளிலும் சிவப்புப் படை நடைமுறைகளிலும் வெற்றிகளை ஈட்டித் தந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், ருஷியப் பொதுவுடைமையினர்க்கு எதிராகச் சீன அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள் இடையில் குறிப்பிடத்தக்க காலத்திற்கு ருஷிய உறவினை அறுத் தெறிந்து விட்டது. முழுவதும் சீனச் சிவப்புத் தலைவர்களே படைகளையும் புரட்சிகளையும் முன் நடத்திச் சென்றனர். வெளி உதவி அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

மறைமுகமான போக்குவரவுகளும், மறைமுகமான உதவிகளும் அவ்வப்பொழுது சீனச் சிவப்புப் படைகளுக்கு ருஷியாவிலிருந்து கிடைத்து வந்தன. சீன மாணவர்கள் மாஸ்கோ சென்று கல்வி கற்றுத் திரும்பினர். மறைவாக சீனாவுக்குத் திரும்பி சீனப் புரட்சி வேலைகளில் ஈடு பட்டனர். ஆனால் வெளிப்படையான உதவிகள் எதுவும் கிடையாது.

ருஷிய உதவிகள் எதுவும் சீனாவுக்குள் ஊடுருவிச் செல்ல இயலாதவாறு பகைப் படைகள் சீனச் சோவியத்துகளை வளைத்திருந்தன. அதே நேரத்தில் அமெரிக்க உதவிகள் சியாங்கே ஷேக்கின் சிவப்பு ஒடுக்கு முறை ஆட்சிக்கு ஏராள மாகக் குவிந்து கொண்டிருந்தன. 1933-ல் 50,000,000 டாலர் அமெரிக்கக் கோதுமைக் கடன் நான்கிங் அரசுக்குக் கிடைத்தது ஓர் எடுத்துக்காட்டாகும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் நான்கிங்

அரசுக்கு வானூர்திகளையும், பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வெடிமருந்துகளையும் மிகப் பெரும் அளவில் விற்றுக் கொண்டிருந்தன. சிவப்பைச் சீனாவிலிருந்து ஒழிப்பதற்குத் தேவையான உதவிகள் அந்நாடுகளிலிருந்து கிடைத்தன நான்கிங் அரசுக்கு. அமெரிக்க விமானப் பயிற்சியாளர்கள், போர்ப் பயிற்சியாளர்கள் சீனாவுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் நான்கிங் படைகளுக்குப் பயிற்சி அளித்தனர். அமெரிக்கப் போர்விமானப் பயிற்சி பெற்றோர் நூற்றுக் கணக்கான சிவப்புச் சீன நகரங்களைக் குண்டு வீசித்தகர்த்தனர். இத்தாலி ஜெர்மானியப் பயிற்சியாளர்கள் தாங்களே முன்நின்று சிவப்புப் பகுதிகளில் குண்டுகளை வீசினர். இவ்வளவும் ஒப்பிடும் பொழுது ருஷியா சீனச் சிவப்புப் படைகளுக்கு உதவியது துளியுமில்லை எனலாம். முழுவதும் மக்கள் எழுச்சியே சீனச் சிவப்பின் வெற்றிக்கு முழு முதற் காரணமாக அமைந்தது. அந்த எழுச்சியை விளைவித்த தலைவர்களில் சிறந்தவராக விளங்கினார் மாசே-துங்.

மாசே-துங்கின் உறுதியான வெளிப்படையான் மார்க்சிச கொள்கைகளும், உழைப்பும் நாட்டுப்பற்றும் மனித அன்புடைமையும் அவரைச் சிவப்புச் சீனாவின் தலைமைக்கு மெல்ல மெல்ல அழைத்துச் சென்றன.

ஜப்பான் சீனாவின் பகுதிகளை விழுங்கியிருந்த பொழுது மாசே-துங் கூறினார்: "ஜப்பானின் நாடு பிடிக்கும் ஆசை நாள்தோறும் வளர்ந்து வருகிறது. அதனைத் தடுத்து நிறுத்திச் சீனாவைக் காப்பாற்றியாக வேண்டும். சீனாவின் எல்லா சக்தியும் ஜப்பானை விரட்டியடிக்க ஒன்றுபடுதல் வேண்டும். பொதுவுடைமைக் கட்சியைத் தவிர வேறு கட்சிகளும் சீனாவில் உள்ளன. கூமின்டாங் அரசும் வலிமையானது. அதனுடைய ஒத்துழைப்பு இல்லை எனில் வலிமை

குன்றிய எங்களால் ஜப்பானைப் புறங்காண முடியாது. எங்களுக்குள் உள்ள உள்நாட்டுப் போரினை நிறுத்திக் கொண்டு நாங்கள் கூமின்டாங் அரசுடன் சேர்ந்து ஜப்பானின் பிடியிலிருந்து சீனாவை விடுவிக்க வேண்டும் முதலில்.

''1935-ஆகஸ்டு முதலே சீனப் பொதுவுடைமைக் கட்சி மற்ற கட்சிகளை ஓரணியில் திரட்டிக் கூமின்டாங்கையும் அழைத்தது. ஆனால் அரசோ எங்களை அழிக்கவே முழு திறனையும் காட்டி வருகிறது.

''எல்லா கட்சிகளும் சீனாவைக் காப்பாற்ற எங்களுடன் நெருங்கி வருகின்றன. நான்கிங் படைகளும் அவ்வாறே எண்ணுகின்றன. அரசு மட்டும் வேறுபட்டு நிற்கின்றது.

''நாங்கள் வலியுறுத்தும் அடிப்படைக் கொள்கை யாதெனில் நாட்டினை அந்நியரிடமிருந்து விடுவிக்க வேண்டும். ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்து சீனாவைக் காப்பாற்ற தேசீயப் பாதுகாப்பு அரசாங்கத்தை உருவாக்குதல் முதல் கடமை. பொருளாதார முன்னேற்றத்தில் நாட்டினைச் செலுத்துதலும் வேண்டும். மக்களுக்கு உரிமைகள் வேண்டும்.

''அதனால் பாராளுமன்ற முறையில் உள்ள அரசாங்கத்தை எல்லாப் பிரிவு மக்களாலும் தேர்ந்தெடுத்த உறுப்பினரைக் கொண்டு அமைத்து ஜப்பானிடமிருந்து விடுதலை பெற்றிட வேண்டும். அத்தகைய குடியரசு அமையும் பொழுது அதற்குள் சீனச் சோவியத்துகளும் உள்ளடங்கி இருக்கும். நாங்கள் பாராளுமன்ற குடியரசு ஆட்சியை ஏற்றுக் கொள்வோம்.

''குடியரசு அரசாங்கச் சட்டங்களைச் சீனச் சோவியத்தின் பகுதிகள் ஏற்றுக் கொள்ள சன்யாட்சென்னின் மூன்று திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வர

வேண்டும். ஒன்று, சோவியத் ருஷியாவுடன், மற்றும் சீனாவைச் சமமாக ஒப்புக் கொள்ளும் நாடுகளுடன் கூட்டுறவு; இரண்டு, சீனப் பொதுவுடைமைக் கட்சியுடன் ஒத்துழைப்பு; மூன்று சீனத் தொழிலாளர் இனத்தின் கொள்கைகளுக்கு அடிப்படையான பாதுகாப்பு.

''இத்தகைய முறைகளுடன் கூட்டுறவுடன் அந்நியரை எதிர்த்தல் ஒன்றே சீனாவைக் காப்பாற்றும் வழியாகும். அதை விடுத்து எங்களுடன் போர் தொடர்ந்து கொண்டே இருந்தால் சியாங்கேஷேக்கைத் தகுந்தவாறு சந்திக்க எங்களாலும் முடியும்.''

மாசே-துங்கின் தெளிவான தூய்மையான கொள்கை அடிப்படையான அணுகுமுறைகளே சீனச் சோவியத்துக்கு வெற்றி தேடித் தந்தன. உலகத் தலைவராக அவர் உயர்ந்து நின்றார். உலகப் பேரேட்டில் ஒளிவீசி என்றென்றும் மங்காமல் திகழும் நம்பிக்கை நட்சத்திரமாக வாழ்கின்றார்.

மாசே-துங் கூறினார்:

''சீன தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றி என்பது உலகப் பொதுவுடைமைக் கொள்கையின் வெற்றியாகும். ஏனெனில், சீனாவின் ஆதிக்கங்களை வீழ்த்துதல் என்பது உலக ஆதிக்கச் சக்திகளை வீழ்த்துவதற்கு அடிப்படையாக அமையும். சீனா விடுதலை பெற்று உயர்ந்தால் உலகப் புரட்சியும் மிக வேகமாகப் பரவி வெற்றி பெறும். எங்களுடைய நாடு பகைவர்க்கு அடிபணிந்தால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்தவராவோம். தேசிய விடுதலை அற்ற மக்கள் ஆற்றுகின்ற புரட்சி உடனடியாக சோஷலிசத் துக்காக அல்ல. அது விடுதலைக்கான போர். நாங்கள் கொள்ளை போகின்ற நாட்டுக்குள் அடங்கிக் கிடந்து பொதுவுடைமையைப் பேசிக் கொண்டிருக்க இயலாது.''

அவருடைய எண்ணங்கள் வெற்றி பெற்றன. புரட்சி விளைந்தது.

சிவப்புக் கதிரவனின் ஒளி மலைகளின் மறைப்புகளைக் கடந்து நாடெங்கும் பரவிற்று.

தொழிலாளர்கள், உழவர்கள், உழைக்கும் இனம் ஒன்று திரண்டது. புதிய சமுதாயத்தை உருவாக்கிற்று. உலகப் பரப்பில் உயர்ந்த சமுதாயமாக ஒளி பெற்றது.

அதனைப் படைத்த பரந்து விரிந்த சீனாவின் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் மாசே–துங்கின் செழுமையான ஆட்சி 1949-ஆம் ஆண்டு சனவரி 21–ல் மலர்ந்தது.

உண்மையான புரட்சித் தலைவனான மாசே–துங் என்றும் வாழ்வார்.

## ‘டிங்செள’விலிருந்து ‘சாங்ஷா’வுக்கு

சூன் திங்களில் நம் சுவர்க்கத்துப் படைகள்
அடக்கிப் போட்டன ஊழல்காரர்களையும்
கொடுமையாளர்களையும்.

‘கானு’க்கு அப்பாலிருந்து
குவாங்க் குங் லூயியின் சீரிய தலைமையில்
நம் சிவப்புப் படையின் கிளை
முதலைகளையும் திமிங்கலங்களையும்
நீண்ட கயிறுகளால் கட்டிப் போட
செவ்வொளி பாய்ச்சுகின்றன.

கூனாறுக்கும் கூபேக்கும் நேராக
கியாங் ஷியை வெற்றி கொண்டு
பத்து லட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும்
கிளர்ந்தெழுந்துள்ளனர்.

உலக அளவிலான போராட்ட நெருக்குதல்களில்
ஒரு கடுமையான சூறாவளி விண்ணில் சுழன்றடிக்கிறது!

— மாவோவின் கவிதை, சூலை 1930

## ஆசிரியரின் பிற நூல்கள்:

**நாடகம்:** * **இன்பத்துள் இன்பம்** – தமிழ் வளர்ச்சித் துறையின் இரண்டாம் பரிசு பெற்றது. * **இரு நாடகங்கள்** – இன்பியலும் துன்பியலும். * **உதயகுமரன் காதல்** – தமிழ் வளர்ச்சித் துறையின் முதல் பரிசு பெற்ற ஆய்வு நாடகம். * **ஒரு நாடகம் நடை போடுகிறது** – சிறுவர் நாடகம். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முதல் பரிசு பெற்றது.

**புதினம்:** * **வா, நெஞ்சமே துணையாக வா!** * **பஞ்சம் பொழைக்க** – குறுநாவல் போட்டியில் அமுதசுரபியின் முதல் பரிசு பெற்றது. எம். ஜி. ஆர். அறக்கட்டளையின் சிறப்புப் பரிசும் பெற்றது. * **காட்டுக்கு எரித்த நிலா.** * **ஆனந்த நடனம்** – பாரத ஸ்டேட் பாங்கின் இரண்டாம் பரிசு பெற்றது. * **காலம் ஒருநாள் மாறும்.**

**சிறுகதை:** * **சூடினர் இட்ட பூ** – முதல் தொகுப்பு * **அழகுக்காக** – இரண்டாம் தொகுப்பு. தலைநகர் தமிழ்ச் சங்கத்தின் முனைவர் வ.சுப. மாணிக்கனார் நினைவுப் போட்டி முதல் பரிசு பெற்றது. * **பாலையில் பெய்த மழை** – நெடுங்கதைகள் தொகுப்பு. * **காகித ஓடம் !**– மூன்றாம் தொகுப்பு.

**கட்டுரை:** * **பேரறிவாளர் நேருவின் சீரிய சிந்தனைகளும் சிதைந்த கனவுகளும்** – ஆராய்ச்சி நூல். * **பாரதியார் காட்டிய பகுத்தறிவுப் பாதை** – ஆராய்ச்சி நூல். * **புரட்சித் தலைவன் மாசே–துங் நடந்த புரட்சிப்பாதை** – வரலாறு. * **நெல்சன் மண்டேலாவின் போராட்டக் களங்கள்** – வரலாறு. * **ரோம் நாட்டு மாமன்னன் மார்கஸ் அரேலியசும் திருவள்ளுவரும்** – சிறுவர் இலக்கியம். * **நெல்சன் மண்டேலா – சிறுவர்க்கு வரலாறு** – குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றது.

# போர்ப் பரணி பாடும் வீரமங்கையர்!

பகலின் முதல் ஒளி பரவுகின்ற போது
அணி வகுப்பு அரங்கத்தில்
ஐந்தடி உயரத் துப்பாக்கிகளைத்
தோள்களிலே தாங்கியவாறு
எவ்வளவு ஒளி பொருந்தியவர்களாகவும்
வீரமிக்கவர்களாகவும்
திகழ்கின்றார்கள் அவர்கள்!

சீன மண்ணின் மகளிர்
உயர் இலட்சியங்களை
நெஞ்சங்களிலே தாங்கியவாறு
போர்க்கள அணிவகுப்பினையே
காதலிக்கின்றனர்
பட்டாடைகளையோ ஆடம்பர
அணிகலன்களையோ அன்று!

— மாவோவின் கவிதை, *பிப்ரவரி* 1961